
JESUS LIVES
EVANGELICAL
MINISTRY



# தாழ்விலும் வாழ்விலும் இயேசு



சகோதரி. மாகிரட் இராஜேந்திரம்
அவர்கள்

# தாழ்விலும் வாழ்விலும்
# இயேசு!

# முகவுரை

அன்புக்குரிய வாசகர்களே!

இப்புத்தகத்தில் இடம்பெறும் சம்பவங்கள் ஒரு மனுஷனின் வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்கள், கஷ்டங்கள், சோதனைகள், முகங்கொடுக்கும் சவால்கள் அவனுக்கு உண்டாகும் ஏற்றதாழ்வுகளில் அம்மனிதன் திகைத்து தடுமாறும் வேளையில், தம்மை படைத்த தெய்வத்தை அவன் நோக்குவானானால், அவன் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை வேதாகம புருஷர்களின் வாழ்க்கை சரித்திரத்தோடு ஒப்பிட்டு எழுதப்பட்ட புத்தகமே "தாழ்விலும் வாழ்விலும் இயேசு".

எனது வாழ்க்கையில் நான் கடந்துவந்த பாதைகளின் அனுபவங்களையும் அக் காலங்களில் ஏற்பட்ட வாழ்வின் சுபீட்சமான காலங்களிலும் தாழ்வான நேரங்களிலும் என்னை அழைத்து என் மீது அன்பு காட்டிய உயிரோடிருக்கும் இயேசு சுவாமி, எப்படியாகத் தாங்கி நடத்தினார் என்பதை வெளிகாட்டும் முகமாக எழுதப்பட்ட இந்நூல், உங்கள் வாழ்க்கையிலும் ஏற்றதாழ்வுகளில் நீங்கள் மேற்கொண்டு நடக்கவேண்டிய விதிமுறைகளை எடுத்துக்காட்டி எம்பெருமானாகிய ஜீவிக்கும் இயேசு சுவாமிக்கு சாட்சியாக செயல்படுவதற்காக எழுதப்பட்ட இப்புத்தகம் உங்கள் வாழ்வில் தெய்வீக ஆசிர்வாதத்தை தர வேண்டும் என்று நான் பிராத்திக்கிறேன். அன்பான தெய்வம், அன்புக்காக காத்திருக்கும் தேவன், அன்பின் சொரூபியான இயேசு சுவாமி உங்கள் தாழ்விலும், வாழ்விலும் இருந்து தொடர்ந்து காத்து, வழிநடத்தி, ஆசிர்வதிப்பாராக.

தலைப்பு - தாழ்விலும் வாழ்விலும் இயேசு!

முதல் பதிப்பு - (தமிழில்) ஒக்டோபர் 2006

ஆசிரியர் - சுவி. கலாநிதி. மா. இ. இராஜேந்திரம் அவர்கள்.

பதிப்புரிமை - ஆசிரியருக்குரியது

பதிப்பாளர் - இயேசு ஜீவிக்கிறார் சர்வதேச சுவிசேஷ பணியகம்.

எழுத்து கோர்த்தல் - இயேசு ஜீவிக்கிறார் கணனி துறை.

தொடர்புகளுக்கு - இயேசு ஜீவிக்கிறார் சர்வதேச சுவிசேஷ
பணிமனை, 401, அளுத்மாவத்தை வீதி கொழும்பு 15.

T.P. 2522608,
FAX 2525695,
P.O.Box. No. 1044 Colombo.

# நீதியின் கிரீடம் வைக்கப்பட்டுள்ளது.

அருமையான தேவ ஜனங்களே!

பரிசுத்தவானாகிய ஸ்தேவானை கொலை செய்யும்போது சவுல் எனப்பட்ட வாலிபனுடைய பாதத்தருகே ஸ்தேவானுடைய வஸ்திரத்தைக் கழற்றி வைத்தார்கள். இந்தக் கொலையைச் செய்வதற்கு சவுலும் சம்மதமாக இருந்தான்.

(அப்போஸ்தலர் 7:58)

(அப்போஸ்தலர் 8:1) அக்காலத்தில் எருசலேமில் உள்ள சபைகளுக்குத் துன்பம் உண்டாயிற்று. சவுல் என்பவன் வீடுகள் தோறும் நுழைந்து புருஷர்களையும், ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய் காவலிலே போடுவித்து சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான். இந்த சவுல் (பவுல்) என்றால் தமிழ் ஆக்கத்தில் சிறுமை எனப்படும். இந்த சவுல் சிசிலியா நாட்டின் தர்சு பட்டணத்திலே பிறந்து ரோம பிரஜா உரிமை பெற்றவனாக இருந்தான். இவனுடைய பெற்றோர் எபிரேய பாஷை பேசும் பரிசேயர் எனப்படுவர். தர்சு பட்டணத்தில் பிறந்த படியால் கிரேக்க மொழியை நன்றாகப் பேசக்கூடியவனாக இருந்தான் 16 வயதானபோது, அவனது பெற்றோர் அவனை எருசலேமுக்கு அனுப்பிப் படிப்பித்தார்கள். சனகரீப் சங்கத்திலே பரிசேயனாக இருந்தவன். அதனால் தான் பரிசுத்த ஸ்தேவானைக் கொலை செய்யும்போது சம்மதம் தெரிவித்தான்.

அப்படியிருந்தும் கர்த்தருடைய பிள்ளைகள் மேல் சீறி சினங்கொண்டவனாக இருந்தான். கர்த்தருடைய சீஷர்களைப் பயமுறுத்தித் துன்பப்படுத்தி, இவர்களை அழிக்கும்படி தமஸ்குவில் உள்ள ஆலயங்களில் நிருபங்களை வாங்கிச் செல்லும்போது, அவன் வழிப்பயணத்திலே சடுதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. "சவுலே சவுலே ஏன் என்னைத்

துன்பப்படுத்துகிறாய்" என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன் ஆண்டவரே நீர் யார்? என்றான். அதற்குக் கர்த்தர் "நீ துன்பப்படுத்துகின்ற இயேசு நானே" முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்.

முள்ளில் உதைத்தால் அது நம்மையே கீறிவிடும் அல்லவா? மாட்டு வண்டிலில் மாட்டை உஷார்ப்படுத்த முக்கோணத்தடியால் மாட்டை தூண்டும்போது அது பின்னோக்கி உதைக்கின்றது. அவனுக்கு ஆபத்து உண்டாகின்றது. அதேபோல் முட்களில் உதைக்கும்போது, அவனது அவயவம் பாதித்து இரத்தம் வெளியேறுகிறது.

சவுலின்மேல் பட்ட ஒளி அவனைத் தரையிலே தள்ளியது சத்தத்தை மட்டும் கேட்க முடிந்தது ஆனால் ஒருவரையும் அங்கு காணாமல் அவனோடு போனவர்கள் பயந்து, திகைத்தார்கள். கண்கள் அடைபட்டவனாக கைலாகு கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டான். நடுங்கித் திகைத்தவன் ஆண்டவரே! நான் என்ன செய்யச் சித்தமாய் இருக்கிறீர்? என்றான். நீ செய்ய வேண்டியதை தமஸ்குவிலே சொல்லுவேன் நீ அங்கு கடந்துபோ என்றார்.

அனனியா மூலம் கர்த்தர் அவனுக்குச் சொல்ல வேண்டியதை, செய்ய வேண்டியதை உரைத்தார். அனனியாவுக்கும் சவுலைக் குறித்ததான பயம் இருந்தது ஏனெனில் ஏற்கனவே சவுலைப்பற்றி அறிந்தவனாயிற்றே. அதற்குக் கர்த்தர் நீ போ அவன் புற ஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாக இருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தின் நிமித்தம் எவ்வளவாய் பாடுபட வேண்டும் என்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்.

சவுல் என்பவன் பவுலாகி அனனியா மூலம் சுகத்தைப் பெற்று தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று ஆலயங்களில் பிரசங்கித்தான். பவுல் என்னும் புதிய நாமம் பெற்றவனாய் இயேசுவுக்கு ஜெய ஸ்தம்பம் நாட்டினான்.

(பிலிப்பியர்3:7) "ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்." என்று சொல்லும் நிலை உருவாகின்றது. பவுல் கர்த்தருக்காக பட்ட பாடுகள், வேதனைகள், சுவிசேஷத்தின் பிரயத்தனம் அவன் அவரிடம் பெற்ற கிருபையின் வரங்கள், தரிசனங்கள், அளவில்லாததாயிருந்தது. கடைசியில் ரோம மன்னன் நீரோவினால் கி.பி. 68 ஆண்டு சிரச்சேதம் செய்யப்பட்டான். ஆனாலும் (கலாத்தியர் 2:20) "பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் என்றான்."

மேலும் ஆண்டவர் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுபவர் சூரிய ஒளியை விட பிரகாசமான ஜோதி. பவுலை அந்த ஒளி 180 டிகிரி திசைக்குத்திருப்பியது. அவன் மூன்று தடவை மிஷனரிப் பயணத்தை மேற்கொண்ட வேளையில் கர்த்தருக்காக வைராக்கியமாக எழும்பி மக்களை தேவனுக்குள் கொண்டு வந்தான். 127 தேசங்களை கர்த்தருக்கென்று மனந்திருப்பிய பவுல் இங்கு அவன் பட்டதும், கேட்டதும், கண்டதும், அனுபவித்ததுமான பாடுகள் எண்ணுக்கடங்காதவைகள். அநேக துன்புறுத்தலுக்கான காரியங்களைக் காண வேண்டியதாயிருந்தது.

வீட்டுக் காவலில் வைக்கப்பட்டான் (House Arrest) அந்நாட்களில் House Arrest அதிகமாயிருந்தது. ஆனால் ஒரு கையில் விலங்கு போடுவார்கள். இவனைக் காவல் செய்யும் சேவகனுடைய கையில் மறு விலங்கு பூட்டப்பட்டிருக்கும் அவன் நடந்தால் இவனும் நடக்கவேண்டும். அவன் படுத்தால் இவனும் படுக்க வேண்டும். அதேபோல சேவகன் கையில்ஒரு விலங்கும் மறு விலங்கு பவுலின் கையிலும் பூட்டப்பட்டிருந்தது. அந்நாட்களில் வீடுகளை வாடகைக்கு எடுத்து இருப்பான். தன் ஊழியப்பணி முடியும்வரை பவுல் அந்தந்த தேசங்களில் இருந்தவனாக நிருபங்களை எழுதியதாக பதின்மூன்று குறிப்பில் காணக் கூடியதாயிருக்கிறது. இப்படிப்பட்ட இடைவெளிகளில் தனது ஊழியப் பணியை முடித்துக்கொண்டு வந்த இடங்களுக்கு வாழ்த்துச் செய்திகளையும், ஆலோசனைகளையும், வெளிப்பாடுகளையும்,

தரிசனங்களையும் அவனால் எழுத முடிந்தது. அவ்வேளையில் விலங்கு மறு கையில் போடப்பட்டிருக்கும் ரோம சேவகனுக்கு எப்படியாவது இயேசுவைப் பற்றிய சுவிசேஷத்தைக் கூறிவிடுவான். பக்கத்திலுள்ள சேவகன் இவனுடைய அனுபவங்களையும், ஆலோசனைகளையும் கேட்கும்படி கர்த்தர் உதவி செய்தார்.

வாடகை வீடுகளில் தங்கிய பவுல் சிறை பிடிக்கப்பட்டவனாகச் செல்லும் வேளையில் தன் உடைகளையும், புத்தகங்களையும், பாவிக்க வேண்டிய பொருட்களையும், அவன் ஆங்காங்கே விட்டுச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உருவாயிற்று. பவுல் இப்போது கொலைக் குற்றத்திற்கு உட்பட்ட கிரிமினல் நபராகக் காணப்படுகிறான். கைதியாக சிறைச்சாலையில் இருந்த வேளையில் குளிர் காலமாயிருந்தது. அந்த வேளையில் போர்த்திப் படுக்க கூட போர்வை அவனுக்கு இருக்கவில்லை. ரோமாபுரி நீரோ மன்னன் முன்னிலையில் குற்றவாளிகளின் கணக்கில் நிற்பவனாகப் பரிசுத்த பவுல் காணப்பட்டான். "11 தீமோத்தேயு 2:9 இந்த சுவிசேஷத்தின் நிமித்தம் நான் பாதகனைப் போல கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன். தேவ வசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை." தீமோத்தேயு பவுலுடைய கடைசி நிருபமாக இந்த மக்களுக்கு எழுதப்படுகின்றது. தீமோத்தேயுக்கு அறிவுரையாக எழுதப்படுகின்றது. தேவனுக்காகத் தீங்கு அனுபவிப்பது நன்று என்கிற ஆலோசனை ஆணித்தரமாக உருவாகின்றது.

அநியாயம் நிறைந்த அநீதியான நீரோ மன்னன் முன் ஒரு கொலைப் பாதகனைப் போல் இருக்கிறேன். இன்னும் சில நாட்களில் என் வாழ்வு சரிந்து விடும். கடைசிக்கட்டத்தில் இப்பொழுது நிற்கிறேன். என் வாழ்வு முடிந்து விட்டது. என் வாழ்வின் கடைச நிலைமையில் எழுதும் புஸ்தகம். கடைசியாக எழுதும் நிருபம் என்று கடைசி அந்தரத்தில் நின்று கொண்டிருக்கிறேன் என்று புலம்புகிறான்.

ஒரு நோயாளியின் நிலைமையை அவனது முழு சரீரத்தின் இரத்தத்தை சோதித்து, X - Ray, ஸ்கானிங் சகல மருத்துவ சிகிச்சை செய்தும் அந்த நபர் இன்னும் சில நாட்களுக்குள் மரித்து விடுவார் என்று வைத்தியர் கூறிவிடுவார். அப்போது தனது வாழ்வின் கடைசிக்கட்டத்தில் இனி எனக்கு ஒன்றுமே அவசியமில்லை என்று தன் உடைமை, தன் ஆஸ்தி, தன் சொத்து, பணம், வீடு, காணி, தோட்டம், துறவு, மந்தைகள் இப்படியானவைகளைத் தனக்கு வேண்டிய விரும்பியவர்களுக்கு உறுதிப்பத்திரத்தோடு உத்தரவாதமாக எழுதி வைத்து விடுவார்கள். தம் கையெழுத்தைப் போட்டு பத்திரமாகச் சேரவேண்டியவர்களுக்கு அதைச் சேரும்படி செய்வார்கள். ஆசையான உணவுகளை உண்ணும்படி உற்சாகப் படுத்துவார்கள். இவையாவும் உலக நடவடிக்கையாகும். உறவினர்கள் அறிந்து ஓடி ஓடிப் பார்க்க வருவார்கள். இறந்து விடுவார் என்ற அறிவித்தலை உறவினரே செய்து விடுவார்கள். தன் சந்தானம் இல்லாதவர்கள் அனாதை விடுதிகள், ஆஷ்ரமங்களுக்கு, ஆலயங்களுக்கு தமது சகல உடமைகளையும் எழுதி வைப்பார்கள் ஏனெனில் கடைசிக்காலத்தில் புண்ணியமாகப் போய்விட வேண்டும் என்பதற்காக. சமூக சேவைகளுக்கு எழுதி வைப்பார்கள். சிலர் பரம்பரை வாழட்டும் என்று எழுதி வைப்பார்கள்.

(11 தீமோத்தேயு 2:9) " இந்தச் சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகனைப் போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன்; தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை." பாதகனைப் போல் கட்டப்பட்டு இருக்கிறேன் தேவ வசனமோ கட்டப்படவில்லை. தேவ ஊழியர்களாளோ, தேவ பிள்ளைகளாளோ யாராலும் தேவ வசனத்தைக் கட்ட முடியாது. வசனத்திற்கு விலங்கு கயிறு, சாங்கிலி போட்டும் கட்ட முடியாது. எந்த ஊழியனையும் நீங்கள் கட்ட முடியாது.

(11 தீமோத்தேயு 4:4,5) " சத்தியத்திற்கு செவி விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும். நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி,

சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று."

இப்படியாக தன் உடன் ஊழியனுக்கு தன் கடைசி வாழ்க்கை நேரத்திலும் வைராக்கியமான ஆலோசனைகளைச் சொல்வதைப் பார்க்கமுடிகிறதாயிருக்கிறது. சத்தியத்திற்குச் செவியை விலக்கி கட்டுக்கதைகளைக் கேட்கும் காலம் வரும் ஜனங்கள் அதிலே சார்ந்து கொள்வார்கள். மெய்யைக் கூறும்போது கசப்பு, வெறுப்பு. கட்டுக்கதைகளோ காதுக்கு இனிமையாயிருக்கும் கட்டுக் கதைகளை நாம் நம்புகிறோம். காவியங்களைக் கண்டு கண்ணீர் வடிக்கிறோம். கட்டுக்கதைகளை, நாடகங்களை, நடிப்புகளை வடித்து கட்டுக்கதைகளைக் கேட்க இரவு பகலாக பெரிய கூட்டம் இருக்கிறது. அந்தக் கதைகளிலேயே சாய்ந்து கொள்கின்றனர். இப்படியான காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம் உலகமும், காலமும்,நேரமும் கடந்து போகின்றது. ஆனாலும் சத்தியத்தைப் பேசும் இடத்தில் மக்கள் கூடமாட்டார்கள். கசப்பும், வெறுப்புமாக ஓடுவார்கள் சத்தியத்திற்கு சாட்சியான வாழ்க்கையையும் பார்க்க முடியாது.

பரிசுத்த வாழ்க்கையை முன்னிட்டு அதன்படி நடந்து பதின்மூன்று நிருபங்களையும் எழுதி, தனது ஊழியத்தில் மிஷனரிப் பயணங்களை செய்த பவுல் தன் எதிர்கால வாழ்வை முன்னோக்கியும், பின்னோக்கியும் பார்க்கிறார். ஏன்?

(11 தீமோத்தேயு 4:6,7) "ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்; என் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்."

தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. அதனால் பவுல் பின்னோக்கியும், முன்னோக்கியும் பார்க்கிறார். இனி என்ன நடக்கப்போகிறது என்று சிந்திக்கிறார். இயேசுவுக்கென்று நல்ல

போராட்டத்தைப் போராடினேன். நன்மையான காரியங்களுக்காகப் போராட்டத்தைப் போராடினேன். தீமையான காரியத்திற்காக அவன் போராட வில்லை. தேவனுக்கென்று போராடி, போராடிய ஓட்டத்தை ஓடி முடித்தான். தேவனுக்கான விசுவாசத்தைக் காத்துக் கொண்டான். விசுவாசக் குறைவற்றவனாய் பரிபூரண விசுவாச வாழ்வை வாழ்ந்து காட்டினான். பந்தயப் பொருளுக்கு ஓடுவதைப் போல் வழி தப்பாமல், ஒரே சத்திய மார்க்கத்தில் ஓடினான்.

(Race Tract) வழி விலகி ஓடினால் நீ முன்னாக ஓடி வந்தாலும் பந்தயப் பொருள் கிடைக்காது. பவுல் கிரீடம் பெற ஓடினான். சத்திய மார்க்கத்தினுள் சீராக, நேராக ஓட வேண்டியதாயிற்று. தேவையற்ற அசத்திய வேலைக்குள் பிரவேசிக்கவில்லை. அநாவசியமான கதைகளுக்கு இடம் வைக்காது பந்தயப் பொருளைப்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், எதிர்பார்ப்புடன் ஓடினான். தனக்குக் கொடுத்த ஊழியப் பாதையில் ஓடினான்.

உலகமோ அடுத்த வீட்டுக்காரன் என்ன செய்கிறான்? எங்கே போய் வருகிறான்? என்ன பேசுகிறான் என்று ஒட்டுக் கேட்பார்கள். என்ன குடிக்கிறான்? என்ன சாப்பிடுகிறான்? என்ன உடுக்கிறான்? இதுதான் சிலருக்கு வேலையாக இருக்கின்றது. அடுத்த நபரின் காரியங்களிலே அக்கறையாக இருப்பான். ஆனால் அவன் வீட்டுக்குள் செழிப்பு இருக்காது. நாம் நமக்குத் தந்த கடமையை செய்ய வேண்டியவர்களாக தேவனுக்குள் உண்மை உத்தமத்தோடு ஓடும்படி எம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பவுல் சரியான பாதையில் ஓடியது போல் ஒவ்வொருவரும் ஓடக்கடவோம்.

விசுவாசத்தைக் காத்துக் கொண்டான். எந்த நாளில் தமஸ்கு சாலையில் இயேசுவின் சத்தத்தைக் கேட்டானோ? கடவுளின் அறிமுகத்தை எப்போது பெற்றானோ, அன்றிலிருந்து தன் விசுவாச ஓட்டத்தைக் காத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தான்.

அருமையான விசுவாசியே! விசுவாசத்தைப் பறிப்பதற்கு பரீட்சை பார்ப்பதற்கு சத்துரு கங்கணம் கட்டிக்கொண்டு வருவான். அதற்குக் காரணத்தை உண்டு பண்ணாதே. தேவ பிள்ளைகளுக்கு நடப்பது எல்லாம் நன்மைக்கேதுவாக நடக்கும். பயப்படாதே, கலங்கிடாதே இவ்வுலகில் காண்பதும், நடப்பதும் மாயையே. இவ்வுலக வாழ்வு பொய்யானது, அநியாயமானது. இவ்வுலகில் இப்படியாக ஓடும் நாம் முன்னோக்கிப் பார்த்து மறு உலக வாழ்வைச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். வருங்கால உலகில் பிரவேசிக்க இக்கால துயரங்களுக்கு முன்னால் நடக்க இருக்கும் காரியத்திற்கு போராட கற்றுக் கொள்ளும் காரியங்களை கவனமாய்க் கவனித்துப் போராட வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி இருத்தல் அவசியம், அப்படியே இருக்க வேண்டும்.

விசுவாசத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். இம்மட்டாக உங்களை விசுவாசப் பாதையில் நடத்தினவரை நினைத்து, தெரிந்து நடக்க வேண்டும் அப்பொழுது அவர் உங்களைக் காத்துக் கொள்வார். எமக்குப் பல பிரச்சினைகள் வரும்போது, ஏன் எனக்கு மீண்டும் மீண்டும் பிரச்சினைகள் உருவாகிக் கொண்டே போகின்றது என்று நாம் நினைத்து சிந்திக்க வேண்டும். பற்பல தடவைகள் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

1) ஏன் உங்கள் தூதர்கள் எங்கே போய்விட்டார்கள்?

2) ஏன் உங்கள் பணிவிடை தூதர்கள் போய்விட்டார்கள் என்று சிந்திக்க வேண்டிய கட்டம் உருவாகின்றது. விசுவாசத்தைக் காத்துக் கொண்ட பவுலை வெளிச்சம் இல்லாத சிறைக் குழிக்குள் போட்டுவிட்டார்கள். பயங்கரக் குளிர், போர்வை ஏதும் கிடையாது, வேதனை உண்டாகும் வழிகளில் போகின்றார். என் வாழ்வு இதோடு முடிவடைகின்றது என்று சிந்தித்திருக்கிறார். தேகத்தை விட்டுப்பிரியும் காலம் வந்தது என்கிறார் அல்லவா? இனி எனக்கு மரணம் தான் என்று முன்னோக்கிப் பார்க்கிறார்.

நான் எந்தக் குற்றமும் புரியவில்லை. அநீதியின் தீர்ப்புக்கு முன் நிற்கின்றான். ஆனால் விசுவாசத்தைக் காத்துக்

கொண்டதினால் எனக்கு நீதியின் கிரீடம் உண்டு என்பதினால் முன்னோக்கிப் பார்க்கிறான். நல்ல போராட்டத்தைப் போராடி முன்னோக்கினான். விசுவாசம் குறையவில்லை ஆகவே எனக்கு நீதியின் கிரீடம் உண்டு என்ற முழுமையான விசுவாசம் உண்டானது. நீயுள்ள நியாயாதிபதி நீதியின் கிரீடத்தை எனக்குத் தருவார் என்ற முழு நம்பிக்கையில் முன்னோக்கிப் பார்த்தார்.

அநீதியான நீரோ மன்னன் முன் குற்றமற்ற நான், அநீதத்தின் தீர்ப்புக்கு முன், மரண தண்டனை நியதி கொடுக்கும் நீரோ ராஜாவின் முன் நிற்கிறேன். அநீதியான ராஜாவின் அநியாய விசாரிப்பில் தலை சிரைச்சேதம் செய்யப்படப் போகிறது. என் தலையை அவன் சீவி விடுவான். மாமிச தலை போகட்டும் ஆனால் என் தேவன் எனக்கு நீதியின் கிரீடத்தைச் சூட்ட என் தலையை அங்கிகாரம் பண்ணுகின்றார் என் நீதியின் தேவன் நியாயத்தை விசாரிப்பார்

(11 தீமோத்தேயு 4:8) " இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே எனக்கு அதைத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். "

பரலோக நீதிபதி எனக்குச் சரியான நியாயத்தை வழங்குவார் என்ற விசுவாசம் பவுலுக்குள் இருந்தது. ஆகவே கி.பி. 68ல் நீரோ மன்னன் முன் பவுலின் தலை வேறாகவும் முண்டம் வேறாகவும் வாளால் வெட்டப்பட்டது. தேவனுக்கென்று இரத்த சாட்சியாக மரித்தபின் நீதியின் கிரீடம் தேவனால் சூடப்பட்டது.

நீதியின் கிரீடம் அநேகம் உண்டு. எனக்குமட்டுமல்ல அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். அவருடைய பிரசன்னமாகுதலை எதிர்ப்பார்த்து, அவருடைய வருகைக்குக் காத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது.

## தேவனுடைய வருகையை நினைத்தீர்களா?

(வெளிப்படுத்தல் 22:17) "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்: கேட்கிறவனும் வா என்பானாக தாகமாயிருக்கிறவன் வரக்கடவன். விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன். "

மணவாட்டி மணவாளனுக்குக் காத்திருப்பதைப் போல் ஒரு தொழிலுக்கு விண்ணப்பம் (Application) அனுப்பிவிட்டு காத்திருப்பதுபோல, இயேசுவின் வருகைக்கு காத்திருத்தல் அவசியம். நாம் எதிர்நோக்கும் சிறப்பான மகிமையின் கிரீடம் அவருக்குக் காத்திருப்பவர்களுக்கு கொடுக்கப்படும். பல பக்தர்கள், சித்தர்கள் அதற்காக காத்திருந்தார்கள்.

ஆனால் இவ்வுலகில் அநேக மதிப்புக்குரியவர்கள், ராஜாக்கள், பிரபுக்கள், விஞ்ஞானிகள், பண்டிதர்கள், அதிகாரிகளான மனுக்குலம் மேடை ஏறியது. தற்காலிக மேடையில் நின்று மறைந்து விட்டார்கள். நம் உற்றார், பெற்றார், சகோதரர்கள், அன்புக்குரியவர்கள் உறவினர்கள், நண்பர்கள் மறைந்து விட்டார்கள். அவர்கள் மறைந்தவர்கள் மறைந்தவர்கள் தான். காலம் சென்றவர்கள் சென்றவர்கள் தான். ஆனால் நம்முடைய தேவனோ மறைந்தவரல்ல. மறையப்போகிறவருமல்ல. மாறுகிறவருமல்ல. எமது வருகைக்குக் காத்திருக்கிறார். ஆனாலும் அவருடைய வருகைக்கு நாம் காத்திருக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

உலக மக்களுக்கு இயேசுவின் வருகையைப் பற்றிய யோசனை, சிந்தனை, கவலை, அக்கறை எதுவுமே கிடையாது. ஆனால் எமக்கு அன்புக்குரியவர்களுடைய பிறந்த நாள், பிள்ளைகளுடைய பிறந்த நாள், எப்போ விடுமுறை கிடைக்கும் எங்கே போகலாம்? என்ன செய்யலாம்? எதிர்காலத்தையிட்டு திட்டமிடல் இப்படிப் பற்பல உலகம் கொடுக்கும் சிற்றின்ப

வலைக்குள் ஓடும் ஞாபகம் தான் உண்டு. ஆனால் இயேசுவின் வருகை எப்படியாயிருக்கும் என்று சற்றேனும் சிந்திக்க முடியவில்லை. உங்களுக்கு முன் மரணம் என்று ஒன்று உண்டு என்பதும் ஞாபகம் வரமாட்டாது. ஆனால் ஆலயத்துக்குள் பிரசங்கியார் காரசாரமாக உபதேசம் செய்து உள்ளத்திற்குள் பூரிப்பை உண்டாக்கும் வசனம் பேசப்படும் போது மட்டுமே உள்ளத்தில் எழுப்புதல் உண்டாகும் வீட்டுக்குப் போனால் பழைய குருடி கதவைத் திறவடி என்ற போராட்டம். உலகில் அலையும் மனிதனே ஆண்டவர் அழைக்கும் போது அவர் சத்தம் கேட்டு உடனே ஓடி வா.

அருமையான தேவ பிள்ளையே! ஆவியும் மணவாட்டியும் வா என்பதினால் மணவாட்டி தன்னை அலங்கரிக்க வேண்டியவளாக இருக்கிறாள். பரிசுத்த அலங்காரத்துடனே சேவிப்பீர்களாக. அவர்களுக்கு மட்டுமே நீதியின் கிரீடம் கிடைக்க வாய்ப்புக் கொடுக்கப்படும். தேவனுடைய வருகைக்குக் காத்திருக்காதவர்களுக்கு என்ன கிடைக்கப் போகின்றது? அக்கினி கடல் நித்திய ஆக்கினை முன்னால் உண்டென்பதை மறந்து போக வேண்டாம்.

(தீத்து 2:10-13) தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருந்து எதிர்த்துப்பேசாமல், எல்லாவற்றிலும் பிரியமுண்டாக நடந்துகொள்ளவும், திருடாமலிருந்து, சகலவிதத்திலும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் புத்தி சொல்லு. ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. மகிமையின் பிரசன்னம் அவருடைய இரட்சிப்பு ஆசீர்வாதம் இயேசு சிலுவையில் அறையப்பட்டாலும் மரித்து

உயிர்த்து மீண்டும் வருவார் என்பவர்களுக்கு அவர் பிரசன்னம் மகிமையாய் இருக்கும். இரட்சிப்பைக் கடைசி வரை காத்துக் கொள்ளல் அவசியமாகும்.

## உலக லௌகீகம் உலக சிந்தை, உலக மாம்சம்

(தீத்து 3:5,6) " நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்."

" தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக, "

தேவ கோபங்களுக்கு இடம் கொடுக்காதவர்களாக உங்களை பேணிக்காத்துக்கொள்ளுங்கள்.

"(கொலோசயர் 3:4) நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்."

சிற்றின்பங்களை நாடாது பேரின்ப வெள்ளமாகிய ஜீவதண்ணீராகிய இயேசுவினிடம் சேருங்கள். பூலோக சிற்றின்பத்தை நாடிய சதாம் உசைன் இன்று எங்கே? அத்தனை புகழ் கொண்ட சதாம் உசைனுக்கு என்ன நடந்தது? மலமும் ஜலமும் ஒரே படுக்கை ஒரே குழிக்குள் என்பதை மறந்து போகக்கூடாது.

(கொலோசெயர் 3:2) "பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்."

"(வெளிப்படுத்தல் 19:6-8)" அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், ஒரு சத்தமுண்டாகி:

அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார்."

" நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். "

" சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே. "

கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார் ராஜாதி ராஜனை வரவேற்க மணவாட்டி சபை ஆயத்தமா? சிங்காசனத்தில் வீற்றிருக்கும் இயேசுவின் வருகைக்காக மணவாட்டி ஆயத்தமாக தன் நீதியின் வஸ்திரம் மேன்மையாக சுத்தமும் பிரகாசமுமுள்ள மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது. அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே. நீதியின் கிரீடமும், நீதியின் வஸ்திரமும் அவர் வருகையிலே மணவாட்டி சபையில் காத்திருப்போருக்கு அளிக்கப்படும் என்பது உறுதி.

(ரோமர் 1:17) "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவ நீதி விசுவாசத்திற்கென்று அந்த சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகின்றது."

சுவிசேஷகம் தேசத்திற்கு நீதியைச் சரிக்கட்டவேண்டும். நீதியே சுவிசேஷம். சுவிசேஷகமே நீதியாகும்.

ஆமென்!!!

# இயேசுவின்

# அச்சடையாளங்கள்.

தேவன் விசுவாசிகளுக்கு ஆறுதல் அளிப்பது, தேவ வார்த்தையினால். இந்த தேவ வார்த்தையை பேசும்படியாக நல்ல உத்தம ஊழியர்களை தேவன் அழைக்கிறார். நாடு சுதந்திரம் அடைந்தும், தேசத்தில் எழுப்புதலைக் காண முடியவில்லை. ஏன் ஆன்மீக நிலை மோசமானபடியால் எழுப்புதல் உருவாகவில்லை. அமெரிக்கா தேசம் வேதாகமப் புஸ்தகத்தில் எழுதப்படவில்லை. ஆனால் இந்து தேசமாகிய இந்தியா எழுதப்பட்டுள்ளது. நாளுக்குநாள் வட இந்தியாவிலே எழுப்புதலைக் காணமுடிகின்றது. அநேகர் தினம்தினம் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்கின்றார்கள். தேசத்திற்கு ஜெபிக்கும்படியாக ஒரு கூட்ட ஜெபக்குழு அவசியமானதாக இருக்கிறது.

அருமையான வாசக நேயர்களே!

ஆதியிலே சபைகளை அழிக்கும்படியாக புறப்பட்ட பவுலாகிய சவுல் சபையையே கட்டும்படியாக பவுலாகிய புதிய நாமம் பெற்று 127 இந்து தேசங்களில் கர்த்தருக்கென்று ஜெயக்கொடியை ஏற்றினான், பதின்னான்கு நிருபங்களை பின் சந்ததி வாசித்து, யூகித்து, கிரகித்து தமது ஆலோசனைகள் மற்றவர்கள் அநுபவிக்கும்படி உதவியவன் இந்தப்பவுல்.

தமஸ்குவின் சாலையில் ஆண்டவரின் சத்தம் கேட்டு முள்ளில் உதைப்பது உனக்குக் கடினமாமே என்றபோது, 1) நீர் யார் என்றான் 2) நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என இரு கேள்விகள் ஆண்டவரிடம் பவுல் கேட்டான். தேவ சித்தம் என்ன என்பதை யூகிக்க முடிந்தது. தேவனைத் துன்பப் படுத்தியவன், சீஷர்களை துன்பப்படுத்தியவன், கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தியவன் இன்று தேவனை தமஸ்குவின் சாலையிலே சந்தித்ததின் பிரதிபலனாக விசுவாசம் என்னும் உணர்வைப் பெற்றான்.

(கலாத்தியர் 1:23,24) "முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே, தான் அழிக்கத் தேடின விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறான் என்பதை மாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து, என்னைப்பற்றித் தேவனை மகிமைப் படுத்தினார்கள்."

எப்படியெனில் தேவனை அவன் உடனடியாக ஏற்றுக் கொண்டான். சென்ற இடமெல்லாம் தேவனை மகிமைப் படுத்தினான்.

(யாத்திராகமம் 21:2-6) " எபிரேயரில் ஒரு அடிமையை கொண்டாயானால், அவன் ஆறு வருஷம் சேவித்து, ஏழாம் வருஷத்திலே ஒன்றும் கொடாமல் விடுதலை பெற்றுப் போகக்கடவன்."

" ஒன்றிக்காரனாய் வந்திருந்தானானால் ஒன்றிக்காரனாய்ப் போகக் கடவன்; விவாகம் பண்ணினவனாய் வந்திருந்தானானால், அவன் பெண் ஜாதி அவனோடே கூடப் போகக்கடவள்."

" அவன் எஜமான் அவனுக்கு ஒரு பெண்ணை விவாகம் செய்து கொடுத்தும், அவள் அவனுக்கு ஆண் பிள்ளையாவது பெண் பிள்ளையாவது பெற்றும் இருந்தால், அந்தப் பெண்ணும் அவள் பிள்ளைகளும் அவள் எஜமானைச் சேரக்கடவர்கள்; அவன் மாத்திரம் ஒன்றியாய்ப் போகக்கடவன்."

"அந்த வேலைக்காரன்: என் எஜமானையும் என் பெண் ஜாதியையும் என் பிள்ளைகளையும் நேசிக்கிறேன்; நான் விடுதலை பெற்றுப் போக மனதில்லை என்று மனப்பூர்வமாகச் சொல்வானானால்,"

" அவன் எஜமான் அவனை நியாயாதிபதிகளிடத்தில் அழைத்துக் கொண்டுபோய், அவனைக் கதவின் அருகேயாவது கதவு நிலையின் அருகேயாவது சேரப்பண்ணி, அங்கே அவன் எஜமான் அவன் காதைக் கம்பியினாலே குத்தக்கடவன்; பின்பு

அவன் என்றைக்கும் அவனிடத்திலே சேவித்துக் கொண்டிருக்கக் கடவன். ”

மனைவி பிள்ளைகளை விட்டுவிட்டு ஒன்றியாய்ப் போ என்றால் தற்காலப் புருஷன்மார் ஓட்டமாகவே ஓடி விடுவார்கள். இது தான் நல்ல தருணம் குடும்பப் பாரம், குடும்பப் பொறுப்பு வேண்டவே வேண்டாம் என்று ஒரே பாய்ச்சலில் ஓடிவிடுவார்கள். தப்பினேன் பிழைத்தேன் என்று ஓட்டமாய் ஓடிவிடுவார்கள்.

ஆனால் நல்ல மணவாளன் ஒருபோதும் அப்படிச் செய்யவே மாட்டான். தன் எஜமான், தன் மனைவி, தன் பிள்ளைகள் என்ற பொறுப்புடன், பொறுமையுடன் சகல பாடுகளையும் சகித்து தேவனுக்குள் அன்பு கொண்டவனாக தேவன் அவனுக்குள்ளிருப்பார். தேவ வல்லமை அவனுக்குள் சங்கமமாகிறதைக் காணமுடியும்.

எஜமானை விட்டுப்போக மாட்டேன் இவன் என் அடிமை என்று காதிலே குத்தின அடையாளம் இவன் யார் என்பதைக் குறிக்கும் அடையாளமாக இருக்கிறது. இவன் இன்னாருக்குச் சொந்தமான அடிமை. இந்த அடையாளம் இட்டவன் அவருக்கு சொந்தமானவன் என்பதைக் குறிக்கும். இந்த அடிமை ஊருக்குள் கடை தெருவிற்குள் அலைந்து திரியும்போது இவன் இன்னான் என்பதை போடப்பட்டிருக்கும் அடையாளம் அவன் அடிமை என்பதைக் காட்டிக் கொடுக்கும். இவன் இந்த எஜமானுக்குக் கீழ் வேலை செய்பவன் இவன் அந்த எஜமானுக்குக் கீழ் வேலை செய்பவன் என்று அடையாளம் காணமுடியும். எஜமானுக்குக் கீழ் இருப்பவன் நேச அடிமை (Love Slave) என்று அழைக்கப்பவான். தன்னை எஜமானுக்கு ஊழியம் செய்யும்படி முழுமையாக மனப்பூர்வமாக தன்னை விட்டுக் கொடுத்து விட்டவன்.

இப்படி ஊழியம் செய்பவர்களை சிலர் கலக்கி விடுவார்கள். பரிசுத்த பவுல் கலாத்திய சபைக்கு நிருபங்களை எழுதும்போது, தேவ வசனத்திற்கு அடங்கி நடக்கவேண்டியது அவசியம் என குறிப்பிடப் படுகிறது. அப்பொழுது சில யூத மார்க்கத்தார்

எருசலேமில் இருந்து கலாத்திய சபைக்கு வந்து சத்தியம் இப்படியாய் இருக்கிறது என்று விருத்தசேதனத்தைப் பற்றிக் கூறி நாம் எல்லாருமே விருத்தசேதனம் பெற்றவர்கள். நீங்கள் அதற்கு உட்படாதவர்கள் எனக்கூறி அங்கு ஒரு கலக்கத்தை உண்டு பண்ணினார்கள். இவர்களுக்குள் கலக்கம் உண்டானது. நீங்களும் கட்டாயம் விருத்தசேதனம் பெற வேண்டும் எனக்கூறிவிட்டனர். இதைச் செய்தால்தான் உண்மையான கிறிஸ்தவர்கள் என்று உங்களால் கூறமுடியும். ஆகவே அவர்கள் இக்காரியத்திற்கு ஒப்புக் கொடுத்து விட்டனர். இது தேவனுடைய அடையாளம் என குறிப்பிட்டனர். பதின்மூன்று நிருபங்களை எழுதிய பவுல் கலாத்திய சபைக்கு எழுதிய நிருபத்திலே கலாத்திய சபையாருக்கு மட்டுமே தேவனை ஸ்தோத்தரிக்கிறேன் என எழுதவில்லை. காரணம் என்ன? இவர்கள் தேவ வசனத்தை விட்டு ஒதுங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டு வந்தனர் சத்தியத்தைப் புறம்பாக்கினார்கள். ஆகவே பவுல் இப்படியாகக் கூறுகின்றான்.

(கலாத்தியர் 6:15) "கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம்." வேறு எதுவும் அவசியமில்லை எனக்கு.

(கலாத்தியர் 6:17) "இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்."

இயேசுவின் அடையாளங்களை பவுல் தன் வாழ்க்கையிலே அநுபவித்தவனாக இருந்தான். கிறிஸ்துவை பவுலுக்குள் காணமுடிந்தது. எப்படியெனில் அச்சடையாளங்கள் மூலம் கிறிஸ்துவிற்கு மகிமை செலுத்தினான். அவனுடைய அடையாளங்கள் அத்தனையும் தன் எஜமானுக்கு உரியதென மேன்மை பாராட்டக் கூடியதாக இருந்தது.

மிருகங்களுக்குக் குறியிடுகிறோம்

பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேட உடை

வழக்கறிஞருக்கு வித்தியாசமான உடை

பாதுகாவலர், மெய்க்காப்பாளருக்கு வித்தியாசமான உடை

விமான ஓட்டிக்கு வித்தியாசமான உடை

கப்பலோட்டிக்கு வித்தியாசமான உடை

இப்படி அடையாளம் கொண்டவர்களை இவர்கள் இன்னார் என்று அடையாளம் காண முடியும்.

பண்டைக்காலம் இப்படியாகப் பேசுகின்றது. உதாரணமாக:- இரண்டு கிராமங்களுக்கு இடையே குத்துச் சண்டைபோடுவார்கள். தோல்வி அடைந்த கிராமம் வெற்றி அடைந்த கிரமத்திற்கு அடிமையாக வேண்டுமாம். இப்படி அடிமையான கிராமத்திலே கிராமத்தலைவனை அடிமையாக ஒருவன் வாங்கி விட்டால், அதிக பணம், கிரயம் கொடுத்து அந்தக் கிராமத்தலைவனை அடிமையாக்கி விடுவார்கள் அவனோ வாட்ட சாட்டமான சரீர அமைப்புக் கொண்ட பராக்கிரமசாலியைப்போல் இருப்பான். பராக்கிரமமான உடல் கட்டு அவனது சரீரத்தைப் பார்த்தால் மற்றவனைக் கொன்றுபோடும் நிலையில் அவன் சரீர அமைப்பு இருந்தது.

அவனை விற்பதற்கு கிரயம் பேசுகிறார்கள். பலர் வந்து ஏலம் பேசி, விலை பேசினாலும் அவனை வாங்க முடியாதபடி சத்தம் போடுவான். எப்படியெனில் என் கைகளை கால்களை அவிழ்ப்பீர்களானால் உங்களைக் கொன்று போடுவேன் என்று தர்க்கம் பண்ணுவான். நான் அடிமை இல்லை அடிமையாகப் போவதுமில்லை. இப்போ என் கைகளையும், கால்களையும் கட்டியிருப்பதால் அமைதியாக இருக்கிறேன். சந்தையில் அடிமைகளை வாங்க வருபவர்களுக்கு இப்படியாகக் கூறுவான்.

என் கைகளின் கட்டையும், கால்களின் கட்டையும் அவிழ்க்க வருகிறவனை கொலை செய்து விடுவேன் என்று சத்தமிட்டான். அதனால் பயந்து ஒருவருமே அவனை வாங்க

முன்வரவில்லை. அடிமை என்று இவனை பணம் கொடுத்து வாங்கியவனுக்கோ பெரிய தலைவலி, கோபம். ஏனெனில் இவனை விற்க முடியாமல் இருப்பதினால் சினம் கொள்கிறான். அவனை வாங்க வரும் ஒவ்வொருவரையும் பார்த்து இப்படியாக சத்தமாய்க் கத்துவான். வாங்கியவனோ அவனை விற்க முடியாமல் இருந்தான். எஜமான் சத்தம் போடாதே, பேசக்கூடாது என்றாலும் அவன் சத்தமாய்ப் பேசுவான். யாருமே கிட்ட வர முடியாத நிலையில் இருந்தார்கள். எஜமான் அவனை தொடர்ந்து சவுக்கால் அடித்தான்.

அப்போது அவ்வழியாக ஒரு ஐசுவரியவான் வந்தான். ஏன் இப்படியாக அவனை அடிக்கிறாய் என்றான். நடந்த சம்பவங்களை எஜமான் கூற ஆரம்பித்தான். அப்போது ஐசுவரியவான் நான் அவனை வாங்குகிறேன் என்ற போது ஐயோ! நீங்கள் இவனை வாங்க வேண்டாம். உங்களையும் அவன் கொன்றுவிடுவான், உங்களுக்கும் சேதம் விளைவித்து , ஆபத்தை உண்டாக்குவான். அதனால் நீங்கள் அவனை வாங்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டான்.

ஐசுவரியவான் பரவாயில்லை. எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுத்து நான் அவனை வாங்கிக் கொள்கிறேன் என்றான். அதை அடிமையானவன் கேட்டுக்கொண்டிருந்தான். பணத்தை ஐசுவரியவான் கொடுத்து, எஜமான் பணத்தை வாங்கினபோது, ஐசுவரியவான் முதலில் கால் கட்டை அவிழ்த்து விட்டீர்கள், இனி கைகளை அவிழ்த்துப் பாருங்கள் என்ன நடக்கும் என்பதைக் கண்டு கொள்வீர்கள். என்று சத்தமாகக் கத்தினான். கைக்கட்டின் கடைசி முடிச்சை அவிழ்க்கும்போது ஐசுவரியவான் அடிமையைப் பார்த்து இவ்வளவு பணம் கொடுத்து வாங்கிய உன்னை நான் அடிமையாக்கிக் கொள்ளப்போவதில்லை. இன்றிலிருந்து நீ சுதந்தரவாளி, சுயாதீனன். நீ எங்கேயும் போகலாம், எங்கேயும் சுற்றித்திரியலாம். உன்னைச் சுதந்தரவாளியாக்குவதற்கே நான் உன்னை இவ்வளவு கிரயம் கொடுத்து வாங்கினேன் என்றான்.

ஆ என் எஜமானே! நான் ஒரு செத்த நாய். இவ்வளவு கிரயம் கொடுத்து விடுதலை செய்தாயே, என் கட்டுக்களை கட்டவிழ்த்தாயே, என் அடிமைத்தனத்தை நீக்கினாயே, சுதந்தரவாளியாக்கினாயே, எனக்கு விடுதலை வாங்கித் தந்தாயே, ஆகவே நான் இனி உமக்கே அடிமை நீர் என்னைவிட்டுப் போய்விடு என்று கூறினாலும் நான் உம்மைவிட்டுப் போகமாட்டேன். கடைசிவரை உமக்கே அடிமை எனக் கூறி கதறி அழுதான்.

அருமையானவர்களே இந்தக் கதையை விட இயேசுவின் சிலுவையின் தியாக சிந்தையின் மேன்மை எப்படியானது? இதைவிட மேலான பக்தியல்லவா? தேவ அன்பல்லவா?

எம் ஒவ்வொருவருக்கும் அடிமைத்தனத்திலிருந்தும் பிசாசின் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை தந்தார். எமக்கு விடுதலை சுதந்திரம் தரும்படியாக பெரிய கிரயத்தை செலுத்தி எம்மை மீட்டுக் கொண்டார் என பவுல் கூறுகின்றான். பாவத்தின் அடிமைத்தனம் நீங்கப்பட்டு நித்திய ராஜ்யத்தை சென்றடைய தேவன் தமது இரட்சிப்பை எமக்குக் கொடுத்தார்.

1) (ரோமர் 6:22) "இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன். "

2) (1பேதுரு 2:16) "சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள்."

விருத்தசேதனம் அடையாளம் அல்ல. புதிய சிருஷ்டியே அடையாளம். அடையளத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும். அவர்களே தேவனுக்கு சொந்தமானவர்கள். புது சிருஷ்டி + மனுஷ சுபாவம் தேவ சுபாவமாக மாற வேண்டும். நிரூபங்களாக வேண்டும். நம்முடைய பழைய சுபாவங்கள் ஒழிய வேண்டும்.

அந்தியோகியாப் பட்டணத்திலே முதல் முதலாக சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என பெயர் உண்டானது. ஏன் அவர்களுக்குள் கிறிஸ்துவை காணக் கூடிய சுபாவம் இருந்தமையினால் தான் கிறிஸ்தவர்கள் (கிறிஸ்து + அவர்கள்) என்று சாட்சி பெற்றனர்.

(ரோமர் 8:8,9) " மாம்சத்திற்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல."

ஆகவே மேன்மையானவைகளை அடையாளமாகத் தரித்துக் கொள்ளுங்கள். தேவ ஆவி உங்களுக்குள் வாசமாய் இருக்க வேண்டும். இயேசு தனக்காக பன்னிரண்டு சீஷரை தெரிவு செய்தார். அதனால் அவருக்கு தடுமாற்றம், ஆவிக்குள் கலக்கம், ஆவிக்குள் ஏக்கம், தவிப்பு உண்டானது.

1. அதிலே சீமோன் பேதுருவை முதலாவதாக தெரிவு செய்தார். மரண நேரத்திலே எனக்கு அவரையே தெரியாது என்று மறுதலித்தான்.

2. கடைசியாக யூதாஸ் காரியோத்தை தெரிவு செய்தார். அவரைக் காட்டிக் கொடுக்க ஆயத்தமான போது அவரை நன்றாகத் தெரியுமே என்று கூறி முத்தம் செய்து காட்டிக் கொடுத்தான்.

## இயேசுவின் சிந்தை எமக்குள் இருக்கவேண்டும்:-

(1கொரிந்தியர் 2:16) " கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது."

இயேசுவின் குணாதிசயம், சிந்தை எமக்குள் இருந்து வெளிப்படவேண்டும். பொறுமையுடன் சகலவற்றையும் தியாக சிந்தையுடன் சகித்து நடத்தல் அவசியமாகும். நீங்கள் சகித்து நடக்கும்போது மற்றவர்களை தேவன் சந்திப்பார்.

ஒரு வாலிபப் பெண் திருமணம் ஆவதற்கு முன் ஒரு குழந்தையைப் பெற்று விட்டால், கேவலம், வெட்கம், அவமானம் என்பதை அறிந்து

பிள்ளையை கையில் ஏந்திய வண்ணம் ஓடி வருகிறாள். இதை அறிந்த ஊரார் அவளை விரட்டிக்கொண்டு ஓடி வருகிறார்கள். அவளோ அந்த கிராமத்திலே மிஷனரி ஊழியம் செய்யும்படி ஊழியர் ஒருவர் இருந்தார். அவருடைய வீட்டை நோக்கி அந்தப் பெண் குழந்தையைத் தூக்கிய வண்ணம் ஓடி வந்து, அந்த மிஷனரியின் கையில் இந்த கனியை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று ஒப்புவித்து விட்டு, ஓட்டமாய் ஓடி அடுத்த கிராமத்துக்குள் நுழைந்து விட்டாள். விரட்டி கொண்டுவந்த ஊரார் யாவரும் மிஷனரியின் கையில் இருந்த குழந்தையைப் பார்த்து விட்டு அவருடைய முகத்திலே காறித்துப்பிவிட்டார்கள். கிறிஸ்தவனே இது தானா உன் ஊழியம் என்று திட்டி விட்டு கடந்து சென்று விட்டனர். சில மாதங்கள் மிஷனரி குழந்தையை வைத்து வளர்க்கிறார். மிஷனரி பிள்ளைக்கு பால் போன்ற பொருட்கள் வாங்கும்படி கடைகளுக்குச் சென்றால் அவரைப் பார்த்து பரிசாகச் சிரிப்பு, ஏளனப் பேச்சு. இப்படியான அவமானங்களை சகித்து பொறுத்து பொறுமையுடன் அவர் குழந்தையை தன் பராமரிப்பில் வளர்த்து வந்தார்.

பிள்ளையின் தாயானவள் அடுத்த கிராமத்திற்குள் உள்ள ஒரு ஆலயத்திற்குச் சென்று ஆண்டவரை அறிந்து, அவரை சேவிக்க வாய்ப்பு கிடைத்தது, கடவுளை அறிந்தாள். ஞானஸ்நானம் பெற்றாள். இரட்சிப்படைந்தாள். பாவ உணர்வு கிரியை செய்ய ஆரம்பித்தது. தன் வழியைத் திரும்பிப் பார்த்தாள் தன் குழந்தையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற மன தைரியத்துடன் மீண்டும் மிஷனரியிடம் திரும்பி வந்தாள். பிள்ளையை

தரும்படி கேட்டு பெற்றுக்கொண்டு கிராமத்து தலைவனிடம் கடந்து சென்றாள். நீங்கள் மிஷனரியைக் குற்றம் சாட்டுகிறீர்கள் எல்லாக்குற்றமும் உங்கள் மகன் மேல் தான். இந்தக் குழந்தைக்குத் தகப்பன் உங்கள் மகன் தான் என்றாள்.தன் மகனுக்கே அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க ஆயத்தமானார்கள்.

அப்பொழுது கிராமத்துத் தலைவன் நாம் எவ்வளவாக மிஷனரியைப் பரியாசம் பண்ணினோம். அவமானங்கள் வரக்கூடிய பரிகாசப் பேச்சுகளைக் கூறி, முகத்திலே காறித் துப்பினோமே அவ்வளவையும் எட்டு மாதங்கள் அவர் பொறுத்து சகித்து நடந்தாரே. கடவுளின் சிந்தை அந்த மனுஷனுக்குள்ளே விளங்கிற்று என்று சாட்சி கொடுத்தார்கள். கிராமம் இரட்சிப்புக்குள்ளானது. அவளும் இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டாள் 8 மாதத்தின் பின் மிஷனரி இறந்து விட்டார். இறந்த பின் அவருடைய கல்லறையிலே இந்த மிஷனரி இக்கிராமத்திற்கு வரும்போது ஒரு கிறிஸ்தவர்களுமே இல்லை. அவர் மறைந்த பின் முழுமையான கிராமமுமே இரட்சிப்புக்குள் வந்தது. முழுமையான கிறிஸதவர்களாகவே இக் கிராமம் இப்பொழுது உள்ளது என எழுதி வைத்தார்கள். அக்காலங்களில் மிஷனரியின் பிரசங்கம் வெளிப்படாவிடினும் அவரிடம் இயேசு வெளிப்பட்டார். அவருடைய வாழ்வில் தேவன் இருந்தார். எமது வாழ்க்கையின் செய்கைகள் தேவனுக்குப் பிரியமானதாக இருக்க வேண்டும். இயேசுவின் உன்னத <u>சிந்தை</u> உங்களுக்குள் இருக்க வேண்டும்.

(கொலோசெயர் 3:16) “ கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; ”

பிசாசு பொல்லாதவன் அவனுக்கு எல்லா வசனங்களும் தெரியும். மெய்யான சத்தியத்தைப் புரட்ட வல்லவன். ஏவாளை ஏமாற்றிய பிசாசு ஏன் எம்மை ஏமாற்ற மாட்டான்? சத்தியத்தைப் புரட்டுகிறார்கள். வசனத்தை ஞானத்தோடு பரிபூரணமாக படித்துக்

கொள்ள வேண்டும். இயேசுவின் சோதனைக்காலத்திலே பிசாசு இப்படி இயேசுவை மூன்று தரம் மூன்று விதத்தில் சோதனை செய்தபோதும் பரீட்சைகளில் இயேசு வெற்றி பெற்றார். பிசாசு கூறுகிறது. மத்தேயு 4:6ல் உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மை தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டு போவர்கள் என்பதாய் எழுதி இருக்கிறதே என்றது. ஆகவே முழு வேத வசனமும் பிசாசுக்குத் தெரியும்.

ஆனால் தேவ பிள்ளைகள் இவ்வேதத்தை வாசிப்பதே இல்லை அதைப் படிக்க நேரமில்லை. மற்றக் காரியங்களுக்கெல்லாம் நேரமுண்டு வேதம் படிக்க மாத்திரம் நேரமில்லை. மறைந்திருக்கும் பொக்கிஷங்கள் தினம் தினம் புதியவைகளை வெளிப்படுத்துகின்றது. புதிய புதிய ஆசீர்வாதங்கள் வேண்டுமாயின் வேத வாசிப்பு முக்கியம் என்பதை மறந்து போகக் கூடாது. இல்லாவிடில் தேவனோடு உண்டாகும் ஐக்கியம் இடை நிறுத்தப்பட்டு போய்விடும். தொடர்பு வேத வசனத்திலே உறுதிப்பட வேண்டும்.

மார்த்தாள் மரியாள் லாசரு இறந்து விட்ட பின் இயேசு வரும்போது, மார்த்தாள் ஆண்டவரே நீர் இங்கிருந்திருப்பீரானால் என் சகோதரன் மரித்திருக்க மாட்டான் என்று கூறுகிறாள். மரியாள் இயேசுவின் பாதத்திலே இருந்து நல்ல பங்காகிய திரு வசனத்திற்கு செவிசாய்த்தாள். இப்பொழுதும் கூட நீர் தேவனிடத்தில் வேண்டுதல் செய்தால் என் சகோதரன் பிழைப்பான். வசனம் உறுதியாக இருக்குமானால் அற்புதம் அதிசயம் நடைபெறும். வசனம் ஜீவனுள்ளது, வசனம் கிருபையுள்ளது, வசனம் வல்லமையுள்ளது என்பதை மறந்து விடாதீர்கள்.

# பொறுமை

“ (11தெசலோனிக்கேயர் 3:5) கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக. ”

யோபுவின் பொறுமையை காணக்கூடியதாக சரித்திரம் சாட்சி பகருகின்றது.

(ரோமர் 5:3,4) “ அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிற தென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். ”

உபத்திரவப்பட்டது நல்லது கர்த்தருடைய பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது என்று சங்கீதப் புத்தகத்தில் கூறுவது போல யோபு உபத்திரவத்திலே பொறுமையாயிருந்தபடியினால் அவனது முன்னிலைமையிலும் பின்னிலைமை விசேஷமாக ஆசீர்வாதம் பெற்றது.

மின்சாரம் தடைபட்டு மின் விசிறி நின்று விட்டால்கூட ஆலயத்தில் பொறுமையாக கொஞ்ச நேரம் விசுவாசிகளால் இருக்க முடியவில்லை. ஆகவே சகோதரர் ஒருமித்து வாசமாயிருப்பது எவ்வளவு இன்பமானது என்று சொல்லியிருப்பது என்னவாயிற்று. என்ன? சிரிப்பு வரவில்லையா? பொறுமை எங்கே? பொறுத்தார் புவியாள்வார். பொறுமை அவசியமே இயேசுவின் முகத்தில் காறித் துப்பினார்கள் அவர் பொறுத்தார் இவர்கள் செய்வது இன்னதென்று அறியாது இருக்கிறார்கள் இவர்களை மன்னியும் என்றார். பாடுகள், உபத்திரவம், சிட்சைகள் அவசியம். பாடுகள் இல்லாமல் பரலோகம் போக முடியாது. தேவ அன்பு பாடுகள் மத்தியில் தான் வழிநடத்தப்படுகின்றது.

(11 கொரிந்தியர் 1:5,6) " எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது போல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது. ஆதலால், நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்: நாங்கள் ஆறுதலடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் பாடுபடுகிறதுபோல நீங்களும் பாடுபட்டுச் சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்பு பலன் செய்கிறது."

எப்படியெனில் கிறிஸ்துவின் பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது. ஆதலால் நாம் உபத்திரவப்பட்டாலும், அது உங்களுக்கு ஆறுதலுக்கும், இரட்சிப்புக்கும் ஏதுவாகும். நாங்கள் ஆறுதலடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும், இரட்சிப்புக்கும் ஏதுவாகும். நாங்கள் பாடுபடுகிறது போல நீங்களும் பாடுபட்டு, சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்பு பலன் செய்கிறது.

இயேசுகிறிஸ்து பட்டபாடுகள் போல எமக்கு இல்லை அல்லவா? பவுல் பாடுகளைச் சந்தித்தான். பலன் கிடைத்தது அதிக வேலை செய்கிறவனுக்கு அதிக பாடுகள் உண்டாகும். ஓடி ஓடி ஊழியம் செய்யும்போது பாடுகள் வரத்தான் செய்யும். பாடுகளைப் பொறுமையுடன் சகிக்கும்போது இரட்சிப்பின் பெலனைக் காணமுடியும். பாடுகளைச் <u>சகிக்கும்</u> போது <u>வல்லமை</u> பெருகும்.

(11 கொரிந்தியர் 12:9) "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி, என் லவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்."

பலவீனத்திலும் பெலன் உள்ளவனாய் பவுல் காணப்படுகிறான். ஏன்? நிந்தை, நெருக்கம், துன்பம், இடுக்கன் இவைகளை சகிப்பதற்கு பிரியப்படுகிறேன் என்கிறான். அதனால்

தான் பவுலின் ஊழியம் வல்லமையாக நடந்து முடிந்தது. தேவ பிள்ளையே நீ எதிர்பார்க்கும் எதிர்பார்ப்பு உன் உள்ளத்தின் வித்தியாசமான நோக்கமாக இருக்கலாம்.

# வல்லமை

(அப்போஸ்தலர் 28:3-5) மெலித்தா தீவிலே "பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின் மேல் போடுகையில், ஒரு விரியன் பாம்பு அனலுறைத்து புறப்பட்டு அவனுடைய கையைக் கவ்விக் கொண்டது. விஷப்பூச்சி அவன் கையிலே தொங்குகிறதை அந்நியராகிய அந்தத் தீவார் கண்ட போது, இந்த மனுஷன் கொலைப் பாதகன், இதற்குச் சந்தேகமேயில்லை; இவன் சமுத்திரத்துக்குத் தப்பி வந்தும், பழியானது பிழைக்கவொட்டவில்லை என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள். அவன் அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடையாதிருந்தான்."

விரியன் பாம்பு விஷப்பூச்சியாகி அதன் பின் பூச்சியாகி வல்லமை வெளிப்பட்டது. பவுல் வீக்கம் கண்டு, சடிதியாய் விழுந்து சாவான் என்று, அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சேதமும் வராததைக் கண்ட போது, வேறு சிந்தையாகி இவன் தேவனென்று சொல்லிக் கொண்டார்கள்."

பவுலின் கச்சையைப் போட்ட போது நோயாளர் சுகம் பெற்றனர். பிசாசுகள் ஓடியது. தேவ வல்லமை விளங்கிற்று ராஜாக்கள் பிரபுக்கள் சங்கத்தாரிடம் சவாலுடன் பேசி தேவனை மகிமைப்படுத்தினான் அல்லவா? இப்பொழுதும்கூட நீங்கள் என்ன சிந்தையில் இருக்கிறீர்கள்? இயேசுவின் சிந்தை வெளிப்பட வேண்டுமானால் தேவ வசனம், வல்லமை, பொறுமை தேவ அன்பு உங்களில் வெளிப்பட முன்னேறுங்கள். பவுல் இயேசுவின் அச்சடையாளங்களைத் தரித்துக் கொண்டதுபோல நீங்களும் இயேசுவின் அச்சடையாளங்களைத் தரித்துக் கொள்ளுங்கள்.

# இயேசுவின் அன்பு
# தேவ அன்பு

(11 கொரிந்தியர் 5:14) "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால் எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்கிறார்"

வட இந்தியாவின் திபேத் மாநில ஊழியங்களுக்கு யார் மிஷனரியாகப் போவீர்கள் என்று சபையிலே உள்ள மேய்ப்பன் கேட்டார். ஒரு குடும்பம் தங்களை ஒப்புக் கொடுத்து எழும்பினார்கள். முதலாவது தகப்பனை ஊழியத்திற்கு அனுப்பினார்கள். மனுஷரையும் கொலை செய்து உண்ணும் மனுஷர்கள் இந்த ஊழியனை அங்கு கொலை செய்து தின்று விட்டார்கள். கணவர் மரித்துவிடுவார் என்று மனைவிக்குத் தெரிந்தும் தன் மூத்த மகனை அனுப்பினாள். அவனும் அங்கு கொலையுண்டு போனான். அவனும் மரித்து விடுவான் என்று தாய்க்குத் தெரிந்தும், தேவ அன்பு அவளை ஆட்கொண்டதினால் தன் கடைசிக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு அந்த மாநிலத்திற்கு மிஷனரியாக கடந்து போனாள், தைரியமாய்க் கடந்து போனாள். அப்பொழுது மனமிரங்கி அந்த அம்மாவை அந்தக் கிராமம் ஏற்றுக் கொண்டது. குழந்தையை கொலைப்பாதகர்கள் வாங்கித் தன் கையிலே வைத்துக் கொண்டு மிஷனரியின் பாரங்களைச் சுமந்தனர்.

தேவ அன்பு நெருக்கும்போது காலதாமதம் செய்யாதீர்கள், கடன் தீர்ந்த பின் தான் ஊழியம் செய்வேன் என்று இருக்காதீர்கள். உங்கள் இளமை மறைவதற்குள் தேவ அன்பின் நெருக்கத்திற்குள் வந்து ஊழியம் செய்யுங்கள். ஏசாயாவிடம் யார் என் காரியமாகப் போவார் என்று கேட்கின்றார். யாரை அனுப்புவேன் என்கிறார். பகல் வேளையிலே பவுலை தமஸ்குவின் சாலையில் சந்தித்த தேவன் உங்களையும் சந்திப்பாராக. ஆமென்!!!

# “ நானே வாசல் ”

(யோவான் 10:9) “நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறமும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்”

இயேசு நித்தியத்திற்கு வாசலாக இருக்கின்றார். உறுதியாக இந்த வாக்குத்தத்தத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டால் நிச்சயம் தேவன் எமக்கு நித்திய ஜீவனை அளிப்பார். இவைகளை விசுவாசிகள், ஊழியர்கள், தேவ பிள்ளைகள் அனைவரும் உரிமை பாராட்டிப் பெற்றுக் கொள்ளல் அவசியமாகும்.

ஒவ்வொரு வீடுகளுக்கும், ஸ்தலங்களுக்கும், காரியாலயங்களுக்கும், வேலை செய்யுமிடத்திற்கும், பாடசாலைக்கும், வைத்தியசாலைக்கும் , நீதிமன்றத்திற்கும் பொலிஸ் காரியாலயத்திற்கும், கடைக்கும் வாசலுண்டு. பட்டணங்கள் ஊர்களுக்கும் வாசலுண்டு.

1) பழைய ஏற்பாட்டிலே எலியா சமாரியாவின் வாசலிலே பஞ்சம் என்ற தீர்க்கதரிசன வார்த்தையைக் கூறினான். எலியா சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறினது. புதிய ஏற்பாட்டின் காலத்திலே எரிகோவின் எருசலேம் வாசலில் அற்புதம் நடந்தது. ஆலய வாசலில் சப்பாணி அப்போஸ்தல ஊழியர்களான பேதுரு, யோவானால் தெய்வீக சுகத்தைப் பெற்றான்.

2) யாக்கோபு (gate to heaven) தன் பெற்றோரை விட்டு ஏசாவுக்குப் பயந்து ஓடிய நாட்களில்

## வானத்தின் வாசல்:-

ஆதியாகமம் 28:10-22 சுருக்கமாகக் கூறினால் பெயர்செபாவை விட்டு புறப்பட்டதும் ஒரு இடத்திலே சூரியன் அஸ்தமித்ததும் அங்கே இராத்தங்கி அவ்விடத்தின் கற்களில்

ஒன்றை எடுத்து தன் தலையின் கீழ் வைத்து நித்திரை செய்தான். அங்கே ஒரு சொப்பனத்தைக் கண்டான். இதோ ஒரு ஏணி பூமியில் வைக்கப்பட்டிருக்கிறது அதன் நுனி வானத்தை எட்டி இருக்கிறது. அதிலே தேவ தூதர்கள் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்தார்கள். அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களைக் கூறுகின்றார். ஆபிரகாம், ஈசாக்குக்குக் கூறிய வாக்குத்தத்தமே உனக்குரியதாகுக என்றார். நீ இந்தத் தேசத்திற்கு திரும்பி வருமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார். நித்திரையில் இருந்து விழித்த போது கனவில் கர்த்தரே பேசினார் இந்த இடம் எவ்வளவு பயங்கரமாக இருக்கின்றது என அந்த இடத்திற்கு வானத்தின் வாசல் என்றும், இது கர்த்தருடைய வீடேயல்லாமல வேறே ஒன்றுமில்லை என்று பொருத்தனை செய்கிறான்

என் தேவன் எனக்கு உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் தந்து என்னை மீண்டும் பத்திரமாக திரும்பி என் ஊருக்குக் கொண்டு வந்து சேர்த்தால், அன்றிலிருந்து தசமபாகம் செலுத்துவேன். என பொருத்தனை செய்தான். தேவன் எனக்கு தேவனாயிருப்பார் எனக்கூறி அந்தக் கல்லை எடுத்து அபிஷேகம் பண்ணி பெத்தேல் என பெயரிட்டான்.

(வெளிப்படுத்தல் 3:8) "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்கு கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்ட படியினாலே, இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்."

## கல்லறை வாசல்:-

(மத்தேயு 28:2) "அப்பொழுது பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து, வாசலில் இருந்த கல்லைப் புரட்டித்தள்ளி, அதின் மேல் உட்கார்ந்தான்."

பூமி அதிரும் படி அந்தக்கல்லை தேவ தூதன் தன் காலால் புரட்டித் தள்ளினான், அதின்மேல் மிகவும் அழகாய், ஜோராய் உட்கார்ந்தான். அவனுடைய முக ரூபத்தைக் கண்ட காவலாளர்கள் பயந்து நடுங்கினார்கள் திடுக்கிட்டு செத்தவர்கள் போலானார்கள்.

அருமையான தேவ பிள்ளைகளே! நீ எந்த இடத்தில் கல் என்னும் தடையால் மூடப்பட்டிருக்கிறாயோ வாழ்க்கையில் அசைக்க முடியாத கல் தடையாக இருக்குமேயானால் உங்களுக்காக யுத்தம் செய்ய தேவன் இருக்கிறார் என்பதை மறந்து விடாதீர்கள். உனக்கு விரோதமாக இருக்கும் தடைக்கல்லை, இடறுகிறதற்கும் விழுகிறதற்குமான கல்லையும் தேவன் மாற்றுவார். உங்கள் தடைக்கல்லை தேவன் தடுக்க அவரை நாடுவீர்களாக. ஆச்சரியமான வாசல்களை தேவன் உனக்குத் திறப்பார். எனக்காய் எல்லாம் செய்து முடித்த இயேசுவையே நோக்கி அல்லும் பகலும் அல்லேலூயா பாடுவேன்.

## சிறைச் சாலையின் வாசல்

மந்தையின் மேய்ப்பனை சந்திக்க ஆயத்தமா?

(அப்போஸ்தலர் 12:5-16)

பேதுரு சிறைச்சாலையின் காவற்காரருடன் காவல் செய்யப்பட்டு இரு கைகளும் சங்கிலிகளால் கட்டப்பட்டு நித்திரை செய்த போது, அறையிலே தூதன் வந்து நின்ற போது, வெளிச்சமாக இருந்தது. தூதன் பேதுருவை விலாவிலே தட்டி எழுப்பினான். சீக்கிரமாய் எழுந்திரு உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது. அரையைக் கட்டிக் கொள், உன் பாதரட்சையைக் தொடுத்துக்கொள், உன் வஸ்திரத்தை போர்த்துக் கொண்டு என் பின்னாலே வா என்றான் கனவா? நினைவா? இல்லை தரிசனம் காணுகிறேனோ என்ற சிந்தனை எட்டியது. முதலாம் காவல், இரண்டாம் காவலைக் கடந்து நகரத்திற்குப் போகும் வாசலண்டைக்கு வந்தபோது, இரும்புக் கதவு தானாய்த் திறந்தது. வீதியில் நடந்து போகையில் தூதன மறைந்து விட்டான்.

சபையார் பேதுருவுக்கு விடுதலை கிடைக்கும்படி ஜெபித்துக் கொண்டிருக்கும்போது பேதுரு வீட்டு வாசலுக்குச் சென்று கதவைத் தட்டினான். ரோதை என்னும் பெண் ஒட்டுக் கேட்க வந்தாள் அவள் சீஷருக்கும் சபையாருக்கும் பேதுரு வாசலுக்கு முன் நிற்கிறார் என்று கூறிய போது, அவர்கள் இவள் பிதற்றுகிறாள் எனக் கூறி அவிசுவாசமாக இருந்தனர்.

மீண்டும் பேதுரு கதவைத் தட்டினபோது, கதவுகள் திறக்கப்பட்டது. அவிசுவாசம் உன்னை ஒரு வேளை தோல்வி காணும்படி செய்யும். தேவனுடைய பாதத்தை விடாது பிடித்துக் கொண்டால் மேய்ப்பனாகிய இயேசு ஆச்சரியமான, அற்புதமான, செழிப்பான வாசல்களை கட்டளையிடுவார். இது உலகப்பிரகாரமான கதை அல்ல, உண்மைச் சம்பவமே. ஆத்மீக வாழ்வில் சத்தியம் என்னும் அரைக் கச்சையைக் கட்டிக் கொள்ள வேண்டும். சுவிசேஷத்தின் ஆயத்தமான பாதரட்சையைத் தொடுத்துக் கொள்ள வேண்டும். இரட்சிப்பின் வஸ்திரமாகிய போர்வையைப் போர்த்துக் கொண்டு சமாதானத்தின் சுவிசேஷத்தை அறிவிப்பது அவசியம் என ஆலோசனை கூறுகின்றது.

சபையார் எல்லோரும் பேதுருவைச் சிறைச்சாலையிலிருந்து கொண்டு வாரும் என்று ஆண்டவரிடம் அழுது ஜெபித்தார்கள். ஆண்டவர் பேதுருவைச் சிறைச்சாலையிலிருந்து கொண்டு வந்தும் அவிசுவாசமாகவே சபையார் இருந்தார்கள்.

முடிவுவரையும் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் முடிவு வெற்றியாக இருத்தல் அவசியம்.

## பழைய ஏற்பாட்டின் காலத்திலே

(யோசுவா 6:1) (எரிகோவின் சாபம்.)
"எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது; ஒருவரும் வெளியே போகவுமில்லை, ஒருவரும் உள்ளே வரவுமில்லை."

உள்ளும்புறமும் மேய்ச்சலைக் கண்டடைவீர்கள் என்ற வாக்குத்தத்தத்தை யோசுவா கடைப்பிடித்தான்.

(யோசுவா 6:24) (எரிகோ+பேரீந்து பட்டணம்) "பட்டணத்தையும் அதிலுள்ள யாவையும் அக்கினியால் சுட்டெரித்தார்கள்: வெள்ளியையும் பொன்னையும் வெண்கலத்தினாலும் இரும்பினாலும் செய்த பாத்திரங்களையும் மாத்திரம் கர்த்தரின் ஆலய பொக்கிஷத்தில் சேர்த்தார்கள்." யோர்தானைக் கடந்த இடத்திற்கு எதிராக உள்ள பட்டணம் இதைச் சுற்றிப் பெரிய மதில்கள் கட்டப்பட்டு இருந்தது. இஸ்ரவேலர் இதைச் சுட்டெரித்தார்கள்.

(1 இராஜாக்கள் 16:34) ஈயேல் மீண்டும் இதைக் கட்டியெழுப்பினான். யோசுவாவின் சாபம் பலித்தது. உடைக்கப்பட்ட எரிகோ ஏரோது ராஜாவினால் கட்டப்பட்டது. மீண்டும் அவனுடைய வேலைக்காரர்கள் சுட்டெரித்தார்கள். சாபம் தொடர்ந்து பிடித்தது. எலியா இந்த இடத்திற்குப் பக்கத்திலே தான் தண்ணீரை ஆரோக்கியமாக்கிய சம்பவம் நடந்ததும் எலியா தேவனால் எடுத்துக் கொள்ளப்பட்டதும் இவ்விடமேயாகும். இயேசுவின் காலத்திலே சகேயு என்கிற ஆயக்காரன் மனந்திரும்பினான். நல்ல சமாரியனைப் பற்றிய உபதேசம் இங்கு உருவானது.

எரிகோ சாபத்தின் நிலமாக இருந்தது தேவ பிள்ளையின் வாயினால் சொன்னவை நிலைத்துவிட்டது. தேவனுடைய வாக்கு எரிகோவை தினமும் ஒரு முறை 6 நாட்கள் சுற்றி வாருங்கள் ஏழு ஆசாரியர்கள் ஏழு கொம்புகளை எக்காளங்களைப் பிடித்துக்கொண்டு போக வேண்டும். ஏழாம் நாள் ஏழு தரம் சுற்றி வரவேண்டும். கொம்புகளின் நெடுந்தொனி ஆரவாரிக்கும் போது, எக்காளச் சத்தம் கேட்கும்போது, ஜனங்கள் எல்லாரும் ஆரவாரிக்க வேண்டும் மகா ஆரவாரத்தோடு ஆர்ப்பரிக்க வேண்டும் என்ற கட்டளையின்படி செய்த போது, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பின் சென்றது. யோசுவா இட்ட கட்டளையை பணிந்து

ஜனங்கள் கடைப்பிடித்தனர். எக்காளச் சத்தத்தைக் கேட்டு ஜனங்கள் மகா ஆரவாரமாய் ஆர்ப்பரிக்கையில் அலங்கம் இடிந்து விழுந்தது. ஜனங்கள் பட்டணத்தில் உள்ளவைகளைக் கைப்பற்றினார்கள் பின் பட்டணத்தைச் சுட்டெரித்தார்கள். சாபத்தீடானதைத் தொட வேண்டாம் என்ற கட்டளையைக் கடைப்பிடித்தனர். பொற்பாத்திரம் வெண்கலப் பாத்திரங்கள் இரும்பினால் செய்த வெள்ளிப் பாத்திரம் யாவற்றையும் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டு போனார்கள்.

(யோசுவா 6:26) "அக்காலத்திலே யோசுவா: இந்த எரிகோ பட்டணத்தைக் கட்டும்படி எழும்பும் மனுஷன் கர்த்தருக்கு முன்பாக சபிக்கப்பட்டிருக்கக்கடவன்; அவன் அதில் அஸ்திபாரத்தைப் போடுகிறபோது தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிறபோது தன் இளைய குமாரனையும் சாகக் கொடுக்கக் கடவன் என்று சாபம் கூறினான்."

(யோசுவா 7:10,11) யோசுவா இட்ட கட்டளையை ஆகான் மீறினான். கட்டளையை மீறினபடியால் ஆயி என்னும் தேசத்தின் யுத்தத்திலே பட்டண வாசல் வரையும் 36 பேரை வெட்டி ஆயின் மக்கள் வெற்றி கண்டனர் எரிகோவின் சாபம் தொடர்ந்தது. யோசுவா தேவனுக்கு முன் முகங்குப்புற விழுந்தான் நீ ஏன் இப்படி முகங்குப்புற விழுந்து கிடக்கிறாய்? என்று கர்த்தர் கேட்டார்.

தேவனின் உடன்படிக்கையை மீறி சாபத்தீடானதைப் பெற்றதினால் அவனும் அவனது உடமைகள் யாவும் சுட்டெரிக்க வேண்டும் என்றார். மக்கள் கல்லெறிந்து அவனைக் கொன்று உடைமைகளைச் சுட்டெரித்தார்கள். பாவம், சாபம் சுட்டெரிக்கப்பட்டது. கற்குவியலால் மூடினார்கள். அதை ஆகோரின் பள்ளத்தாக்கு என்று இன்றும் அழைக்கப்படுகிறது. தேவனின் உக்கிரகம் மாற்றப்பட்டது. யோசுவாவை ஆகான் தன் செய்கையால் கலங்கப்பண்ணினான். தேவ பிள்ளைகளே தேவ கட்டளையை மீறுகிற நீங்கள் சபிக்கப்பட்டுப் போய்விடுவீர்கள். சாபத்தை விட்டு விலகி நடவுங்கள்.

## நீதியின் வாசல்:-

(சங்கீதம் 18:20) "கர்த்தர் என் நீதிக்குத்தக்கதாக எனக்குப் பதிலளித்தார்; என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார்."

(சங்கீதம் 118:19,20) நீதியின் வாசல்களைத் திறவுங்கள்; நான் அவைகளுக்குள் பிரவேசித்து கர்த்தரைத் துதிப்பேன். கர்த்தரின் வாசல் இதுவே நீதிமான்கள் இதற்குள் பிரவேசிப்பார்கள்.

உங்கள் நீதியின் கிரியை கர்த்தருக்குள் வளரட்டும் பரிசேயர், சதுசேயர் நீதியிலும் உங்கள் நீதி அதிகமாகட்டும். நீதியின் நற் கிரியைகளுக்கு பலனுண்டு, ஆசீர்வாதமுண்டு. நித்திய மகிழ்ச்சி நித்திய ஜீவனுக்குள் கடந்து வருகின்றது.

(ஆதியாகமம் 6:11) பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது, பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. அதனால் தம் தம் வழிகளைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள். தேவன் அவர்களை பூமியோடே அழித்துப்போடுவேன் என்று நோவாவிற்குக் கட்டளையிட்டார்.

(ஆதியாகமம் 6:9) அக்காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நோவா நீதிமானும், உத்தமனுமாயிருந்தான். அதனால் தேவன் ஒரு நீதிமானைத் தேடினார். தேசத்தை அழிக்கப்போகும் இரகசியத்தை அவனுக்கு ஆலோசனையாகக் கூறி கப்பலை செய்வித்து, அவனையும் கப்பலில் உள்ளவையையும் காப்பாற்றினார். நீதியின் வாசலுக்குள்ளே பாதுகாப்பு உண்டு என்பதேயாகும்.

(நீதிமொழிகள் 3:32) மாறுபாடுள்ளவன் கர்த்தருக்கு அருவருப்பானவன் நீதிமான்களோடே அவருடைய இரகசியம் இருக்கின்றது.

(நீதிமொழிகள் 3:33) துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கிறது. நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார்.

கர்த்தர் சோதோம் கொமாராவை அழிப்பதற்கு முன் 10 நீதிமான்களைத் தேடினார். அப்படியில்லாததினால் அழிவைக் கண்டார்கள். நீதிமான்களின் வீட்டில் ஆசீர்வாதம் உண்டு.

(1 கொரிந்தியர் 1:31) அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்.

இத்தனையும் உள்ளவர்களுக்கே நீதியின் கிரீடத்தைத் தரிக்க முடியும். நீதியின் வாசலைக் காணமுடியும். நீதியின் வஸ்திரம் அளிக்கப்படும். ஆமென்!!!

# தேவனின் சிந்தையை அறிகிறவர்கள்.

(ஏசாயா 1:3) மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையும் அறியும். இஸ்ரவேலோ அறிவில்லாமலும் என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது என்கிறார்.

காட்டு மிருகங்களையும், நாட்டு மிருகங்களையும் தேவன் படைத்தார். அநாதி தீர்மானங்கள் தேவனுடைய கரத்தில் உண்டு. ஆகவே ஆகாரின் பிள்ளை இஸ்மவேலுக்கும் தூதன் ஆசீர்வாதத்தைக் கொடுத்தாலும், ஆதியாகமம் 16:12ல் அவன் துஷ்டனாயிருப்பான் அவனுடைய கை எல்லாருக்கு விரோதமாகவும் எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் இருக்கும் என்றார். இஸ்மவேலைப் பெற்ற போது ஆபிரகாமின் வயது 86 ஆதியாகமம் 21:20 இஸ்மவேலுடன் தேவன் இருந்தார். அவன் வனாந்திரத்திலே குடியிருந்து வில்வித்தையிலே வல்லவனானான். அப்படியானால் அவன் வேட்டையாடும் அனுபவத்தை பெற்றிருந்தான் எனகூற முடியும்.

(ஆதியாகமம் 25:27,28) இந்தப் பிள்ளைகள் பெரியவனானபோது ஏசா வேட்டையில் வல்லவனும் வனசஞ்சாரியுமாய் இருந்தான். ஏசா வேட்டையாடிக் கொண்டு வந்து சமைத்துக் கொடுப்பது, தகப்பனாகிய ஈசாக்கினுடைய வாய்க்கு ருசியாக இருந்ததினால் ஏசாவின் மேல் பட்சமாய் இருந்தான்.

(ஆதியாகமம் 27:3) ஈசாக்குக்கு முதிர் வயதானபோது ஏசாவினிடம் நீ உன் ஆயுதங்களாகிய உன் அம்பறாத்துணியையும் உன் வில்லையும் எடுத்துக் கொண்டு வனத்திற்குப்போய் எனக்காக வேட்டையாடி ருசியுள்ள பதார்த்தங்களைச் சமைத்து நான் புசிக்கவும் நான் மரணமடையுமுன்னே என் ஆத்மா உன்னை

ஆசீர்வதிக்கவும் என்னிடத்தில் கொண்டு வா என்றான்.

மாடு தன் முன்னனையும், கழுதை தன் எஜமானையும் அறியும் என்று இஸ்ரவேலராகிய மக்களையும், தேவனை அறிந்த தேவ பிள்ளைகளையும், தேவ ஊழியர்களையும், விசுவாசிகளையும், வீட்டிலுள்ளவர்களையும் குறிப்பிட்டுப் பேசுகிறார். வேறு பாஷைக்காரர், ஜாதி மக்களுக்குப் பேசவில்லை. தன் பிள்ளைகளுக்கு அறிவுரையாக, ஆலோசனையாக வார்த்தையாகக் கூறுகிறார். இந்த வார்த்தைகள் கர்த்தருடைய வார்த்தைகள். ஏசாயாவின் வார்த்தைகள் அல்ல.

வீட்டு மிருகங்களுக்கு எஜமானுண்டு. வீட்டெஜமானை ஒப்பிட்டுப் பேசுகிறார். வீட்டு எஜமானை மிருகம் அறிகின்றது. ஒவ்வொரு விசுவாசிகளும் ஒவ்வொரு இஸ்ரவேலராகவும் இருக்கின்றார்கள்.

கழுதையும், மாடும் முக்கிய இடம் பெறுகின்றது.
1) மாடுகள் இருந்த முன்னனையிலே இயேசுவின் பிறப்பு
2) இறப்பின்போது கடைசிப் பவனிக்காகக் கழுதையைப் பாவித்தார்.

எஜமானுக்கு அடங்கியவர்கள் பாவ உணர்வற்றவர்களாக, தியாக சிந்தை உள்ளவர்களாக இருக்க வேண்டும். இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக் கூடாது. ஒரு எஜமானுக்கு மட்டுமே ஊழியம் செய்வது உண்மையான, ஒழுக்கமான, தியாகமான செயல்.

மாட்டுவண்டிலில் பொருளை இழுக்கலாம் வயலை உழலாம். தன் எஜமானுக்கு முன் கடுமையாக சேவை செய்யலாம். சேவை செய்து ஓய்வடைந்து, இளைப்பாறுதலை பெறும்போது எஜமானின் காலடியில் இளைப்பாறுதலைப் பெற்றுவிடும்.

உங்கள் வாழ்வில் நீங்கள் தேவனுக்கு ஊழியனாக மாறவேண்டும். உயிரோடு இருக்கும் காலம் வரை தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும். தன் விலையேறப்பெற்ற இரத்தத்தை

கிரயமாக செலுத்தி எம்மை மீட்டு சுத்தமாக்கினார். ஆகவே நாம் அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும்.

1) திட்டமிட்ட சம்பள வருவாய் இருக்கும் போது, எப்படியாவது தியாகமாக பணத்தை மிச்சம் பிடித்து, தேவனுக்குக் கொடுப்பதில் ஊழியம் செய்யலாம்.

2) வேலை பார்ப்பவர்கள் தமது நேரங்களை மிச்சம் பிடித்து தியாகத்தோடு அந்த ஊழியங்களைச் செய்யலாம்.

3) வயது செல்வதற்கு முன் தேவனுக்கு ஏதாவது வைராக்கியமாக தியாகத்தோடு ஊழியம் செய்ய வேண்டும் சுகபெலமாக இருக்கும்போதே செயற்படவேண்டும்.

4) தேவ சமூகத்தில் அதிக நேரம் ஐக்கியப்படவேண்டும். அதேபோல தேவ பிரசன்னத்தில் நிறைந்து இருத்தல் அவசியம். எனவே மாடு வாங்கின நாளிலிருந்து எஜமானுடைய வீட்டிலே கூடவே இருப்பதுபோல் தேவ பிரசன்னம் கூடவே இருக்கவேண்டும். பூரணமாக இயேசுவுக்கு ஊழியம் செய்ய வேண்டும்.

## பூரணமாக இயேசுவுக்கு ஊழியம் செய்ய வேண்டும் முழுமையான ஊழியம்!:-

(1 இராஜாக்கள் 19:19) 12 பூரணத்துவத்தைக் குறிக்கிறது 12 ஏர் மாடுகளைக் கொண்ட எலிசா முழுமையான ஊழியங்களைச் செய்து புகழ் பெற்றான். 12 அப்போஸ்தலர் முழுமையாக சேவை செய்தனர். 12 கோத்திரப் பிதாக்கள் சரித்திரத்தையே உருவாக்கினார்கள். எலியாவின் கட்டுப்பாட்டில் எலிசா இருந்தான் இரட்டிப்பான ஆசீர்வாதம் கிடைத்தது. நீங்களும் ஆண்டவருக்கு கீழ் அடங்கி இருப்பீர்களானால் அளப்பரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## உறுதியான சேவை:-

மிருகத்தின் மூலம் எஜமானுக்கு ஆதாயம் கிடைக்கும் என்பது உறுதி. அங்ககரிக்கப்பட்ட சேவையை செய்யுங்கள். ஆத்தும ஆதாயம் செய்யும் ஊழியனாக இருத்தல் அவசியம். தேவனின் ஊழியம் அரசாங்க ஊழியம் அல்ல. தனியார் துறை திட்டமுமல்ல. தனிப்பட்டவர்களுடைய சேவையுமல்ல. ராஜாதி ராஜனாம் இயேசுவின் சேவையாகும். ரோமர் 12:1 ன்படி உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்

(மத்தேயு 10:37,38)தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல பூமியிலுள்ள உதாரத்துவங்களை உதறித்தள்ளி ஊழியத்தைச் செய்வதே மேன்மை.

1) ஆண்டவரே மேன்மை என்று பவுல் அசையாது இருந்தான். கர்த்தருடைய அச்சடையாளங்களில் உறுதியாக இருந்தான்.

2) நெகேமியாவை சன்பல்லாத்தும், தொபியாவும் பரியாசம் செய்த போது அசையாது நின்றான்.

3) யோபுவிற்கு சகல சோதனைகள் வந்தும், மனைவி தூஷித்த போதும் ஆண்டவரை விடாது பற்றிப் பிடித்தான். (யோபு 13:15) ஸ்திரமாக இருந்தான்.

4) தாவீதின் இரத்த உறவுகள் சவால்களில் இடைப்பட்ட போதும், தன் மகன் சிங்காசனத்தை அபகரித்த வேளையிலும் தேவனுக்குள் ஆலோசனை கேட்டு அவரையே சார்ந்திருந்தான். உறுதியான ஊழியத்திற்கு ,ஸ்திரமான ஊழியத்திற்கு, பரிபூரணமான ஊழியத்திற்கு எம்மை ஒப்புக்கொடுப்பதே மேன்மையாகும்.

(1 சாமுவேல் 6:11,12) கர்த்தருடைய பெட்டியையும், பொன்னால் செய்த சுண்டெலிகளும், தங்கள் மூல வியாதியின் சாயலான சுரூபங்களும் வைத்திருக்கிற சிறிய பெட்டியையும், அந்த வண்டிலின் மேல் வைத்தார்கள் அப்பொழுது அந்தப் பசுக்கள் பெத்ஷிமேசுக்குப் போகிற வழியிலே செவ்வையாய்ப் போய், வலது இடது பக்கமாய் விலகாமல் பெரும்பாதையான, நேர்வழியாகக் கூப்பிட்டுக் கொண்டே நடந்தது.

வலது இடது பக்கம் திரும்பாமல் பெரும் பாதையில் நேர் வழியாக உறுதியாக, ஸ்திரமாக மாடுகள் நடந்தன. நேர் வழியாய் சென்றது. நேர்மையாக, உத்தமமாக, ஒழுக்கமாக, கீழ்ப்படிவாக, உண்மையாக நடந்து சென்றது.

1) பெரும்பாதை வழியாகச் சென்றால் வயலுக்குப் போகலாம் எனக் கூறியது யார்?
2) நேரடியாக நடத்திச் சென்றது யார்?
3) இவைகளை மாட்டுக்குச் சொல்லிக் கொடுத்தது யார்?
எஜமானுக்கு பிரியமாக செய்ய வேண்டியதை உத்தமமாக, கவனமாக செய்ய ஆதாயம் தேடிக்கொடுக்கும் மிருகம் கூட கீழ்ப்படிந்திருக்கிறது.

கர்த்தரால் உரிமை கொண்டாடும் ஜனங்கள் நாமாக இருக்கிறோம். உங்கள் எஜமான் எதை உங்களிடம் எதிர்ப்பார்க்கிறார்.

(மீகா 3:11) அதின் தலைவர்கள் பரிதானத்திற்கு நியாயம் தீர்க்கிறார்கள். அதின் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள். அதின் தீர்க்கதரிசிகள் பணத்திற்குக் குறி சொல்லுகிறார்கள். ஆகிலும் அவர்கள் கர்த்தரைச் சார்ந்து கொண்டு கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ? தீங்கு எங்கள் மேல் வராது என்கிறார்கள்.

(1 சாமுவேல் 2:12,13) ஏலியின் குமாரர் கர்த்தரை அறியவில்லை அது ஏலியின் தவறு என்று கூறுகிறோம். தவறுதலுக்கு

ஒரு முறை இரு முறை மன்னிப்புக் கிடைக்கும். ஆனால் நீதியின் தேவனுடைய வாசஸ்தலத்தில் அநீதி நடைபெறுகின்றது. அகோரமான யுத்ததத்திலே ஒப்னேயும், பினேகாசும் மரித்தார்கள். எங்கள் மேல் தீங்கு வராது என்கிறார்கள். துன்மார்க்கனுடைய வீட்டிலே தீங்கும் சாபமும் நிறைந்திருக்கும். தேவனுடைய உடன் படிக்கையை சுமக்க வேண்டியவர்கள் அநீதியான தாறுமாறான பாதைகளில் நடக்கும் போது, தீங்கு உண்டாகும். பிரதான ஆசாரியன் செவ்வையாய் நடக்கவில்லை. போஷிப்பிற்குப் போகுமுன்னே சுய நீதியை நாடுகிறான். பானையில் உள்ள இறைச்சியை எடுத்துக் கொள்கிறான். ஆசாரியன் தேவனைக் காட்ட வேண்டியவன்.

(எரேமியா 9:3) அவர்கள் பொய்யைப் பிரயோகிக்கத் தங்கள் நாவாகிய வில்லை வளைக்கிறார்கள்: அவர்கள் இந்தத் தேசத்திலே பலத்துக்கொள்வது சத்தியத்துக்காக அல்ல: பொல்லாப்பிலிருந்து பொல்லாப்புக்கு நடந்தேறுகிறார்கள்: என்னையோ அறியாதிருக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

(ரோமர் 1:28) தேவனை அறியும் அறிவை பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால் தகாதவைகளைச் செய்யும்படி தேவன் அவர்களை கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்.

(1 சாமுவேல் 8:3) ஆனாலும் அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல் பொருளாசைக்குச் சாய்ந்து பரிதானம் வாங்கி நியாயாத்தீர்ப்பைப் புரட்டினார்கள்.

மாடுகள் பரிதானம் வாங்க வில்லை. மாடுகள் லஞ்சம் வாங்க வீல்லை. வழிகளை மாற்றவில்லை. நேராக, செவ்வையாக, செம்மையாக நடந்தன. ஏலியின் குமாரரோ அருவருப்புகளை உண்டாக்குகிறார்கள். இப்படியான விடயத்திலே கடவுளை

ஜனங்கள் எதிர்பார்க்காமல் ராஜா ஒருவர் தமக்கு வேண்டுமென்று சத்தியத்தைப் புரட்டினார்கள். சத்தியம் வேண்டாம் என அசத்தியத்தை நாடினார்கள். நித்தியம் வேண்டாம் என அநீதியைத் தேடினார்கன்.

(நீதிமொழிகள் 10:25) "சுழல் காற்று கடந்து போவதுபோல் துன்மார்க்கன் கடந்து போவான் நீதிமானோ நித்திய அஸ்திபாரமுள்ளவன்."

(எண்ணாகமம் 22:27) "கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு, பிலேயாமின் கீழ்ப் படுத்துக் கொண்டது: பிலேயாம் கோபம் மூண்டவனாகி, கழுதையைத் தடியினால் அடித்தான். உடனே கர்த்தர் கழுதையின் <u>வாயைத் திறந்தார்</u> தூதன் உருவிய பட்டயத்தோடு நிற்பதை கழுதை கண்டது தேவ மனிதன் தூதனைக் காணவில்லை."

சிலர் ஒரு ஆலயத்தை விட்டு மறு ஆலயத்திற்குச் செல்வார்கள். அவர்கள் ஆசீர்வாதத்ததைக் காணமாட்டார்கள். தேவ சித்தத்தை அறிய முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

(லூக்கா 22:49,50,51) "அந்தப்படியே இயேசுவை பாதுகாக்க அவரை சூழ்ந்து நின்றவர்கள் நடக்கிறதைக் கண்டு ஆண்டவரே பட்டயத்தினாலே வெட்டுவோம் என்றார்கள். அந்தப்படியே பிரதான ஆசாரியனுடைய சேவகனின் வலது காதை வெட்டினான். நிறுத்துங்கள் என்று இயேசு கூறி காதைத் தொட்டு சுகமாக்கினார். இதே சீஷனாகிய பேதுரு மீண்டும் தன் மீன் வலையிழுக்கும் தொழிலுக்கு ஓடி விட்டான் அல்லவா? இடம் விட்டு இடம் போகும் கழுதையாக மனுஷன் இருக்கிறான்.

(எண்ணாகமம் 23:12) அதற்கு அவன் கர்த்தர் என் வாயில் அருளியதையே சொல்வது என் கடமையல்லவா என்றான்.

தேவன் எமக்கு அரணாக இருப்பார்
துன்மார்க்கனிடம் இருந்து விலகச் செய்வார்
எம்மை விலகி இருக்கும்படி செய்வார்
தேவனுக்கு உண்மையாயிருங்கள்.
மாடும், கழுதையும் எஜமானை அறிகிறது
ஆகையால் நீங்களும் உண்மையாயிருந்து சர்வ வல்லவரை மறந்து விடாதிருங்கள்.

மோவாப்பியர்கள் சபிக்கப்பட்டவர்கள் பாளையத்திற்கு வெளியே நிற்க வேண்டியவர்கள் பிலேயாம் அவர்களை ஆசீர்வதிக்க முடியாது. கழுதை தடை செய்கிறது. மனிதனின் வழிகள் மாறும், நினைவுகள் மாறும் கர்த்தரோ மாறாதவராயிருக்கிறார். மனம் மாற அவர் மாந்தன் அல்ல. இஸ்ரவேலரை ஆசீர்வதிப்பதே தேவனுக்குப் பிரியமாயிருந்தது. உலகத்திலிருந்து பிரித்தெடுத்த உங்களையே ஆசீர்வதிக்க தேவன் விரும்புகிறார்.

ஆமென்!!!

# விண்ணப்பங்கள் ஏறெடுக்கப்படுமா?

(எரேமியா 32 :16)

அநேகவிண்ணப்பங்களில் இதுவும் ஒரு விண்ணப்பம். எரேமியா தேவனை நோக்கி ஜெபிக்கிற ஜெபமானது தரிசனம் கிரியை செய்கிற ஜெபமே. ஜெபத்தின் தொனித் தோற்றம் ரூபமாக செயல்படுகிறது. சாதாரண வார்த்தையாக அல்ல. காணப்படுகின்றதான தகைமைகள், தன்மைகளை ஆழமாகக் காணமுடிகிறது. எப்படிப்பட்ட சூழ்நிலையில் பாபிலோனுக்கு இவர்களை சிறைப் பிடித்துக் கொண்டு போவானென்று சிதேக்கியாவுக்கும் யூதா ராஜ்யத்தைக் குறித்தும் தீர்க்கதரிசனம் கூறினான்.

சிறைச்சாலையில் தள்ளப்பட்ட எரேமியவுக்கு ஜெபமானது ஆசீர்வாதமாக அமைகின்றது.

1) தேவன் இந்த விண்ணப்பத்தில் சிருஷ்டிகராகவும்
2) தேவன் இந்த விண்ணப்பத்தில் எச்சரிப்பவராகவும்
3) தேவன் இந்த விண்ணப்பத்தில் நடத்துகிறவராகவும்
4) தேவன் இந்த விண்ணப்பத்தில் சீர்ப்படுத்துகிறவராகவும்
5) தேவன் இந்த விண்ணப்பத்தில் ஆறுதல் தருபவராகவும்

ஐந்துவித தன்மைகளை, தகைமைகளை உடையவராக இருக்கின்றார். இந்த வாக்கியத்திலே சிருஷ்டிப்புக்கு அடங்கிய கிரியைகளைக் காணமுடிகின்றது. இது விண்ணப்பமாகாமல் இதைக்கவனித்தால் அவர் படைப்புக்கு காரணக் கர்த்தராக அமைகின்றார்.

(எரேமியா 32:17) "ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்: உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. தேவன் வானத்தில் அற்புதங்களைச் செய்கிறவர் அவர் ஞானத்தின் மகா தேவன் ஞானமாக யாவற்றையும் படைத்தார்.

(சங்கீதம் 104:24) "கர்த்தாவே உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர். பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது.

சமுத்திரமும் உயிர் வாழ்வனவும் மலைகளும், குன்றுகளும், மேகங்களும், பனியும், மழையும், காற்றும், மின்னலும், மரமும், செடியும், கொடியும், மனுஷனும், மிருகமும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரமும் இவைகள் மூலம் அவருடைய திறமை கொண்ட ஆழமான ஞானம் கிரியைகளினால் வெளிப்படுத்தப்படுகின்றது.

(சங்கீதம் 8:3,4) "உமது விரல்களின் கிரியைகளாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும் போது,மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்."

"(சங்கீதம் 19:1)வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கின்றது ஆகாயவிரிவில் மேகம் கறுத்து மழை வர ஆயத்தமாகின்றது. முகில் கூட்டம் ஒன்று சேர்ந்து பனித்துளியாக இறங்குகின்றது. மக்களுக்கு வேண்டிய சீதோஷணத்தை உண்டு பண்ணுகிறார். மேகஸ்தம்பமாகவும், அக்கினிஸ்தம்பமாகவும் தம் பிள்ளைகளுக்கு கிரியை அளிக்கிறார். இக்கட்டான நிலையிலே தான் ஞானத்தின் கிரியைகளால் உனக்கு வெளிப்படுவார். அதிசயமான காரியங்களை உங்களுக்குச் செய்கின்றார். எனக்கு என் தேவன் செய்வாரா என்று உனக்குள் கேள்வி எழும்பும் தன் பிள்ளைகளுக்கு நிச்சயம் அதிசயமான காரியங்களைச் செய்யும் மகா தேவன். தேவனுடைய யோசனைகளும், வழிகளும், சிந்தனைகளும், நினைவுகளும் வித்தியாசமானதாகும்.

சில சமயங்களிலே தேவ பிள்ளைகளுக்கு விரோதமாக சதித்திட்டங்கள் புயல்போல வரும். சிருஷ்டிகரே நின்று அவைகளை முறியடிப்பார். நினையாத நற்காரியத்தை உனக்குச் செய்வார்

ஞானமாக அவர் செயற்படுவார். அப்போது நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

என்னால் செய்ய முடியாத அதிசயமான காரியம் ஒன்று உண்டோ? ஒன்றுமில்லையே!

தேவ தூதனின் வாக்கு மரியாளுக்கு! லூக்கா 1:28-35

அவள் இருந்த வீட்டிலே தேவ தூதன் பிரவேசித்து கிருபை பெற்றவளே வாழ்க கர்த்தர் உன்னுடனே கூடஇருக்கிறார். ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான். அவளோ தேவதூதனைக் கண்டு, தேவ தூதனுடைய வார்த்தைகளினால் கலங்கி இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டு இருந்தாள்.

தேவ தூதன் அவளை நோக்கி பயப்படாதே நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன் எனப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார் இவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றும் அரசாளுவார் அவருடைய ராஜ்யத்திற்கு முடிவிராது. அதற்கு மரியாள் தேவ தூதனை நோக்கி! இது எப்படியாகும்? நான் புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் பிரதியுத்தரமாக பரிசுத்தாவி உன்மேல் வரும் உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும் ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும் என்றான். ஞானத்தின் தேவன் ஆச்சரியமான கிரியைகளை நடப்பிப்பார்.

இந்த விண்ணப்பப்படம் பிடித்துக் காட்டுகிறது. மிகவும் மனதுருக்கமுள்ளவர். அதே போல் எச்சரித்துக் கண்டிப்பார் பதில் தரும் தேவன் விண்ணப்பத்தைக் கேட்கிறார். ஜெபத்தைக் கேட்டு பதில் தருகிற தேவன்.

"(எரேமியா 32:18,19) அவர் நீதியின் தேவன் ஆயிரம் தலைமுறைகளுக்கு நீதி செய்யும் தேவன் இரக்கம் செய்யும் தேவன். பெற்றோரின் குற்றங்களைப் பிள்ளைகளிடத்தில் பலி கேட்கும் தேவன் அன்பும் கசப்பும் மனதுருக்கமும் கொண்ட எச்சரிப்பின் தேவனாயிருக்கிறார். பிதாக்களின் அக்கிரமத்தை அவர்களுடைய பின்னடியார் பிள்ளைகளின் மடியிலே சரிக்கட்டுகிற வருமாகிய சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள மகத்துவமும் வல்லமையுமுள்ள தேவனே, யோனையிலே பெரியவரும், செயலில் வல்லவருமாயிருக்கிறீர்: அவனவனுக்கு அவனவனுடைய வழிக்குத்தக்கதாகவும் அவனவனுடைய கிரியைகளின் பலனுக்குத்தக்கதாகவும் அளிக்கும்படி, உம்முடைய கண்கள் மனுபுத்திரருடைய எல்லா வழிகளின் மேலும் நோக்கமாயிருக்கின்றன."

எச்சரித்து எம்மை நடத்துகிறார். எச்சரிப்பின் பின் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். மற்றவர்கள் மேல் குற்றம், குறை காணவேண்டாம். தூஷிக்கவும் வேண்டாம் அவைகளைக் கடவுள் பார்த்துக்கொள்வார். நாம் நீதியைக் கடைப்பிடிப்போமாக.

தானியேல் ஐந்து வேளையும் எருசலேமைப்பார்த்த வண்ணம் ஜெபித்தான். அவனுக்கு வந்த இக்கட்டுகளின் மூலம் தேவன் சிங்கங்களின் வாயை தேவ தூதனைக் கொண்டு கட்டி போட்டார். சிங்கம் தானியேலை ஒன்றும் செய்யவில்லை. தேவன் நம்மை எச்சரிப்பது பாக்கியமே. தேவன் எம்மை நடத்துபவராக இருக்கிறார். நடத்திச் செல்கிறார்.

"(எரேமியா 32:21,22) இஸ்ரவேலாகிய உமது ஜனத்தை அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரத்தினாலும், எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, அவர்களுடைய பிதாக்களுக்கு நீர் கொடுப்பேன் என்று ஆணையிட்ட பாலும் தேனும் ஓடுகிற தேசமாயிருக்கிற இந்த தேசத்தை அவர்களுக்குக் கொடுத்தீர்.

## நடத்துகிறவர் (Conductor) :-

**Bus Conductor** அல்ல. அவர் தன் பிள்ளையை சரியான வழியில் நடத்திச் செல்கிறார். அடிமைத்தனம் என்னும் எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்து அவர் நம்மை விடுதலையாக்கி நடத்துகிறவராக இருக்கிறார். தேவன் இஸ்ரவேலரை நடுவழியில் கைவிடவில்லை. செழிப்பான, சுதந்திரமான தேசத்திற்குக் கொண்டு சென்றார். மோசே, ஆரோன் பார்வோனின் அரண்மனையில் மந்திரவாதிகளின் முன் தேவனின் வல்லமை வெளிப்பட பல அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து காட்டினார் அல்லவா? ஆனால் கடைசியில் மோசேயும், ஆரோனும் செய்த அற்புதங்களையும், அடையாளங்களையும் மந்திரவாதிகளால் செய்ய முடியாமல் போய்விட்டது.

(யாத்திராகமம் 8: 17,18,19) "மனிதர்கள் மேலும் மிருக ஜீவன்கள் மீதும் பேன்கள் உருவாயிற்று. மந்திரவாதிகளும் தங்கள் மந்திர வித்தையினால் பேன்களைப் பிறப்பிக்கும்படிப் பிரயத்தனஞ்செய்தார்கள். அவர்களால் கூடாமல் போய்விட்டது. அப்பொழுது மந்திரவாதிகள் பார்வோனை நோக்கி இது தேவனுடைய விரல் என்றார்கள். அடிமைத்தனத்தில் இருந்த உன்னை பற்பல அற்புத அடையாளங்கள் மூலம் விடுவித்து நடத்துகிறவராக இருக்கிறார்."

(உபாகமம் 8:7,8,9) "உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணுகிறார் அது பள்ளத்தாக்குகளிலும், மலைகளிலுமிருந்து புறப்படுகிற ஆறுகளும், ஊற்றுகளும், ஏரிகளுமுள்ள தேசம். அது கோதுமையும், வாற்கோதுமையும், திராட்சச் செடிகளும், அத்திமரங்களும், மாதாளஞ்செடிகளும் உள்ள தேசம், அது ஒலிவமரங்களும், எண்ணெயும் தேனுமுள்ள தேசம்." அது தாழ்ச்சியில்லாமல் அப்பம் புசிக்கத்தக்கதும் ஒன்றும் உனக்குக் குறைவு படாததுமான தேசம். அது கல்லுகள் இரும்பாயிருக்கிறதும், செம்பு வெட்டி எடுக்கத்தக்க மலைகளுள்ளதுமான தேசம். இவைகளைக் கொடுத்த தேவனை தினம் தினம் ஸ்தோத்தரிக்க மாட்டாயா?

துதிக்கமாட்டாயா?

## தேவன் சீர்ப்படுத்துகிறார். (Corrector)

சபைகள் குற்றம் செய்யும்போது, சபை திட்டுப்படும்போது கர்த்தர் சீர் செய்கிறார். மக்களின் பாவங்களை உணர்த்தி, தண்டித்து, சிட்சைகளை அனுமதித்து எதில் தவறுகிறார்களோ அவர்களை அந்தக் காரியங்களில் சீர்ப்படுத்துகிறார். எரேமியாவின் தன்மை இதுவே.

(எரேமியா 32:23,24) "அவர்கள் அதற்குள் பிரவேசித்து, அதைச் சுதந்தரித்துக் கொண்டார்கள்; ஆனாலும் அவர்கள் உமது சத்தத்திற்குச் செவி கொடாமலும், உமது நியாயப்பிரமாணத்தில் நடவாமலும், செய்யும்படி நீர் அவர்களுக்குக் கற்பித்ததொன்றையும் செய்யாமலும் போனார்கள்; ஆதலால் இந்தத் தீங்கையெல்லாம் அவர்களுக்கு நேரிடப்பண்ணினீர்"

" இதோ, கொத்தளங்கள் போடப்பட்டிருக்கிறது; நகரத்தைப் பிடிக்க வருகிறார்கள்; பட்டயத்தினிமித்தமும், பஞ்சத்தினிமித்தமும், கொள்ளை நோயினிமித்தமும் இந்த நகரம் அதற்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிற கல்தேயரின் கையிலே கொடுக்கப்படுகிறது; நீர் சொன்னபடி சம்பவிக்கிறது; இதோ, நீர் அதைப்பார்க்கிறீர்."

நீர் சீர்ப்படுத்தும்படி இவைகளை அனுமதித்தீர். விசுவாசிகள், தேவ பிள்ளைகள் பாவ குற்றங்களைச் செய்யும்போது தேவன் அவர்களை சீர்ப்படுத்துகின்றார். பணம், பொருள், வசதி, வாய்ப்பு, ஆசீர்வாதங்கள் வந்ததும் அநேகர் தேவனை விட்டு விட்டு அவருக்கு முதுகைக் காட்டுவார்கள். அதனால் தேவனின் முகம் அவர்களை விட்டு விலகிவிடும். அப்பொழுது வேதனைகள், துன்பங்கள், கவலைகள் மாறி மாறி உருவாகும்.

## மனந்திரும்புதலை உருவாக்குவார்:-

மனந்திரும்பாமல், உணர்வடையாமல் இருந்து கொண்டு சிலர் தேவன் எனக்கு உணர்த்தட்டும் என்பார்கள்.
ஏன் எனக்கு இவைகளை அனுமதிக்கிறார்?
ஏன் எனக்கு இந்த அவமானம்?
ஏன் எனக்கு இந்த ஏமாற்றம்?
ஏன் எனக்கு ஆரோக்கியம் இல்லை?
ஏன் எனக்கு செழிப்பு இல்லை? என்று நாம் சிந்திக்கக் வேண்டும்.

அருமையான வாசக நேயர்களே! தேவன் எம்மை சீர்ப்படுத்தும் தேவனாயிருக்கிறார். சிட்சைகளை, சோதனைகளை, பரீட்சைகளை வைத்து எம்மை சீர்ப்படுத்தி, வெற்றியுள்ள வாழ்க்கை நாம் வாழ, ஒரு புதிய திருப்பத்தை, புதிய மாற்றத்தை, புதிய ஆசீர்வாதத்தை உண்டாக்க சீர்ப்படுத்துகிறார் என்பதை மறந்து விடாதீர்கள். அவர் உங்களைத் தண்டிக்கிற தேவனல்ல. சிட்சிக்கிற தேவனுமல்ல. இரட்சிப்பின் உணர்வை உணர்த்துகிறவர். சீர்ப்படுத்துகிறவர்.

ஒரே சிந்தை ஒரே மனமிருப்பின் ஏக சிந்தையுள்ளவர்களாக தேவனை பயத்தோடு சேவியுங்கள். நல்ல இருதயத்தோடும், முழு இருதயத்தோடும் தேவனைத் தேடும்போது பரிபூரண ஆசீர்வாதங்களாலும், புதிய ஆசீர்வாதங்களாலும், புதிய காரியங்களாலும் எம்மை நிரப்புவார். அதன் மூலம் நீங்கள் ஆறுதல் அடைவீர்கள். அவர் ஆறுதல்படுத்துகிறதினால் தான் ஆறுதலின் தேவன் எனப்படுகிறார்.

உங்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்கும் அதிகாரம், ஆறுதல் படுத்தும் தன்மை, தகைமை தேவனிடமிருக்கிறது. எரேமியா 32:1-15 இவ்வசனங்களை வாசித்துப்பாருங்கள் எரேமியா 32:7 மீட்கும் அதிகாரம் எரேமியாவிற்கு கிடைத்தது. எரேமியாவின் ஜெயத்தொனி யூதேயா, பாபிலோன் கையில் கொடுக்கப்படும் என்கிற தரிசன வார்த்தை எரேமியாவின் பெரிய தகப்பனின் மகனாகிய அனாமெயேல் நீ ஆனதோத்திலிருக்கும் என் நிலத்தை நீ

வாங்கிக்கொள். கர்த்தரோ முழு யூதேயாவும் கல்தேயரின் கையில் கொடுக்கப்படும் என்கிறார்.

(எரேமியா 32:15) "ஏனெனில் இனி இந்தத் தேசத்தில் வீடுகளும், நிலங்களும் திராட்சத் தோட்டங்களும் கொள்ளப்படும் என்று, இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றேன்."

(எரேமியா 32:43,44) "மீண்டும் இந்தத் தேசத்திற்கு சிறைப்பட்டுப் போனவர்களைக் கொண்டு வருவேன் என்கிறார்."

(எரேமியா 32:25,26) "நிலத்தை ஒரு விலைக்கிரயமாகக் கொண்டு உனக்கு வாங்கிக் கொள் அதற்குச் சாட்சிகளை வையென்று சொன்னீரே என்றான்."

(எரேமியா 32:27) "இதோ நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்: என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? என்கிறார்."

இஸ்ரவேலை சுட்டெரித்து சிறைப்பிடித்தபோதும் மீண்டும் இந்தத் தேசத்திற்கு உங்களைக் கூட்டிச் சேர்ப்பேன் என்கிறார். எரேமியாவின் தீர்க்கதரிசன வார்தைகள், வசனங்கள் ஜெயத்தின் நடைதொனி, இரகசியங்கள், கிரியையின் மூலம் தன்மைகள், தகைமைகள் வெளிப்பட்டன.

அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர் மீண்டும் கானானைச் சுதந்தரித்தனர் ஆகவே உங்களை ஆறுதல்படுத்துகிற தேவனாயிருக்கிறார்.

| | |
|---|---|
| 1) சிருஷ்டிகர் | இயேசுவின் ஐந்து காயத்தினால் |
| 2) எச்சரிப்பவர் | இந்தத்தன்மைகள் அவருடைய |
| 3) நடத்துபவர் | இரத்தத்தினால் |
| 4) சீர்ப்படுத்துகிறவர் | விடுதலையைத்தரும். |
| 5) ஆறுதல்படுத்துகிறவர் | ஆமென்!!! |

# அழைப்பின் பெயரிலே

# நெகேமியா!

(யாத்திராகமம் 25:2) "இஸ்ரவேல் புத்திரர் எனக்குக் காணிக்கையைக் கொண்டுவரும்படி அவர்களுக்குச் சொல்லு: மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக."

(நெகேமியா 2:20) "பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவார்: அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம்: உங்களுக்கோவென்றால் எருசலேமிலே பங்குமில்லை பாத்தியமுமில்லை: உங்கள் பெயர் விளங்க ஒன்றும் இல்லை என்று அவர்களுடனே சொன்னேன்."

எருசலேம் தேவாலயம் சுட்டெரிக்கப்பட்ட செய்தி கேட்ட நெகேமியாவின் முகம் ராஜாவுக்கு முன் துக்கமுகமாயிற்று ஏன் துக்கம்? என விசாரித்த ராஜா நெகேமியா எருசலேமுக்குப் போகவேண்டிய காரியங்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்தான். ராஜாவின் கரத்தில் உதவி கிடைக்க, அவனது கண்களில் தயவு கிடைக்கக் கர்த்தர் உதவி செய்தார்.

(நெகேமியா 2:17,18) எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக்கிடக்கிறதையும் நாம் இருக்கிற சிறுமையும் பார்க்கிறீர்களே: நாம் இனி நிந்தனைக்குள்ளாயிராதபடிக்கு, எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்தேன்: அப்பொழுது அவர்கள்: எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள். எருசலேம் நகரம் சுட்டெரிக்கப்பட காரணம் யார்?

1) இஸ்ரவேல் மக்கள் தேவனை விட்டுப் பின்மாற்றம் அடைந்தனர்.
2) கர்த்தருக்கு விரோதமாக அருவருப்புக்களை செய்தனர்.
3) அந்நியருடன் பிணைக்கப்பட்டனர்.
4) தம் பிள்ளைகளை மோனோகு என்ற தேவதைக்குத் தீ கடக்கப்பண்ணினார்கள்.
5) அந்நிய தேவர்களை பின்பற்றினார்கள்.

கர்த்தரை விட்டுப் பின்மாற்றம் அடைந்ததினால், தேவனை விட்டு விட்டதின் நிமித்தம், தேவன் எருசலேமை சுட்டெரிக்க இடம் கொடுத்தார். உலக ரீதியில் மக்களாகிய நீங்கள் தேவனுக்கு முன் அருவருப்புகளைச் செய்துவிட்டு, நிந்தனைகளைச் செய்து விட்டு தேவனைக் குற்றம் சாட்டாதீர்கள். வாழ்க்கையில் தோல்வி, வறுமை, கண்ணீர், வேதனை வரும்பொழுது கடவுளின்மேல் தான் அநேகர் குற்றம் சுமத்துவார்கள். அவர்கள் ஜெபங்கள் அந்த வேளையில் உதவி செய்ய மாட்டாது. தேவனின் கரம் அவர்களை விட்டு விலகிவிடும்.

நாம் தடைகளை அகற்றி தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும். நெகேமியா தேவனின் வேலையை ஆரம்பிக்கும் கட்டத்திலே தடை செய்யும்படி தொபியா, சன்பல்லாத்து என்ற இருவரும் அவனுக்குத் தடைகளை உருவாக்கினார்கள். அதேபோல உன் வீட்டு ஆசீர்வாதங்கள், தேவன் மூலம் வரும்போது, பிசாசு தேவனைத்தேட விடாதபடிக்கு பல தடைகளை விதிப்பான். உன் ஊழியப்பாதையை விருத்தியாக்கி தேவன் வர்த்திக்கப்பண்ணும் போது சத்துரு பலவித சதிகளைத் தடைகளைஉண்டுபண்ணுவான். ஆகவேஉன் ஊழியக்கஷ்டத்தை, உன்குடும்பக்கஷ்டத்தைதேவன்அறிகிறார். எல்லாத்தடைகளையும் முறிக்க உபவாசத்தை மேற்கொள்வதும், ஜெபிப்பதுமே சரியான விடை.

நெகேமியாவை அலங்கத்தைக் கட்ட விடாதபடிக்கு சத்துருக்கள் எதிர்த்து நின்றார்கள். நெகேமியா தேவபிள்ளைகளைத் தெரிவு செய்து, வேலையைத் தொடர்ந்தான். அலங்கம் சுட்டெரிக்கப்பட்டு, ஆலயம் இடிக்கப்பட்டு தேசம்

பாழாய்ப்போய்விட்டது என்றபோது நெகேமியா முதல் செய்த வேலை என்ன?

(நெகேமியா 1:4) "இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த்துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி" ஜெபத்தை ஏறெடுத்தபோது, துக்கமும், உபவாசமும், அழுகையும், ஜெபமும் நெகெமியாவின் வேலைக்கு உதவியாக இருந்தது.

"(ஏசாயா 54:17) கர்த்தர் உன் பட்சத்திலிருந்தால் உன்னை விரோதிப்பவன் யார்?"

நெகேமியாவின் மேல் தேவனின் கரம் இருந்தது. தேவனின் கரம் சபையில் இருக்கும்போது சபையின் பாவம் நீங்கும், தடைகள் நீக்கப்படும், குடும்பங்களில் ஆசீர்வாதம் தங்கும். சபையில் சந்தோஷமும், களிகூருதலும், மகிழ்ச்சியும், ஆர்ப்பரிப்பும், ஆனந்தமும் உண்டாகும்.

இப்படியாக நடக்க வேண்டுமானால் (யோவேல் 2:12) "ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." நெகேமியாவிற்கு அனைத்து வசதிகளும் இருந்தது. ஏன் அவன் அழவேண்டும்? ஏன் அவன் துக்கிக்க வேண்டும்? ஏன் அவன் உபவாசிக்க வேண்டும்? ஏன் அவன் பரலோகத்தின் தேவனைத் தேட வேண்டும்? தேவன் உத்தம இருதயம் உள்ளவனிடத்தில், மனப்பூர்வமாய்க் கொடுப்பவனிடத்திலுமே எனக்குக் காணிக்கையை வாங்கு என்றார். நெகேமியாவிற்கு தேவனின் பாரம் இருந்தது. தேவனின் சுமை இருந்தது. உனக்காக உன் பாடுகளையும், பாரங்களையும், சுமைகளையும் சுமக்கவே தேவாதி தேவன் சிலுவையில் பட்ட பாடுகளைச் சற்றுச் சிந்தித்துப்பாருங்கள். நீயும் உன் குடும்பமும் மகிழ்ச்சியாக, சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதால் அவர் கெத்சமெனேயில் பட்ட பாடுகள், துயரங்கள் எத்தனை? என்பதை சிந்தித்துப்பார். யோசித்துப்பார். உலகம்,

உற்றார் உன்னை வெறுத்துத் தள்ளின போதும் தேவன் உன்னைத் தள்ளாதவராக அணைத்த அன்பின் சிலுவைநேசத்தின் அன்பை எண்ணிப்பார். உனக்காக அல்லவா? தன் இளவயதியின் வாலிபத்தைத்துறந்து, தியாகத்தின் பலியானார்.

1) கன்னத்தில் அறைந்தார்களே!
2) கண்ணைக் கட்டினார்களே!
3) தாடி மயிரைப் பிய்த்தார்களே!
4) முள் கிரீடம் வைத்தார்களே!
5) கையிலும் காலிலும் ஆணிகள் அடித்தார்களே!
6) விலாவிலே ஈட்டியினால் குத்தினார்களே!

இத்தனையும் யாருக்காக? உனக்காக அல்லவா? உன் மீறுதல்களும், அக்கிரமமும் மிஞ்சி விட்டதினால் தன் சந்ததிக்குள் வந்தவர்களை மீட்க அவஸ்தைப்பட்டு நிந்தனைக்கு உட்பட்டாரல்லவா? தொடர்ந்து பாவம் செய்யாதே யாவற்றையும் புறம்பே தள்ளிப் போடுங்கள். உன் இருதயத்தின் நோக்கம் சிந்தனையை தேவன் அறிகின்றார். (நெகேமியா 2:12) "நான் சில மனுஷரைக் கூட்டிக் கொண்டு, ராத்திரியில் எழுந்து நகர சோதனை செய்தேன்: ஆனாலும் எருசலேமுக்காகச் செய்யும்படி என் தேவன் என் மனதிலே வைத்ததை நான் ஒருவருக்கும் அறிவிக்க வில்லை: நான் ஏறிப்போன மிருகமே அல்லாமல் வேறொரு மிருகமும் என்னோடிருந்ததில்லை."

தேவனின் வேலைத்திட்டம் என் மனதில் இருந்தது. தேவனின் கரம் நெகேமியாவின் மேல் இருந்தமையால் காரியங்களை அவன் திட்டம் தீர்மானம் நிறைவேறக் கர்த்தர் உதவி செய்தார். தடைகள் வந்தது. விரோதிகள் எழும்பினார்கள் சத்துரு வழிமறித்தான். நெகெமியாவின் முன் தேவ சமூகம் செயற்ப்பட்டது. தனிமனிதனாகக் கர்த்தருடைய நிந்தையை அகற்றினான். தனிமனிதனாக தேவனின் குறைவுகளை நிவிர்த்தி செய்தான். அலங்கத்தைக் கட்ட தேவன் அவனைத் தெரிவு செய்தார்.

அருமையானவர்களே தனிமனிதனாகவே உங்களைத் தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய அழைக்கிறார். ஈசாக்கைப் பலி செலுத்த ஆபிரகாம் காரணம் கேட்கவில்லை, ஆலோசனை கேட்கவில்லை. அன்னாள் சாமுவேலை தேவனுக்கென்று ஆலயத்தில் கொண்டுபோய் விட எல்க்கானாவிடம் ஆலோசனை கேட்கவில்லை. ஆகவே தனி மனிதனாக, தனி மனுஷியாக உன் துயரத்தைக் காட்ட, செயல்பட நீ ஆயத்தமா? யாப்போக்கு நதிக்கரையிலே யாக்கோபைத் தனி மனிதனாகத் தான் தேவன் சந்தித்தார். போராட்டங்கள் வந்தும் வெற்றி பெற்றான். ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான் அல்லவா?

நமது வாழ்வில் எருசலேமின் வாசல் என்று அழைக்கப்பட்ட அடைக்கலப்பட்டணம், பரிசுத்த நகரம், அப்பத்தின் வீடு, புதிய எருசலேம் என்று அழைக்கப்படுவதனால் அந்த அர்த்தத்தோடு புதிய எருசலேமாகிய இயேசுவின் புதிய அபிஷேகத் தைலம் உங்கள் மேல் ஊற்றப்படுவதாக. புதிய கிருபைகளை, புதிய புதிய ஆசீர்வாதங்களை தினமும் காணும்படி தேவன் தன் வேலைத்திட்டத்திற்கு உங்களை அழைக்கிறார்.

அழைப்பின் பெயரிலே உறுதியானவர்கள்
அழைப்பின் பெயரிலே அதிசயங்களைக் காணுவார்கள்
அழைப்பின் பெயரிலே ஆனந்தத்தைப் பெறுவார்கள்
அழைப்பின் பெயரிலே ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள்.

(1 தீமோத்தேயு 3:13) "இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்."

நன்றாய், நல்லதாய், மிகுந்த இந்த மூன்று சொற்களைக் கவனிக்கிறோம் வாழ்க்கையில் நல்ல காரியங்களைச் செயற்படுத்தும் நல்ல வீரர்களாக, உதவிக்காரர்களாக இருக்க வேண்டும். தீமோத்தேயுவுக்குப் பரிசுத்த பவுல் ஆலோசனைக் கடிதம் ஒன்றை வரைகின்றார். உதவிக்காரனுடைய ஊழியத்தைச்

செய்கிறவர்கள் நன்றாய் தங்கள் வேலையைச் செய்ய அறிந்திருக்க வேண்டும். நன்றாய்ச் செய்தால் நல்ல நிலையை அடைய முடியும். நன்றாய்ச் செய்யா விட்டால் கீழான கெட்ட நிலையைத் தான் அடையமுடியும். நல்லதுக்கு எதிர்ச்சொல் கெட்டது. கீழான நிலைமை எம்மை ஆட்கொண்டு விடும். தேவன் எம்மைக் கிருபையில் தெரிந்து கொள்கிறார் ஆண்டவருடைய வேலையை நன்றாய் செய்ய மனம் இருக்க வேண்டும். பவுல் கூறுகிறார்.

(11 தீமோத்தேயு 4:7) "நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் நல்ல போராட்டம் என்று சொல்லப்படுகிறது."

சுத்த மனச்சாட்சியிலே விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். விசுவாசத்தைப் சோதிக்க பரீட்சைகள் உண்டாகும். ஆகவே (1தீமோத்தேயு 3:10) "மேலும் இவர்கள் முன்னதாக சோதிக்கப்படவேண்டும் குற்றம் சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரனாக ஊழியம் செய்யலாம்." தீமோத்தேயு உடன் உதவிக்காரருக்குள்ளே உண்மையாக, நன்றாய் உழைக்கும் ஊழியக்காரனாக இருக்கிறான் அதனால் அநேக உத்தரவாதங்களை கூறும் தொடர்களைக் காணமுடியும். குற்றம் தவறு தங்களுக்கிடையே இருக்கக்கூடாது. முறுமுறுப்பு, தர்க்கம், கலகம் இவைகள் முக்கியமாக இருக்கக் கூடாது.

(பிலிப்பியர் 2:19-21) அன்றியும் நானும் உங்கள் செய்திகளை அறிந்து மனத்தேறுதல் அடையும் படிக்குச் சீக்கிரமாய் தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பலாமென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் நம்பியிருக்கிறேன். அதேனென்றால் உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்தில் இல்லை. என்னைப்போல நல்ல மன நிலை இருக்க வேண்டும் மன ஆறுதலைத் தரக்கூடியவன் அவன் ஒருவனே. அவன் தனக்கென ஒன்றையும் தேடாமல் கிறிஸ்து இயேசுவுக்கு உரியவைகளைச் செய்கிறவனாக இருக்கிறான் என்று அறிக்கையாக எழுதுகிறேன். தன் அனுபவங்களைப் பரிசுத்த பவுல்

தீமோத்தேயுவைப்பற்றி (சீனியர் பாஸ்டர்) பவுல் இப்படியாக எழுதுகிறார்.

சபையின் நிர்வாகம் சபை மக்களின் நலங்களை அறிந்து சரியான தகவல்களை உண்மையாக தரக்கூடியவன் அவன் ஒருவனே காரியங்களை உண்மையாக பேசுபவனும், செயல்படுத்துபவனும் அவனேயாகும். எனக்கு உதவி உடன் ஊழியனாக மன ஆறுதலையும், தேறுதலையும் செயல்படுத்துகிறவன் என் சிந்தையுள்ளவன். ஏக சிந்தையுள்ளவர்களாக இருத்தல் அவசியம். தாழ்மையுள்ளவர்களை விசாரிக்கிறான் உண்மையாய் மக்களிடையே தாழ்மையாக விசாரிக்கப்படவேண்டும். உண்மையான நற்செய்திகளை, அறிவிக்கிறவனாக இருக்க வேண்டும். நம்முடைய தேவன் தாழ்மையுள்ளவர்களை நோக்கிப் பார்க்கிறார். ஆண்டவர் எமக்குக் கொடுத்த வேலையை சரியாகச் செய்கிறோமா? என்று கர்த்தர் எம்மை நோக்கிப் பார்க்கிறார். நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தீமோத்தேயு பவுலுக்கு சரியான, உண்மையான தகவல்களை அறிக்கை செய்கிறவனாக இருந்தான்.

(பிலிப்பியர் 2:20) "என்னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி வேறுயாரும் இல்லை என்று நல்லறிக்கை செய்கிறான். எஜமான் தலைவனுக்குள் என்ன நல்ல மனநிலை இருக்கின்றதோ அதேபோல் சீஷனுக்கும் அதே மன நிலை இருக்கவேண்டும்."

(ரோமர் 9:1) "எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மன வேதனையும் உண்டாயிருக்கிறது."

என்ன மனவேதனை சகோதரன், சகோதரி, குடும்பம், பிள்ளைகள், உற்றார், நண்பர், கிராமம், பட்டணம், தேசத்தின் ஜனம் இரட்சிப்புக்குள் வரவேண்டும் என்ற இடைவிடாத மனவேதனையாகும்.

எலியா கார்மேல் பர்வதத்திலிருந்து கத்திக் கத்தி அழுகிறான் மழை வரவேண்டுமென்று தேவனிடத்தில் முழங்கால் படியிடுகிறான்.

கத்துகிறான், புலம்புகிறான், கதறுகிறான், துயரப்படுகிறான், மனவேதனைப்படுகிறான். ஆனால் அவன் உடன் உதவிக்காரன் கேயாசியோ, அவன் சிந்தனை, அவன் நோக்கம் வேறு, யோசனை வேறு அவன் அழவேயில்லை, கதறவில்லை இவை சரித்திரத்தில் எழுதப்படவில்லை. அக்கறையற்ற ஊழியக்காரன், உதவியற்ற ஊழியக்காரன்.

இயேசு கெத்சமெனேயில் இரத்தம் வியர்வாய் கொட்டும்படி கதறி அழுகிறார். இடைவிடாத மனவேதனையுடன் விழித்திருந்து ஜெபிக்கிறார். சோர்ந்துபோகாமல் ஜெபிக்கிறார். ஆனால் அவருக்குப் பக்கத்தில் நின்ற எல்லா சீஷர்களும் கனநித்திரையின் ஆவியினால் தலையணையுமில்லை, போர்வையுமில்லை. இருக்கிற இடத்தில் கனநித்திரை. இயேசுவின் வேதனை அவர்களுக்குப் புரியவில்லை. அவருடைய மனவேதனையை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

ஆனால் இங்கே இடைவிடாமல் சாகிறேன் என்று பவுல் கூறுகிறான். அனுதினமும் சிலுவைக்குரிய பாடுகளை இடைவிடாது சந்திக்கிறான். ஆத்தும ஆதாய சிந்தையுடன் பவுல் சவால்களை எதிர்நோக்குகின்றான். (11 கொரிந்தியர் 4:8,9) "நாங்கள் எப்பக்கத்தில் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை. கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை துன்பப்படுத்தப்பட்டும் கை விடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை."

ஆத்தும ஆதாயத்திற்காகவே தேவன் நம்மை அழைக்கிறார். தைரியமுள்ள உதவி உடன் ஊழியக்காரன் என்னதான் வந்தாலும் சோர்ந்துபோகமாட்டான். என்ன வேதனை வந்தாலும் தடுமாறமாட்டான். தைரியமாக இருத்தல் அவசியம்.

(11 கொரிந்தியர் 11:29) "ஒருவன் பலவீனனானால் நானும் பலவீனனாகிறதில்லையோ ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ"
ஆத்துமா காணாமல் போனால்,
கர்த்தரை விட்டு போகும்போது,

பாவத்தில் ஆத்துமா புரளும்போது,
மனந்திரும்பாமல் ஓடும்போது,
கர்த்தரை விட்டுத் தூரம் போகும்போது,
மனம் எரிகிறோம் சேற்றில் புதையுண்டதை எடுத்து நாற்றம் போகக் கழுவி சுத்தப்படுத்தி, ஆசீர்வாதமான வாசனை வீசவேண்டும் என்று முயற்சி எடுத்து அது கடவுளை விட்டுத் தூரம் போகும்போது மன வேதனை உண்டாகிறது.

பவுலைப்போல மனதுள்ளவனை இன்று கர்த்தர் தேடுகிறார். சீர்கெட்ட நிலை இருக்குமானால் நல்ல நிலையை அடைய முடியாது. நல்ல மனதுள்ளவர்களாக வேண்டும்.

(பிலிப்பியர் 2:21) "மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல் தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்."

நல்ல நிலையை (Promotion) அடைய வேண்டுமானால் கிறிஸ்துவுக்குரியவைகளையே தேட வேண்டும். இயேசுவுக்கு ஜனக்கூட்டம் பெருகிக் கொண்டே வந்தது. அவர் போகும் இடமெல்லாம் ஜனத்திரள். ஆனால் சீஷர்கள், உதவிக்காரர்கள் பெருகவில்லை காரணம் பூமிக்குரியவைகளை, தமக்குரியவைகளை தேடினார்கள். ஆண்டவரிடம் வரிப்பணம் கேட்டபோது பேதுருவுக்கு ஆண்டவர் கூறினார். நீ போய்க் கடலிலே தூண்டிலைப் போட்டு மீனைப்பிடித்து அதன் வாயினுள் இருக்கும் ஒரு வெள்ளிப்பணத்தை எடுத்து உனக்காகவும், எனக்காகவும் கொடு என்றார். அந்த நாட்களில் பணக்கஷ்டம் இருந்திருக்கலாம். காலம் செல்லச்செல்ல சீஷனாகிய யூதாசுக்குப் பணத்தின் பொறுப்பு கொடுக்கப்பட்டது. ஆரம்ப நாட்களில் வறுமையில் செயற்படுவார்கள் காலம் செல்லச்செல்ல சிலருடைய நிலைமைகள் மாறும்போது தேவனை விட்டுத் தூரமாகப் போய்விடுவார்கள்.

யூதாசுக்கு Treasurer வேலை கொடுக்கப்பட்டது பணத்தைச் சுமக்கும் வேலை கொடுக்கப்பட்டது. அவ்வளவு பெரிய வருவாய்க்கும் பொறுப்புள்ளவனாக்கப்பட்டான். பொருளாசை

கொண்டவனாக மாறினான். தனக்குரியவைகளை மேன்மையாக எண்ணி இயேசுவுக்குரியவைகளை விட்டு, அநீதத்தின் கூலியை வாங்கி தனக்கொரு நிலத்தைச் சம்பாதித்தான். எனக்கு என்ன கிடைக்கும் என சிலர் அலைவார்கள். பேதுருவும் ஒரு நாள் அப்படித்தான் பேசினான் எமக்கு என்ன கிடைக்கும்? எமக்கு என்ன லாபம்? என்று கேட்டான் இந்த மனநிலையுடன் இருப்பின் நல்ல நிலைமையை அடைய முடியாது.

யூதாஸ் பக்கத்திலே இருந்து ஆண்டவரையே முப்பது வெள்ளிக்காசுக்குக் காட்டிக் கொடுத்தான். எஜமானையே விற்றுவிட்டான். சத்தியத்தைப் பணத்திற்கு விற்கிறார்கள். அவர்களின் பின்பகுதியான நிலை பயங்கரமாகும் என்பதையும் யுதாசுக்கு நடந்தவைகளை வைத்து நாம் சிந்தித்துக்கொள்ள வேண்டும்.

அனனியா சப்பீராளை அறிவீர்கள் பணத்திற்காகப் பரிசுத்தாவியைத் துக்கப்படுத்தினார்கள் கடைசியில் வந்தது மரணம். யூதாஸ் பணத்திற்காக ஓடினான் மனச்சாட்சியிலே குத்துண்டு தலைகீழாக குடல் சரிந்து இறந்தான்

(பிலிப்பியர் 2:22) "தகப்பனுக்குப் பிள்ளை ஊழியம் செய்வதுபோல அவன் என்னுடன் கூடவே சுவிசேஷத்தினிமித்தம் ஊழியம் செய்தான் என்று அவனுடைய உத்தம குணத்தை அறிந்திருக்கிறீர்கள்."

துர் மனச்சாட்சியோடு தேவாவிக்கு விரோதமாக நடந்தவர்கள் பட்ட வேதனைகள் எத்தனை அதிகம். யூதாஸ் எஜமானைக் காட்டிக் கொடுத்ததால் அவன் துர்மனச்சாட்சியை உடையவனாகவே இருந்திருக்கிறான் என்பதை காணக்கூடியதாக இருக்கிறது. பணம் எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது. தேவ ராஜ்யம் புசிப்பும், குடிப்புமல்ல. வல்லமையும், பெலனுள்ளதாகவும் இருக்கிறது அதைத் தொடர்வோமாக!

ஆமென்!!!

# பயப்படவேண்டாம் உன்னைக் காக்கும்படி நான் உன்னுடனே கூட இருக்கிறேன்.

(எரேமியா 1:5) "நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்."

எரேமியாவோடு கர்த்தர் பேசினார். இந்த எரேமியா யார்? பென்ஜமின் தேசத்திலுள்ள ஒரு ஆசாரியனுடைய மகன்.

(எரேமியா 1:6,7) ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன்; சிறு பிள்ளையாயிருக்கிறேன். ஆனாலும் கர்த்தர்: நான் சிறு பிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய் நான் உனக்கு கட்டளையிடுகிறவைகளை எல்லாம் நீ பேசுவாயாக என்கிறார்.

(எரேமியா 1:9,10) கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு: இதோ என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன் பார், பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் உன்னை நான் இன்றைய தினம் ஜாதிகளின் மேலும், ராஜ்யங்களின் மேலும் ஏற்படுத்தினேன் என்று கர்த்தர் என்னுடனே சொன்னார்.

உயர்மட்டத்தில் உள்ளவர்களான தீர்க்கதரிசிகளில் எரேமியாவும் ஒருவனாகும். எருசலேம் ஆலயத்திலே யூதாவுக்கும் தீர்க்கதரிசனம் சொல்லப்படுகிறது.

(எரேமியா 19:15) இதோ, நீங்கள் என் வார்த்தைகளைக் கேளாதபடிக்கு உங்கள் கழுத்தை கடினப்படுத்தினபடியினால் நான்

இந்த நகரத்திற்கு விரோமாய்ச் சொன்ன எல்லாத்தீங்கையும் இதின்மேலும் இதற்கடுத்த பட்டணங்களின் மேலும் வரப்பண்ணுவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

(எரேமியா 20:1,2) "எரேமியா இந்த வார்த்தைகளை தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறதை ஆசாரியனான இம்மேருடைய குமாரனும், கர்த்தருடைய ஆலயத்துப் பிரதான விசாரணைக் கர்த்தனுமாகிய பஸ்கூர் கேட்டபோது, எரேமியா தீர்க்கதரிசியை பஸ்கூர் அடித்து, அவனைக் கர்த்தருடைய ஆலயத்திலே பென்யமீன் கோத்திரத்தாரைச் சேர்ந்த மேல் வாசலில் இருக்கும் காலறையிலே போட்டான்."

(எரேமியா 20:4,5) "இதோ உன்னையும், உன் எல்லாச் சிநேகிதரையும் பயத்துக்கு ஒப்புக் கொடுக்கிறேன்; உன் கண்கள் காண இவர்கள் சத்துருக்களின் பட்டயத்தால் விழுவார்கள்; யூதா அனைத்தையும் நான் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பேன்; அவன் அவர்களை சிறப்பிடித்து, சிலரை பாபிலோனுக்குக் கொண்டுபோய், சிலரை பட்டயத்தால் வெட்டிப்போடுவான். இந்த நகரத்தின் எல்லாப்பலத்தையும், அதின் எல்லா சம்பத்தையும், அதின் அருமையான எல்லா பொருட்களையும், யூதா ராஜாக்களின் எல்லாப் பொக்கிஷங்களையும், நான் அவர்கள் சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன்; அவர்கள் அவைகளைக் கொள்ளையிட்டு, பாபிலோனுக்குக் கொண்டுபோவார்கள்."

(எரேமியா 20:6) "பஸ்கூரே என்னை அடித்து விட்டாய் தேவன் எனக்குத் துணை நிற்பதை நீ அறியவில்லை. நீயும் உன் வீட்டில் வாசமாயிருக்கிற யாவரும் சிறை பட்டுப் போவீர்கள். உன் சிநேகிதர் கள்ளத்தீர்க்கதரிசனம் சொன்னவர்கள் யாவரும் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போய் அங்கே மரிப்பீர்கள் திரும்பி வருவதில்லை மடிவீர்கள் என்றார். எரேமியாவை காவல் அறையிலிருந்து விடுதலை பண்ணிய பின்பும் தேவன் சொன்னதை மீண்டும் பயமில்லாமல் கூறுகிறான்."

## சபை விசுவாசிகள், தேவ தாசர்கள், ஊழியர்கள் கவனிக்கும் படியாக:-

ஆண்டவரே என்னை இணங்கப்பண்ணினீர் இணங்கினேன். நான் சிறு பிள்ளை ஒன்றுமே அறியேன் என்றபோது நீ போ என் வாயில் உம் வார்த்தையை வைப்பேன் என்றீர் அதனால் இணங்கினேன். நீர் என்னுடனே கூட இருப்பேன் என்றீர். அதனால் பயப்படாமல் சென்றேன். ஆனாலும் கர்த்தர் கொடுக்கும் பாதுகாப்பு என்று எப்போ பேச ஆரம்பித்தேனோ அன்று முதல் கதறுகிறேன் கொடுமையும், பாழ்கடிப்புமாயிற்று. கர்த்தருடைய வார்த்தை எனக்கு நிந்தையும் பரிகாசமுமாயிற்று.

(எரேமியா 20:9) ஆதலால் நான் அவரை பிரஸ்தாபம் பண்ணாமலும் இனி கர்த்தருடைய நாமத்தை பேசாமலும் இருப்பேன் என்றேன்; ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருந்தது; அதை சகித்து இளைத்துப்போனேன்; எனக்குப் பொறுக்கக் கூடாமற்போயிற்று.

(எரேமியா 20:10) "அநேகர் சொல்லும் அவதூரைக் கேட்டேன், பயஞ்சூழ்ந்திருந்தது; அறிவியுங்கள், அப்பொழுது நாங்கள் அதை அறிவிப்போமென்கிறார்கள்; என்னோடே சமாதானமாயிருந்த அனைவரும் நான் தவறிவிழும்படி காத்திருந்து: ஒரு வேளை இணங்குவான், அப்பொழுது அவனை மேற்கொண்டு, அவனில் குரோதம் தீர்த்துக்கொள்வோம் என்கிறார்கள்."

(எரேமியா 20:11) பாதுகாப்பு கர்த்தர் எனக்குப் பாதுகாப்பு 1) எரேமியாவின் பாடுகள் 2) புலம்பல் 3) தைரிய பெலன் எரேமியா தன் தேவன் பயங்கரமான பராக்கிமசாலியாக இருக்கிறார் என்றான். தன்னைச் சமாதானப்படுத்தி புலம்பிய வேளையிலும் தேவன் தனக்கு முழு பாதுகாப்பு என்று தைரியமான ஒரு பெலத்தை பெறுகிறான்.

என்னோடு போராடுகிறவர்களுக்கு கர்த்தர் நித்திய இலச்சையை உண்டாக்குவார். துன்பப்படுத்துகிறவர்கள்

மேற்கொள்ளாமல் 1) இடறுவார்கள் 2) தம் காரியம் வாய்க்காததினால் மிகவும் வெட்கப்படுவார்கள் 3) மறக்கப்படாத நித்திய இலச்சை அடைவார்கள். ஆகவே நீதிமானைக் காண்கிறேன் என்கிறார். உள்ளும் புறமும் சோதிக்கப்படுகிறவர் ஆகுவீர் உள்ளிந் திரியங்களையும், இருதயங்களையும் ஆராயும் தேவனிடம் எரேமியா, என் காரியத்தை உம்மிடத்தில் காட்டிவிட்டேன் என்றான். எரேமியா சுயமாகப் பேசவில்லை. தேவன் சொல்லுகிறதை மட்டும் கூறினான் இருட்டில் யாரும் செல்ல முடியாத காவலறையில் போடப்பட்ட எரேமியாவின் வார்த்தைக்குப் பின்னாக அவனை 1) நேசித்தவர்கள் 2) சிநேகிதர்கள் 3) சமாதானமாயிருந்தவர்கள்.

1) பிரிவின் பாடுகள் இவர்கள் கடந்து விட்டனர் பிரிவினையின் ஆவி கிட்டேவரும் உங்களையும் உங்கள் நட்பையும் பிரிக்கும்படி சத்துரு கங்கணம் கட்டி கொண்டு எத்திசையிலும் வருவான்.

2) பாடுகள் தாங்க முடியாதபடி வரும்போது சோர்வின் ஆவி பிடித்துவிடும் சோர்வின் ஆவியினால் வேதம் வாசிக்க முடியாது, ஜெபம் செய்ய முடியாது, தியானம் செய்ய முடியாது, தேவனுக்கு செய்ய வேண்டும் என்ற வாஞ்சை உண்டானாலும் அதை செய்யக்கூடாதபடி சோர்வுகளைக் கொடுத்து தாமதமாக்கும் சூழ்நிலையை பிசாசு உருவாக்குவான்.

3) நிந்தனையின் ஆவி எல்லோரும் ஒரேயொருவரை நிந்தித்தார்கள். அவர்களை நித்திய நிந்தனை இலச்சைக்கு தேவன் ஒப்புக் கொடுத்தார். நிந்திப்பவர்கள் மேல் நிந்தனை உண்டாகும். எரேமியா ஏமாற்றம், பாடுகள் இவைகளை இப்படியாக கூறி, புலம்பி அழுதவனாக இருந்தபோதும் என் தேவன் பயங்கர பராக்கிரமசாலி என்கிறான். கடந்து சென்ற பாதைகள், பாடுகள் இருந்தாலும் விசுவாசம், நம்பிக்கை, தைரியம், சமாதானம் உண்டென்கிறான். தேவனை உறுதியாகப் பின் பற்றினபடியினால் தேவன் பராக்கிரமசாலியாக இருந்து பாதுகாப்பார் என்கிறான். யாரைக் குறித்தும் பயப்படவேண்டாம் எதிராளியைக்குறித்து பயப்பட வேண்டாம் தேசத்தைக் குறித்துப் பயப்படாதே மக்களைகுறித்துப் பயப்படாதே.

(ஏசாயா 40:9,10) கர்த்தருடைய சுவிசேஷகியே உரத்த சத்தமிடு. அநேகருக்கு உரத்த சத்தமிட பயம். பயப்படாதே என்கிறார் சத்தமிட்டு யூதா பட்டணங்களை நோக்கி இதோ உன் தேவன். கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருகிறார் அவர் தமது புயத்தினாலே அரசாளுவார். இதோ அவர் அளிக்கும் பலன் அவரோடே கூட வருகிறது. அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்திற்கு முன்பாக செல்கிறது. எரேமியாவின் தேவன் நம் தேவன்.

(ஏசாயா 42:13) கர்த்தர் பராக்கிரமசாலியைப்போல் புறப்பட்டு, யுத்த வீரனைப்போல் வைராக்கியமூண்டு, முழங்கி கெர்ச்சித்து, தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார். நல்மனச்சாட்சியுடன் வாழ்பவர்களுக்கு தேவன் உதவி செய்வார். என் காரியத்தை உம்மிடத்தில் சாட்டி விட்டேன் என்றான்.
பொலிசா? நீதிமன்றமா?
கடனா? துயரமா? துன்பமா?
கவலையா? கண்ணீரா? புலம்பலா?
பயமா? நிந்தையா? அவதூறா?
உறுதியான தீர்மானம் எடுங்கள்.

(எரேமியா 20:13) கர்த்தரைப் பாடுங்கள், கர்த்தரைத் துதியுங்கள்; அவர் எளியவனுடைய ஆத்துமாவை பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவிக்கிறார். கர்த்தர் பராக்கிரம செயல்களை உங்கள் வாழ்க்கையிலும் செய்வார். கர்த்தர் கெர்ச்சித்தார், முழங்கினார் பாபிலோன் கல்தேயர் வசம் யூதா எருசலேம் சிறைப்பட்டு வெட்கப்பட்டு அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டு மாண்டனர். மிகுதியானவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு பாபிலோனுக்கு கொண்டுபோகப் பட்டார்கள்.

கர்த்தரைத் துதியுங்கள் (ஏசாயா 42:12) தீவுகளில் அறிவிப்பீர்களாக அவர் மகிமையை. ஆகவே கர்த்தரைத் துதிக்கும்படி தீவுகளுக்கு அறிவுரை கொடுங்கள், அறிவியுங்கள்.

ஆமென்!!!

# கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்டவர்கள்.

(ரோமர் 16:12) "கர்த்தருக்குள் பிரயாசப்படுகிற திரிபேனாளையும், திரிபோசாளையும் வாழ்த்துங்கள். கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பெர்சியாளை வாழ்த்துங்கள்."

இந்த பெண்களுடைய குணாதிசயங்களையும், கர்த்தருக்குள் அவர்களின் பிரயாசங்களையும் காணக்கூடியதும், கிரியை அளித்ததுமான செயற்பாட்டின் பிரயாசையும் விளக்குகின்றது. அநேகர் பிரயாசப்படுவார்கள் தான் ஆனால் மாம்ச நோக்கம், சுய நோக்கத்துடன் சேர்ந்து விடும். ஆனால் இங்கேயோ பவுலுக்காக முதல் சீஷத்துவத்திலே இடம் பெறும் பவுலின் ஊழியத்திலே இவைகள் குறிப்பிடப்படுகிறது.

இந்த கிரேக்க பெயர்களைக் கொண்ட அர்த்தம் ஐசுவரியம் என்ற பொருள் திரிபேனாள், திரிபோசாள், பெர்சியாள் திரிபேனாள், திரிபோசாள், என்பதன் அர்த்தம் இரட்டையர்கள் என விளக்கம் கொடுக்கப்படுகிறது. ஆனால் அதை சரியாக அறியமுடியவில்லை. ஆனால் வசதி கொண்டவர்களாக இருந்தபடியால் பவுலின் முதல் தரமான ஊழியங்களுக்கு ஒத்தாசை கொடுக்கப்பட்டது.

(ரோமர் 16:6) "எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள். முன்னோடியான ஊழியங்களை இந்த சகோதரிகள் செய்திருக்கிறார்கள். மிகவும் மிகவும் என்று சொல்லப்படுகிறது. பிரயாசை என்று சொல்லப்படுகிறது."

இயேசுவின் சிலுவைப் பாடுகளின்போது அவரோடு கூட இருந்த பதினொரு சீஷர்களும் அவரை விட்டு ஒளிந்து கொண்டார்கள் மறுதலித்தார்கள். ஆனாலும் மரியாளும், யோவானும், சூசன்னாளும் கடைசிவரை கூடவே நின்றார்கள்.

ஆனால் அரிமத்தியா யோசேப்பு அவருடைய சடலத்தை பெறவேண்டி இருந்தது. தேவனுடைய உயிர்த்தெழுதலின் சுவிசேஷத்தை மகதலேனா மரியாள் மூலமே முதல் நற்செய்தி பதினொரு சீஷர்களுக்கும் அறிவிக்கப்பட்டது. உயிர்த்தெழுந்த இயேசுவை, உயிர்த்தெழுந்த வல்லமையை முதலில் கண்டது பெண்ணே என்பதில் ஐயமேயில்லை.

## 1) தியாகத்தின் பாடுகள்:-

இயேசுவுக்காக கடுமையான தியாகத்தின் பாடுகள் இருக்கவேண்டும். பேதுரு, யோவான், அந்திரேயா முதல் சீஷராக அழைக்கப்படாலும், ஊழியத்தின் முன்னணியில் நிற்பவன் பரிசுத்த பவுலேயாகும். ஏன்? அவருடைய பாடுகளை யாரும் சந்தித்திருக்கமாட்டார்கள். பாடுகளுடன் பிரயாசை. மிகவும் பிரயாசமான பாடுகளைக் கடந்தவன். பெரிய தியாக வாழ்வு வாழ்ந்தவன். பரிசுத்தத்தின் காரணமாக தேவ கிருபை அவனுடன் கூடவே சார்ந்திருந்தது.

(1கொரிந்தியர் 15:10) நான் தேவ கிருபையிலே இருக்கிறேன். அவர் எனக்கு அருளிய கிருபை வீருதாவாக இருக்க வில்லை அவர்கள் எல்லாரிலும் நான் அதிகமாய் பிரயாசப்பட்டேன். ஆகிலும் நான் அல்ல. என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது. போதகர் எல்லாம் செய்வாரென்று சிற்றூழியர்கள், விசுவாசிகள் வெறுமனையாக இருந்து விடுவார்கள். போதகர் உங்களுக்கு ஆவியின் ஆலோசனையைத் தருவார். அது தவிர மற்ற எல்லா வேளைகளிலும் நீங்கள் உதவி ஒத்தாசை வழங்க வேண்டியவர்களாக இருக்கவேண்டும். மக்களை ஆவிக்குரிய நிலையில் வளர்க்க வேண்டும். அதிக மணி நேர ஜெபங்களைச் செய்யவேண்டும். தேவனுடைய ஐக்கியத்தில் முழுப்பங்குள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

உதாரணம்:- லண்டன் தேசத்திலே ஒரு வயதான தாயார் 17 பிள்ளைகளை அவர் பக்கத்தில் வைத்து காலை 9 மணிமுதல் 10 மணி வரை ஒரு மணித்தியாலமாக ஜெபித்தார்கள். பகல் தியான வேளை, ஜெபம். அதிக மணிநேரம் ஜெபிக்கும் வீராங்கனை என்று

பேரும் புகழும் வாய்ந்த ஒரு தேவ ஊழியர் இந்த Susan Wesly. சிலர் அவரைச் சந்திக்கும்படி வந்தார்கள் மணி அடிக்கப்பட்ட போது, ஒரு சிறு பையன் மாத்திரம் ஓடி வந்தான். அம்மையாரை சந்திக்கும்படி வந்தோம் என்றார்கள். அப்பொழுது அவன் அம்மாவை 10 மணிக்குப் பின்பதாகவே காணமுடியும் என்றான். சரியாக ஒரு மணித்தியாலம் கழித்து மீண்டும் அந்தத் தாயாரைக் காணும்படி வந்தார்கள். தன் ஜெபக்காரியத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். 17 பிள்ளைகளையும் வைத்து ஜெபிக்கிறேன். கர்த்தர் என்னை நடத்துகிறார் என்றார்.

அதன் பிரதி பலனாகத் தான் அந்தக் குடும்பத்திலே இரண்டு ஆண்பிள்ளைகள் ஊழிய அழைப்பைப் பெற்றார்கள். அவர்கள் தான் ஜோன் வெஸ்லி, சால்ஸ் வெஸ்லி என்னும் Prospitartion சபை மெதடிஸ்த சபையை லண்டனிலே ஸ்தாபித்தவர்கள். பொய்யான சத்தியத்தை எதிர்த்து Protest பண்ணி Prospitartion சபையைக் கட்டினார்கள். ஒரு மகள் மிஷனரியாக தேசங்களுக்குக் கடந்து போனாள் தாயாரின் ஜெபம் அவர்களை ஊழியக்காரர்களாக உருவெடுக்கச் செய்தது. ஆகவே அதிக உபத்திரவங்கள், அவமானங்கள், நிந்தனைகள், பாடுகள் மத்தியிலே கடந்துபோகும்போது தேவ கிருபையின் மூலம் பாதுகாக்கப்பட முடியும். பராமரிப்பைப்பெற முடியும்.

## 2) நிந்தனை அவமானத்தின் பாடுகள்:-

பவுல் பிரயாசைப்படுகிறவனாக இருந்தவன்

" (1தீமோத்தேயு 4:10) இதினிமித்தம் பிரயாசப்படுகிறோம், நிந்தையும் அடைகிறோம்; ஏனெனில் எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்."

(11 கொரிந்தியர் 11:27) பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேக முறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும் அநேக முறை உபவாசங்களிலும் குளிரிலும் நிர்வாணத்திலும் இருந்தேன்.

சிலர் கடவுளுக்கு ஒரு சிறிய காரியத்தைச் செய்துவிட்டு அதிகமாக கஷ்டப்படுகிறோம் கஷ்டப்படுகிறோம் என்கிறார்கள். ஆனால் அவர்களோ பவுல் கடந்து வந்த பாதைகளையும், பாடுகளையும் கடக்கவில்லை. பிரயாசம் விருதாவாகவில்லை. இந்த இலேசான உபத்திரவம் அதி சீக்கிரத்தில் நீங்கிவிடும். திரிபோசாள், திரிபேனாள் பெர்சியாள் கர்த்தருக்காக மிகவும் பிரயாசப்பட்டவர்கள். வேதனையைக் கண்டவர்கள். மிகவும் அவமானம் நிந்தையில் பிரயாசப்பட்ட பவுல் கி.பி. 64ம் நூற்றாண்டில் சிறையில் அடைக்கப்பட்டான். அது இருளான, வெளிச்சம் இல்லாத, யாருமே செல்லமுடியாத, காற்றுப்போக முடியாத, மூச்செடுக்க முடியாத அறை. ரோமாபுரி சிறையிலிருந்து மூன்றுமைல் தூரத்திலுள்ள அக்குவாசாவ் என்ற நீரோ மன்னன் இருக்கும் அரச மாளிகையின் காவல் கிடங்கில் அனுமதிக்கப்பட்டான். யுத்த சேவகர் இழுத்துச் சென்று முழங்கால் படியிட்டு இருக்கும்படி கூறினார்கள். நீரோ மன்னன் மூலம் அவன் தலை சிரைச்சேதம் செய்யப்பட்டது. எனவே எப்படிப்பட்ட பாடுகள், நிந்தனைகள், அவமானங்கள் மூலம் தேவ பிள்ளைகள் கடந்து சென்றிருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். அவனது சரீரத்தை லூசினா என்ற பெண் ஒரு தோட்டத்தில் அடக்கம் செய்தாள் இன்று அங்கு ஒரு பெரிய சபை உருவாகியுள்ளது. ஆகவே கர்த்தருக்குள் அழைக்கப்பட்டவனாக பிரயாசப்பட்டவனாக, பவுல் இருந்தான்.

## 3) குற்றமற்ற மனச்சாட்சி :-

(அப்போஸ்தலர் 24:16) "இதனால் நான் தேவனுக்கும் மனுஷனுக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்".

நல்மனச் சாட்சியிலே குற்றமற்றவர்களாக, பாவம் அற்றவர்களாக நல்லசாட்சி பெறவேண்டும். தேவ பிள்ளைகள், தேவ ஊழியர்கள் அந்த சாட்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆலயத்திற்குச் செல்லும் போது எம் நடக்கையை கவனித்துப் பேணவேண்டும். எம்முடைய பேச்சு, நடத்தைகளை மற்றவர்கள்

கவனிக்கிறார்கள். இடறலானதைச் செய்யாதபடி மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

(அப்போஸ்தலர் 20:35)
"இப்படிப்பிரயாசப்பட்டு, பலவீனரைத்தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான்."

<u>மன உருக்கமான நிலை.</u> பவுல் மற்றவர்களுடைய கையை எதிர்பார்க்வில்லை. பலவீனர்களைத் தாங்கினான். தன்னுடையதை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தான். உதவி செய்தான். பலவீனமான சபைகளுக்குச் சென்று தன் உதவியை அளித்தான்.

பல ஆண்டுகளுக்கு முன்பதாக லண்டன் தேசத்திலே கலையரங்கம் ஒன்றிலே நடந்த சம்பவம். (Art Gallery) படம் வரையப்பட்டது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளை நினைவு கூர்ந்து, இயேசு பிலாத்துவுக்கு முன் நியாயம் விசாரிக்கப்படும் காட்சி, சோகமான கட்டம், மன உருக்கத்தை விளங்கப்பண்ணும் வரையப்பட்ட படத்தை கண்காட்சியாக வைக்கப்பட்டது. பற்பலர் அதைக் கண்டு மௌனமாக நடந்து, கடந்து போகிறார்கள் மௌனம் உலாவுகிறது. வர்ணம் தீட்டப்பட்ட காட்சியைக் கண்டு, கண்ணீருடன் மௌனமாக மக்கள் நடந்து செல்கின்றனர். ஒரு சிறு பெண் கதறி, குளறிக் கத்தினாள். இந்தப்படம் அவ்வளவு மன உருக்கத்தையும், மன நோவையும் வேதனையையும் உண்டாக்கியது. ஐயோ! இவருக்கு யாருமே உதவி செய்ய வில்லையா? உதவி செய்ய வரமாட்டார்களா? என்று கதறி கூச்சலிட்டு, அழுதாள். யாவரும் அவளை திரும்பிப் பார்த்து வேதனைப்பட்டனர். கண்ணீர் விட்டனர். அவள் பெயர் Evanjelin Booth.

அதே Evanjelin Booth வளர்ந்தாள். ஒரு சிறைக் கைதியை யுத்த வீரன் தெருவிலே இழுத்துக்கொண்டு, அடித்து, துன்புறுத்திக்கொண்டு போகிறதைக்கண்டு பெரிய கும்பல் கூச்சல்

போட்டு ஆரவாரம் செய்துகொண்டு அவன் பின்பே சென்றனர். அந்தக் கும்பலில் Evanjelin Booth ஓடிச்சென்று உனக்காக பரிதவிக்க ஒருவர் இல்லையா? நான் உனக்காக இருக்கிறேன், உன் துக்கத்தில் பங்கு அனுபவிக்கிறேன் என்று இயேசு கூறியிருக்கிறார் என்று கதறினாள். தேவன் மனதுருக்கமுள்ளவர்.

இந்த Evanjelin Booth பெரியவளாகி Salvation Army என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்தாள். (Founder) சுகத்தையும், இரட்சிப்பையும் அறிவிக்கும் ஸ்தாபனத்திற்கு Chief Army Commander என்கிற பதவியுடன் பணியை உலகளாவிய ரீதியில் செய்தாள். கடவுள் தந்த காலத்தையும், நேரத்தையும் ஆதாயம் செய்து கொள்ளுங்கள். அதிக பிரயாசம், தரிசனம் உங்கள் வாழ்க்கையில் காணப்பட வேண்டும். நடக்கமுடியவில்லை, எழுத முடியவில்லை என்கிற வேளையிலும் பவுல் தன் அனுபவங்களை தீமோத்தேயுவுக்கு எழுதினான்.

(1 தெசலோனிக்கேயர் 2:9) "சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும்; உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும், பகலும் நாங்கள் வேலை செய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்."

(பிலிப்பியர் 2:14) "நான் வீணாக ஓடினதும் வீணாக பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போல பிரகாசிக்கிற நீங்கள், என்கிறான்."

(கலாத்தியர் 4:11) "நான் உங்களுக்குப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ என்று உங்களைக் குறித்துப் பயந்திருக்கிறேன்."

ஆகவே பவுல் ஓடின ஓட்டப்பந்தயம் வெற்றி பெற்று போராட்டம் நன்றாய் அமைந்தது. கர்த்தருக்குள் காரியங்களைச் செய்யும்படி பிரயாசப்படுங்கள். பவுலின் பிரயாசம் எல்லா

ஊழியங்களிலும் முதல் படியான, முதல் இடத்தைப் பெற்றான். பவுலின் பிரயாசம் உங்கள் மேல் வருவதாக. பவுல் பலவீனரைத் தாங்கினான். மனதுருக்கமான இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவோமாக. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆமென்!!!

# இரவு முழுவதும்!

(1 சாமுவேல் 15:11) "நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; அவன் என்னை விட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற் போனான் என்றார்; அப்பொழுது சாமுவேல் மனம் நொந்து, இராமுழுதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்."

(1சாமுவேல் 13:5-7) "முதலாவதாக பெலிஸ்தியர் இஸ்ரவேலோடு யுத்தம்பண்ணும்படி முப்பதினாயிரம் இரதங்களோடும், ஆறாயிரம் குதிரை வீரர்களோடும், கடற்கரை மணலத்தனை ஜனங்களோடும் கூடிக்கொண்டு வந்து, பெத்தாவேலுக்குக் கிழக்கான மிக்மாசிலே பாளயமிறங்கினார்கள். அப்பொழுது இஸ்ரவேலர் தாங்களுக்கு உண்டான இக்கட்டைக் கண்ட போது, ஜனங்கள் தாங்களுக்கு உண்டான நெருக்கத்தினாலே கெபிகளிலும், முட்காடுகளிலும், கன்மலைகளிலும், துருக்கங்களிலும், குகைகளிலும், ஒளித்துக் கொண்டார்கள். சிலர் அக்கரையின் பட்டணங்களுக்கும் சென்று விட்டார்கள். சிலர் மட்டும் சவுலுடன் கில்காலிலே தங்கினர்."

தேவனுக்குப்பலி செலுத்த ஏழு நாள்மட்டும் சவுல் சாமுவேலுக்காகக் காத்திருந்தான். சாமுவேல் வர தாமதித்த வேளையிலே சவுல் சமாதான பலிகளையும், சர்வாங்க தகனபலிகளையும் செலுத்தி முடிக்கிற போது இதோ சாமுவேல் வந்தான். கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம் பண்ணவில்லை என்றும் நான் எண்ணித் துணிந்து இந்தப் பலிகளைச் செலுத்தினேன் என்றான். இது கீழ்ப்படியாமையினால் நடந்த செய்கை.

(1சாமுவேல் 13:13,14) "தேவன் தந்த கட்டளையை கைக்கொள்ளவில்லை மீறிப்போட்டாய் அதனால் ராஜ்ய பாரம் நிலை நிற்காது என்றார்."

## யார் சத்தத்தைக் கேட்பார்கள்?

(1சாமுவேல் 15:1,2) இப்போதும் கர்த்தருடைய சத்தத்தைக்கேளும் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது அமலேக்கு அவர்களுக்கு வழிமறித்த செய்கையை மனதிலே வைத்திருக்கிறேன் என்று சேனைகளின் கர்த்தர் கூறினார்.

அதனால் நீ போய் அமலேக்கை மடங்கடித்து அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து அவன்மேல் இரக்கம் வைக்காமல் எல்லாவற்றையும் சங்கரித்து புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக்கடவாய் என்றார்.

அப்பொழுது சவுல் தன் சேனையுடன் பதிவிருந்து யுத்தத்தை உருவாக்கி ஆகாகை உயிரோடு பிடித்தான். ஜனங்களை பட்டயக்கருக்கினால் வெட்டிப் போட்டார்கள். சங்காரம் பண்ணிவிட்டு ஆடுமாடுகளில் முதல் தரமானதையும், இரண்டாம் தரமானதையும் நலமானதையும் அழித்துப்போடாதபடி அற்பமானதும், உதவாததுமான சகலவஸ்துக்களையும் அழித்தான். இரண்டாம் முறையும் தேவனுடைய இருதயத்திலே வேதனை உண்டாகிறது. அப்பொழுது சாமுவேலிடம் தேவன் முறையிடுகிறார். நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்கிறார்.

சாமுவேல் சவுலிடம் போனபோது ஆடுமாடுகளின் சத்தம் கேட்கிறது அது என்ன என்று கேட்டான். அவைகள் தேவனுக்கு பலி செலுத்த கொண்டு வந்த முதல் தரமானவைகள் என்று மாயமாலமாகக் கூறினான். சாமுவேல் அந்தப் பேச்சை விடும் என்றான்.

(1சாமுவேல் 15:17-19) "அப்பொழுது சாமுவேல் நீர் உம்முடைய பார்வைக்கு சிறியவராயிருந்த போது அல்லவோ இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர்; தேவன் இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணுவித்தாரே.

இப்போதும் கர்த்தர்: நீர் போய் அமலேக்கியராகிய அந்தப் பாவிகளை சங்கரித்து, அவர்களை நிர்மூலமாக்கி தீருமட்டும், அவர்களோடே யுத்தம் பண்ணு என்று சொல்லி, உம்மை அந்த வழியாய் அனுப்பினார். இப்படியிருக்க, நீர் கர்த்தருடைய சொல்லைக்கேளாமல், கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன என்றான்."

(1 சாமுவேல் 15:15,21) உம்முடைய தேவன் என்று இரு இடத்திலும் சவுல் பிரித்துப் பேசினான். தனக்கு ஒரு ஜெயஸ்தம்பத்தைக் கட்டினான். தேவனுக்குப் பலிபீடம் கட்டாது தனக்கு ஒரு புகழ்ச்சியை வரவேற்பைத் தேடிக்கொண்டான். தனக்கு இக்கட்டும், நெருக்கமும், நெருங்கிய போது துக்கமுடையவனாக இருந்தான். தன் ராஜ்ய பாரத்திலே குறி சொல்லுகிறவர்களையும், அஞ்சனம் பார்க்கிறவர்களையும் தேசத்திலிருந்து துரத்திவிட்டவன், பெலிஸ்தர் நெருங்கியபோது பயந்தவனாகி வேஷம் மாறி துரத்தப்பட்ட ஸ்திரீயிடம் அஞ்சனம் பார்க்கச் சென்றான். யுத்தத்தில் அவனும் அவன் குமாரனும் எல்லா ஜனங்களும் மரித்துப்போனார்கள். அருமையான வாசக பெருமக்களே! இதன் முடிவுகளை கவனியுங்கள் எந்த வேஷத்தைப் போட்டாலும் பிசாசுக்குத் தன் வலையில் யார் சிக்கிக்கொள்வார்கள் என்று நிச்சயம் தெரியும்.

சவுல் (விரும்பப்படத்தக்கவன்)
கி.மு. 1095-1055 இடைப்பட்ட காலம்

சாமுவேல் (தேவனால் கேட்கப்பட்டவன்)
(கி.மு. 1171 ஆண்டு )

விரும்பப்படத்தக்கவன் கர்த்தரால் புறக்கணிக்கப்பட்டான். தள்ளப்பட்டான். முடிவு தற்கொலையின் மரணம்

(1சாமுவேல் 15:23) சவுல் தேவனின் வர்த்தையைப் புறக்கணித்தான் அதனால் அவரும் அவனைப் புறக்கணித்துத் தள்ளினார். முடிவு மரணமே.

## கர்த்தர் எடுக்கும் முடிவு

(1சாமுவேல் 15:29) இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய் சொல்லுகிறதும் இல்லை; தாம் சொன்னதைப் பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை; மனம் மாற அவர் மனுஷனல்ல என்றான்.

எனவே தேவனின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாவிட்டால் எமது வாழ்வின் நிலை துக்கமான, துன்பமான, துயரமான முடிவாக மாறும். இவற்றை நாம் சிந்தித்துச் செயல்படுவோம்.

ஆமென்.

# கர்த்தர் என் விளக்கை ஏற்றுவார்!

பிரியமான வாசக நேயர்களே! வாக்குத்தத்தங்களை விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவன் என் விளக்கை ஏற்றுவார், என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார் தேவனுடைய வழி உத்தமமானது கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது அவரை நம்புகிறவர்களுக்குக் கேடகமாயிருப்பார் என விசுவாசிக்க வேண்டும்.

தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர் என்று சொல்லப்பட்டுள்ளது கர்த்தர் நல்லவர் எங்கள் எல்லோருக்கும் ஒரு விளக்கைத் தந்திருக்கிறார் எமது வாழ்க்கை செழிக்க நம்பிக்கையூட்டும் அந்த விளக்கை நாம் விசுவாசிக்க வேண்டும்.

இரவிலே வீதிகளில் விளக்குகள் எரிவதைப் பார்க்கிறோம்.
இரவிலே வீடுகளில் விளக்குகள் எரிவதைப் பார்க்கிறோம்.
ஆலயங்களில் விளக்குகள் எரிவதைப் பார்க்கிறோம்.
களியாட்டுகளில் விளக்குகள் எரிவதைப் பார்க்கிறோம்.

வரவேற்பு மண்டபங்களில் கூட குத்து விளக்கைப்பற்ற வைப்பார்கள். அனுதினமும் கடவுளுக்கு விளக்கு ஏற்றுகிறார்கள். ஒரு குடும்பம் வறுமைப்படும்போது, நெருக்கப்படும்போது, திருமணம் பேசி முடியாது என்று இருக்கும் நிலையில் முடிந்த காரியத்தை செய்து முடிப்பவரையோ அல்லது நிறைவேற்ற முடியாத ஒரு காரியத்தைச் செய்து முடிப்பவரையோ பார்த்து ஐயோ! இவர் எங்கள் வாழ்வில் விளக்கை ஏற்றி வைத்தவராயிற்றே என்று அறிமுகம் செய்கிறோம். தாவீதின் வாழ்க்கையில் வந்த நெருக்கமான, இக்கட்டான சத்துருக்களின் போராட்டத்திலே தேவன் தாவீதுக்கு ஏற்றிய விளக்கை இந்த கீதங்களில் எழுதி வைத்தான்.

1) என் விளக்கு, ஒரு நல்ல எதிர்பார்ப்பு, சொந்த விளக்கு எரிவதற்கு உதவி செய்கிறார்.

2) சபைக்கு ஒரு விளக்கை ஏற்றுகிறார்.

(நீதிமொழிகள் 31:18) "தன் வியாபாரம் பிரயோஜனமுள்ளதென்று அறிந்திருக்கிறாள்; இரவிலே அவள் விளக்கு அணையாதிருக்கும்"

குணசாலியான ஸ்திரீக்கு ஒரு விளக்கு உண்டு. இரவில் அவை அணைகிறதில்லை. வியாபாரத்தைக் கவனிக்கிறாள், வீட்டைக் கவனிக்கிறாள், சிறுமையானவர்களை விசாரிக்கிறாள், வயலை ஒழுங்கு செய்கிறாள், அதிகாலை கணவனின் உணவை ஆயத்தம் செய்கிறாள். இப்படி ஆயத்தம் செய்கிற ஸ்திரீயாக, உடலுக்கு ஓய்வில்லாமல் விழிப்பாக இருக்கிறாள். நீதிமொழிகள் 31:25 அவள் உடை பலமும் அலங்காரமுமாயிருக்கிறது; வருங்காலத்தைப் பற்றியும் மகிழுகிறாள். குணசாலி சம்பூரணப்பட்டவள், செழிப்புள்ளவள் என்பது அடையாளம். ஏனெனில் அவளது விளக்கு இரவில் அணைந்து போவதில்லை இரவிலும் அவள் ஓய்வு எடுக்காமல் தேவைகளையே சிந்திக்கிறாள்.

குணசாலியான ஸ்திரீ ரூத் தன் வாழ்வில் ஏற்பட்ட கசப்புகள் இருந்த போதும் உண்மையாக இருந்தாள். (ரூத் 3:10) நீ

கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக நீ தரித்திரரும், ஐசுவரியவான்களுமான வாலிபருக்குப் பின்பே போகாததினால் உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது. நீ குணசாலி என்பதை இந்த ஊரெல்லாம் அறிவார்கள் என்றாள் குணசாலியான ரூத் போவாசைத் திருமணம் செய்தாள். அவளுக்கு ஆண் குழந்தை கிடைத்தது அந்த ஆண் பிள்ளை தான் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தந்தை. ஈசாயின் தந்தையை பெற்றெடுக்கும் பாக்கியம் ரூத்துக்குக் கிடைத்தது. வரப்போகிற செழிப்பை விளக்கு காட்டுகிறது.

(11 சாமுவேல் 21:17) "செருயாவின் குமாரனாகிய அபிசாய் ராஜாவுக்கு உதவியாக வந்து, பெலிஸ்தனை வெட்டிக் கொன்று போட்டான். அப்பொழுது தாவீதின் மனுஷர்: இஸ்ரவேலின் விளக்கு அணைந்து போகாதபடிக்கு, நீர் இனி எங்களோடே யுத்தத்திற்குப் புறப்படவேண்டாம் என்று அவனுக்கு ஆணையிட்டுச் சொன்னார்கள்"

ஜனங்கள் தாவீதைப் பாதுகாத்துக் கொண்டார்கள் சத்துரு வந்தபோதும் தேவன் தாவீதின் பக்கத்தில் விளக்கை ஏற்றினார். இஸ்ரவேலின் விளக்கு அணையாதபடி சாலொமோனை ஒரு மகனாக உருவாக்கி அவன் கோத்திரம் தொடர மகனாகிய ரெகொபெயாம் கையில் ராஜ்ய பாரத்தைக் கொடுத்தார். சாலொமோனுடைய மகனுக்குக் கொடுத்தார்.

(1இராஜாக்கள் 11:36) "என் நாமம் விளங்கும்படிக்கு நான் தெரிந்து கொண்ட நகரமாகிய எருசலேமிலே என் சமூகத்தில் என் தாசனாகிய தாவீதுக்கு எந்நாளும் ஒரு விளக்கு இருக்கத்தக்கதாக, அவன் குமாரனுக்கு ஒரு கோத்திரத்தைக் கொடுப்பேன் என்றார்."

(1இராஜாக்கள் 15:4) "ஆனாலும் தாவீதினிமித்தம் அவனுடைய தேவனாகிய கர்த்தர், அவனுக்குப் பிற்பாடு அவன் குமாரனை எழும்பப்பண்ணுகிறதினாலும், எருசலேமை நிலைநிறுத்துகிறதினாலும், அவனுக்கு எருசலேமில் ஒரு விளக்கைக் கட்டளையிட்டு வந்தார்."

தேவன் வாக்கு மாறாதவர் அவர் சொன்னதைச் செய்யும் தேவன். தலைமுறை தலைமுறையாக கிருபையைக் காத்து நடக்கிறவர்களின் விளக்கு அணைவதில்லை. தாவீதின் வம்சத்தான் ஆட்சி செய்ய வேண்டுமென்று கோத்திரம் கோத்திரமாக, பரம்பரை பரம்பரையாக, தலைமுறை தலைமுறையாக ஆசீர்வதித்தது போல உங்கள் குடும்பங்களில் விளக்கு எரிய வேண்டும். அழகாக எரிந்து பிரகாசிக்க வேண்டும் என்கிறார். தேவன் தாவீதை ஆசீர்வதித்தார்.

(லூக்கா 8:16) விளக்குத் தண்டின்மேல் வைக்கப்படும் போது அந்த வைக்கிற இடத்தில் மட்டும் தான் ஒளி வீசும்.

(லூக்கா 15:8,9) "அன்றியும், ஒரு ஸ்திரீ 10 வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமல் போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதைக் கண்டு பிடிக்கும் வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ? கண்டு பிடித்த பின்பு, தன் சிநேகிதிகளையும், அயல் வீட்டுக்காரிகளையும் கூட வரவழைத்து: காணாமல் போன வெள்ளிக்காசைக் கண்டு பிடித்தேன், என்னோடேகூடச் சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா?"

அதே போல மனந்திரும்புகின்ற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று வேதம் கூறுகிறது. காணாமல் போனதை, இழந்து போனதை, தொலைந்து போனதை கண்டு பிடித்து மற்றவர்களுடன்கூட சந்தோஷமடைந்தாள் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் பரலோக செய்தியை பேச வேண்டும். கண்டு பிடித்ததை தேவன் ஆசீர்வதிக்கிறார்.

பறவையைக்கொண்டு விமானம் படைத்தனர். பாம்பைக் கொண்டு வானொலி அலைகளை உருவாக்கினர். ஒட்டகச் சிவிங்கியைக் கொண்டு தூக்கியைக் கண்டு பிடித்தனர். மீனைக்கண்டு கப்பலை உருவாக்கினர் குழாய்க்குள் அணுவில்

குழந்தையை உருவாக்கினார்கள். இப்படி கண்டு பிடிப்புகள் ஏராளம். ஒரு மாணவன் டாக்டர், கலாநிதி என்ற பட்டத்தை பெற வேண்டுமானால் தீசீஸ் என்று புது கண்டு பிடிப்பை எழுத வேண்டும். தண்ணீர் இல்லாமல் எப்படி சோளக் கதிரை வளர்க்க முடியும்? என்று உவமையாக எழுதுகிறேன். இப்படிப்பட்ட கண்டு பிடிப்புகளை கண்டுப்பிடித்த பின் அதைக் காணும்போது மகிழ்ச்சி, சந்தோஷம், களிப்பு உண்டாகும்.

ஒரு மாணவன் இரவுபகலாக படித்துத் தெரியாததை கேட்டுப்படித்து பிழையைக் கண்டுபிடித்து சரியாக எழுதும்போது பரீட்சையில் சித்தியடைகிறான். அதேபோல் பிழைகளை கண்டு திருத்திக்கொள்ள வேண்டும். கர்த்தரைத் தடவியாவது கண்டு பிடியுங்கள் என்று வேதத்தில் சொல்லப்படுகின்றது. கண்டு பிடிப்புகளை மற்றவர்களுக்கும் கூறவேண்டும் அப்பொழுதுதான் பிரயோஜனம், மகிழ்ச்சி உண்டாகும். உங்கள் வாழ்வில் காணாமல் போனதை நீங்கள் இப்போ கண்டு பிடிக்க வேண்டும். காணாமல் போனது என்ன? படிப்பா? பணமா? நிலமா? ஆஸ்தியா? நகையா? வைரமா? உடையா? வாகனமா? என்ன என்ன? உங்கள் வாழ்வில் கர்த்தரால் கொடுக்கப்பட்ட, ஆதி அன்பை இழந்து விட்டீர்கள்.

தாவீது ஒரு நேரம் தான் பெற்ற இரட்சிப்பின் ஆவியின் அபிஷேகத்தை இழந்து தவித்தான். சிம்சோன் கிருபைகளை இழந்து துடித்தான். சவுல் தேவாவியானவர் தன்னை விட்டுப் பிரிந்ததை உணர்ந்தான். எனவே நீங்களும் உங்கள் வாழ்வில் இழந்ததை மீண்டும் தேவனிடத்தில் பெற்றுக்கொள்ளுங்கள். சுயநலமாக இருக்க வேண்டாம். நீங்கள் மற்றவர்களுக்கு பிரயோஜனமாக இருக்க தேவ ஆவியானவருக்கு விட்டுக் கொடுங்கள். மற்றவர்களை நேசிக்க, உதவி செய்ய நாடுங்கள். பரலோக ராஜ்யத்தின் கற்பனை, கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடவுங்கள் அணையா தீபம் இயேசு உங்களுக்கு விளக்கை ஏற்றுவார்.

ஆமென்!!!

# தேவனைப் பின்பற்றுகிறவர்களுக்கு!

தேவ பிள்ளைகளே!

தேவனைப் பின்பற்றுகிறவர்கள் விஷயத்தில் சில நிபந்தனைகள் இருக்குமானால் தேவன் அவர்களுடைய ஜெபங்களைக் கேட்கிறார். லூக்கா 18ம் அதிகாரத்தில் முழுமையாக உவமைகளும் நடந்த சம்பவங்களுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு காரியங்கள் உவமையாகவும் மிகுதி காரியங்கள் நடந்த சம்பவமுமே. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களுக்குள் சில தன்மைகள் காணப்படவேண்டும்.

1) இரக்கம்

2) தாழ்மை

3) குற்றமற்றவர்களாக

4) நன்றியுள்ளவர்களாக.

இயேசுவை பின்பற்றுகிறவர்கள் இவைகளை உள்ளத்தில் வைக்கவும்

அநியுள்ள நியாயாதிபதி தேவனுக்குப் பயப்படாதவன், மனுஷரை மதியாதவன். ஒரு விதவை தனக்கு நீதி செய்யும்படி அடிக்கடி தொந்தரவு செய்தாள். அடிக்கடி செய்த தொந்தரவைத் தாங்காமல் என் குணாதிசயம் இப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதை அறிந்தும் இவள் அடிக்கடி என்னைத் தொந்தரவு செய்கிறாளே என்று அவன் நினைத்து, விதவையின் விடயத்திலே நியாயம் செய்ய வேண்டும் என்றான்.

அடிக்கடி அலட்டி அடிக்கடி தொந்தரவு செய்து, மீண்டும் மீண்டும் கேட்டதின் பலனால் அவள் நியாயத்தைப் பெற்றாள். உங்களுக்கும் உங்கள் ஜெபங்களுக்குப் பதில் சீக்கிரம் கிடைக்காவிட்டால், தொடர்ந்து, அடிக்கடி விழித்திருந்து சோர்ந்து

போகாமல் இடைவிடாது ஜெபியுங்கள் என்றோ ஒரு நாள் பலன் உண்டு. நியாயாதிபதிக்கு தொந்தரவு கொடுத்து அடிக்கடி விதவை இருந்ததுபோல் நீங்களும் இருங்கள். பதில் உடனேயே வரவில்லை என்று சோர்ந்துபோய் இடையில் ஜெபத்தை, உபவாசங்களை விட்டுவிடுகிறீர்கள். அப்படி அல்ல கர்த்தரை இரவும், பகலும் கூப்பிடுகிறவர்களாகிய, தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராக இருந்து அவர்களுக்கு நியாயம் செய்யாமல் இருப்பாரோ? எல்லாவற்றுக்கும் பொறுமையாக இருக்கும்போது கர்த்தருடைய பார்வையில் இரக்கம் கிடைக்கும்.

தாழ்மையுள்ள குணமுடையவர்களாக இருக்க வேண்டும். லூக்கா 18:14 ஆயக்காரன் நீதிமானாக்கப்பட்டான். ஆயக்காரன் தன்னைத் தாழ்த்தினான். தன்னை உயர்த்துகிறவன் எவனோ அவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவன் உயர்த்தப்படுவான்.

ஆயக்காரனும், பரிசேயனும் ஆலயத்திற்கு ஜெபம் செய்யச் சென்றார்கள். பரிசேயன் பரிசுத்தவான், ஆலோசனை சங்கத்தில் மூப்பன், அங்கத்தவன் தனி வழியாக நடக்கும் கொள்கை உடையவர்கள். பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து இயேசு கிறிஸ்து அடிக்கடி கூறியிருக்கிறார். தான் பரிசுத்தன் என்றும், பறிகாரன், விபச்சாரக்காரன், அநியாயக்காரன் இந்த ஆயக்காரனைப் போல் மற்ற மனுஷரைப் போல் அல்லாமலும் இருந்ததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் என்று பலிபீடத்தின் அருகில் நின்று பரிசேயன் அறிக்கை செய்கிறான். தன்னைத் தான் ஏமாற்றும் நிலையில் உயர்வான பேச்சைப் பேசுகிறான்.

ஆயக்காரன் வரி வசூல் பண்ணுவான் தேவாலயத்தின் அருகில் வர முடியாதவன் தூரத்திலே நின்று கொண்டு, வானத்திற்கு நேராக கண்களை ஏறெடுக்கக் கூடாதபடி அவன் மனச்சாட்சி குத்துண்டவனாக தேவனை நோக்கி மார்பிலே அடித்தவனாய் பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். கிருபை என்றால் இரக்கம், தயவு இவைகளைக் குறிக்கும். என்

மேல் இரக்கமாய் இரும் என்றான். கிருபை, இரக்கம், தயவு இவற்றை ஆயக்காரன் பெற்றான். ஆயக்காரன் தனது தாழ்மையை நோக்கிப் பார்க்கின்றான். தாழ்த்தினால் உயர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது கருத்தாகும்.

## தகுதியற்ற நிலையில் உள்ள ஆயக்காரனை தகுதியுள்ள நீதிமானாக கூப்பிட்டார்.

குற்றமற்றவனாகக் காணப்படல் அவசியம். சிறு குழந்தைகளைப் பாருங்கள் குழந்தை பசி வரும்போது அழும் பால் கொடுக்கும்போது அழுகை நின்று விடும். ஏன் அழ வேண்டும்? என்ன தவறு செய்தது? என்ன பாவம் செய்தது? ஒன்றுமே இல்லை. பால் கொடுத்தவுடன் அழுகை நின்றது. உணர்வு என்னும் நிலை அதற்குள் உருவாயிற்று. குற்றமற்ற உணர்வு என்று கூறமுடியும். சிறு பிள்ளைகளை இயேசுவினிடத்தில் கொண்டு வந்த போது சீஷர்கள் அவர் பக்கத்தில் கொண்டு வரவேண்டாம் என்று அதட்டினார்கள். (லூக்கா 18:16) அவர்களைத் தடை செய்யாதிருங்கள். அவர்களுக்கு இடங்கொடுங்கள் தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. சிறு பிள்ளைகளைப்போல இராவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள். தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்றார்.

தானியேல் இடைவிடாது ஜெபிக்கும் தேவ மனுஷன். தேவனை நோக்கி மூன்று வேளையும் ஜெபம் செய்கிறவனாய் இருந்தான். குற்றமற்ற மனச்சாட்சியுடையவனாய் இருந்தான். சிங்கங்களில் கெபியில் போட்ட வேளையிலும் சேதமில்லாத மனுஷனாக மீட்கப்பட்டான். சிறையில் போட்ட வேளையிலும் மீட்பு கிடைத்தது. ஏன்? அவன் ஜெபம் கேட்கப்பட்டது. அரசாங்கத்துக்கு விரோதமாகக் குற்றம் புரியவுமில்லை. தேவனுக்கும், மனிதனுக்கும் முன்பாக குற்றமற்ற மனச்சாட்சி

உள்ளவனாகக் காணப்பட்டான். அதனால் அவன் ஜெபம் கேட்கப்பட்டது.

தனிப்பட்ட பாவம் செய்ய வில்லை. அரசாங்கத்திற்கு விரோதமாகப் பாவம் செய்ய வில்லை. முழு இஸ்ரவேலின் பாவங்களுக்காகவும் ஜெபித்தான். தானியேலுக்கு தேவன் ஒரு உன்னத ஆவியைக் கட்டளையிட்டார்.

(11 இராஜாக்கள் 4:27) சூனேமியாளின் பிள்ளை மரித்த சம்பவத்திலே எலியாவின் கால்களைப் பிடித்துக் கொண்டாள். பற்றிப்பிடித்துக் கொண்டபடியினால் தேவன் உதவி செய்தார்.

(நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.) தற்பரிசோதனை உண்டு சீர்ப்படுத்திக் கொள்ள வேண்டும். தலைவன் ஒருவன் நித்திய ஜீவனைப்பெற என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு ஆண்டவர் இரக்கம் செய் உன்னிடத்தில் உள்ளவற்றை விற்று, தரித்திரருக்குக் கொடு என்றார். அதைக் கேட்டபோது, ஐசுவரியவான் துக்கமடைந்தான். லூக்கா 18:23 நன்றியுள்ளவர்களாக இருங்கள் லூக்கா 18:43. எரிகோவுக்கு சமீபமாக வந்தபோது குருடன் தேவன் வருகிறார் என்று கேள்விப்பட்டு தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிட்ட சத்தத்திற்கு தேவன் பார்வையைக் கட்டளையிட்டார். உடனே அவன் பார்வையடைந்து தேவனை மகிமைப் படுத்திக் கொண்டே அவருக்குப் பின் சென்றான். அதைக்கண்டு மக்கள் தேவனைப் புகழ்ந்தார்கள் குருடன் நன்றியுள்ளவனாக தேவனுக்குப் பின் சென்றான்.

தேவனைப் பின் பற்றும் நீங்கள் இரக்கம், நன்றி உடையவர்களாக, குற்றமற்றவர்களாக நடப்பீர்களேயானால் தேவன் உங்கள் ஜெபத்தைக் கேட்பார்.

ஆமென்!!!

# தேவாலயத்தில் இயேசு!

இயேசு தேவாலயத்தில் உலாவிக்கொண்டிருப்பது அதிசயமானதும், அற்புதமானதுமான காட்சி!

(யோவான் 10:23) "இயேசு தேவாலயத்தில் சாலொமோனுடைய மண்டபத்திலே உலாவிக்கொண்டிருந்தார்."

இயேசு ஆலயத்தைப் பார்த்தார், ஆலயத்தில் உபதேசம் செய்தார். ஆலயத்தில் மக்களுக்கு விடுதலையைக் கட்டளையிட்டார். தேவன் எங்கே நடக்கிறாரோ? கர்த்தர் எங்கே பார்க்கின்றாரோ மகிமை அங்கே காணப்படும், தெய்வீக வல்லமை பிரகாசிக்கும்."

நாம் சிலர் பூங்காவிலே உலாவுகிறோம். கடற்கரையில் உலாவுகிறோம். வீட்டின் மேல் மாடிகளில் உலாவுகிறோம். சிலருக்கு அனுதினமும், அடிக்கடி வைத்திய ஆலோசனையின்படி உலாவும்படியாக, நடக்கும்படியாக கூறியிருப்பார்கள். சிலர் காலை, மாலை தேகப் பயிற்சிக்காக உலாவ செல்வார்கள். சிலர் சிந்தனா சக்தியை வேறு திசைக்கு திருப்ப உலாவுகிறார்கள். மானசீக குழப்பத்திலும் உலாவுவார்கள்.

ஆனால் இங்கேயோ இயேசுவின் உலாவுதல் மகிமை பொருந்தியதாகவும், தெய்வீகம் நிறைந்ததாகவும், பராக்கிரமம் உடையதாகவும் இருக்கின்றன. இரண்டு வகையான உலாவுதலைப் பார்ப்போம்.

1) உலகத்தின் ராஜாக்களுடைய உலாவுதல்

2) பரலோக ராஜாவின் உலாவுதல்

(தானியேல் 4:29-31) 12 மாதம் சென்ற பின் ராஜா பாபிலோன் ராஜ்யத்திலே அரமனையின் மேல் உலாவிக் கொண்டிருக்கும் போது, நேபுகாத்நேச்சார் தன் தகப்பன்

இருக்கும்போது, (கி.மு. 625 ஆம் ஆண்டு) யுத்தம் செய்தான். பல தடவை எருசலேமை முற்றிகை போட்டு, அதிலுள்ள பொக்கிஷங்களையும், தளமுட்டுகளையும் பாத்திரங்களையும், மனுஷர்களையும் பாபிலோக்குச் சிறைப்பிடித்துக் கொண்டு வந்தான். (நேபா என்றால் - முடியைக் காப்பவன் என்று அர்த்தம்) தானியேல் என்னும் யூதனும்அங்கு சிறையாக்கப்பட்டு, நேபுகாத்நேச்சாரின் அரண்மனையிலே ஊழியனாக வைக்கப்பட்டான். விசேஷ தேவ ஆவி தானியேலுக்குள் இருந்த படியினால் கனவுகளையும், சொப்பனங்களையும் விபரித்து அர்த்தம் சொல்லும் கிருபை அவனுக்குள் இருந்தது. ஆனால் ராஜா கண்ட தரிசனத்தை அங்குள்ளவர்களால் கூற முடியாது இருந்த போதும் தானியேலினால் மட்டுமே தரிசனத்தை விளங்கப்படுத்த, வெளிப்படுத்த கூடியதாக இருந்தது.

கனவு, தரிசனம், சொப்பனத்தின் மூலம் தேவன் பேசுவார். யாருக்கு எதை வெளிப்படுத்த வேண்டுமோ அதை அவர் வெளிப்படுத்துவார் ஒரு விசேட தேவாவி அவனுக்குள் இருந்தது.

நேபுகாத்நேச்சார் அரண்மனையிலே உலாவிக் கொண்டிருக்கும் போது, இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் என் மகிமை பிரஸ்தாபத்திற்கென்று, ராஜ்யத்திற்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா? என்று சொன்னான். இந்த வார்த்தை ராஜாவின் வாயில் இருக்கும்போதே வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே! ராஜ்யபாரம் உன்னை விட்டு நீங்கிற்று. (தானியேல் 4:33) எந்தக் கனவை வெளிப்படுத்தினானோ அந்தக் கனவின் அர்த்தம் நிறைவேறிற்று. ஏழு ஆண்டுகள் நேபுகாத்நேச்சார் காட்டு ஜீவியத்தை ஜீவிக்கவேண்டியதாயிற்று.

நேபுகாத்நேச்சார் எனது என்ற சொல்லைப் பாவித்தான். என் வல்லமை என்றான் என் ராஜ்யம் என்றான் என் அரமனை என்றான். என்னால் என்று எது வருகிறதோ அவைகள் ஆபத்து. நேபுகாத்நேச்சாரின் ராஜ்யபாரம் நீங்கிற்று. அரமனையில் உலாவின

போது அவனுடைய உள்ளம், இருதயம், வாய் பேச ஆரம்பித்தது. இருதயம், வாய் சரியான கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும்.

(கொலோசெயர் 3:8-10) "இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளை எல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கு ஒப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.

இருதயம் திருக்குள்ளது அதற்குள்ளே சகல வஞ்சகங்களும் நிறைந்திருக்கும். துன்மார்க்கனுடைய இருதயமோ கேடுள்ளதாயிருக்கும் கடினமான இருதயத்தை எடுத்துப்போட்டு தசையான இருதயத்தை தேவன் தருவாராக. எருசலேமை சிறைப்பிடித்து தகாதவைகளை ராஜா செய்ததன் காரணம், என் பராக்கிரம வல்லமையினால் என் நாமத்தின் பிரஸ்தாபத்திற்கு என்று கட்டப்பட்ட அரமனை பாபிலோன் என்றான். தன் வல்லமை, தன் பராக்கிரமம், தன் அரமனை என்றதினால் தீர்ப்பு 7 ஆண்டுகள் காட்டை ஆளும் நியதி தேவனாலே வழங்கப்பட்டது.

கடின இருதயத்தை தேவன் மாற்றுவார். காட்டுக்குள் இருக்கும்போதே அவன் இருதயக் கண்கள் திறந்தன. ஆத்மீகக் கண்கள் திறந்தன. இருதயத்தில் சிந்தனை எழும்பியது. மனம் கசந்து அழுதான் தேவன் இரங்கினார். தசையான இருதயம் உருவாக்கப்பட்டது. பழைய மனுஷனை களைந்து விட்டு புது சிருஷ்டிப்புகளைக் காணும்படி புதிய கண்கள் கொடுக்கப்பட்டது.

(11 சாமுவேல் 11:2) "ஒரு நாள் சாயங்காலத்தில் தாவீது தன் படுக்கையிலிருந்து எழுந்து, அரமனை உப்பரிகையின் மேல் உலாத்திக்கொண்டிருக்கும் போது, ஸ்நானம் பண்ணுகிற ஒரு ஸ்திரீயை உப்பரிகையின் மேலிருந்து கண்டான்; அந்த ஸ்திரீ வெகு சௌந்தரவதியாயிருந்தாள்."

அவளை யார் என்று விசாரித்த போது தன் சேவகனுடைய மனைவி என்று அறிவிக்கப்பட்டது. அப்பொழுது ஆள் அனுப்பி அவளை வரவழைத்து அவளுடனே சயனித்தான். அவளோ தன் தீட்டு நீங்கத் தன்னை சுத்திகரித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினாள். அவள் கர்ப்பம் தரித்து கர்ப்பவதி என்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டது.

யுத்தத்தில் நின்ற உரியாவை வீட்டுக்கு வரும்படி அழைப்பித்தான். அதனால் ஏற்பட்ட விளைவுகளைப் பிற்பகுதி கூறுகின்றது. ஒன்றை மறைக்க நாம் எவ்வளவு பொய் சொல்லுகிறோம். தாவீதும் அதைத் தான் செய்தான். பாவத்திலே கை வைத்தான். தொடர்ந்து பாவம், பொய் செய்தான். கடிதம் எழுதினான் பொய் பேசினான், உரியாவை யுத்தத்தில் கொலை செய்ய அனுமதித்தான். அப்பாவியாகிய அந்த உரியாவின் மரணத்திற்குக் காரணமாயிருந்தான். அரண்மனையில் உலாவும் போது எந்தப் பாவத்தைச் செய்தானோ எதைக் கண்டு கண்களின் இச்சைக்கு இடம் கொடுத்தானோ அந்தப் பாவம் இன்னுமொரு மரணத்தை உருவாக்கியது. பத்சேபாளுக்குப் பிறந்த குழந்தை நோய்வாய்ப்பட்டு இறந்தது.

ராஜாக்கள் யுத்தத்திற்குப் போகவேண்டிய காலத்திலே தாவீது ஏன் அரண்மனையில் தங்கினான்? கிருபாசனப் பெட்டி பாளயத்திலே கிடக்கிறது. தேவனுடைய யுத்தம் நடக்கும்போது அலட்சியமாக, அசதியாக இருந்தான். ஆகவே அவனுடைய உலாவுதல் இருதயத்திற்கு துர்ச்சிந்தனையைக் கொண்டுவந்தது. காமவிகாரத்தைக் கொண்டு வந்தது.
விபச்சாரத்தைக் கொண்டுவந்தது.

துர்ச்சிந்தனை சிந்திக்கும்படி தூண்டிவிடும். சத்துருவின் கண்ணிக்கு உங்களை விலக்கி காத்துக்கொள்வீர்களாக. அருவருப்பானதைச் செய்தான் இச்சை பெருகியது, அவை தேவனுக்குப் பிரியமில்லாததாயிருந்தது.

(யோவான் 10:23) இயேசு சாலொமோனின் மண்டபத்தில் உலாவினார் மக்களைப் பார்க்கும்படியாக, பேசும்படியாக, விடுவிக்கும்படியாக. சாலொமோன் மண்டபத்தில் உலாவிய இயேசு இன்றும் உங்கள் மத்தியில் உலாவுகின்றார். ஆத்மீக கண்களைத் திறந்து கவனியுங்கள். அவர் உள்ளத்தில் உலாவுகிறார்.

(யோவான் 2:14,15) இயேசு எருசலேமின் தேவாலயத்திற்குப் போனபொழுது ஆடுகள், மாடுகள், புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு, கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டு பண்ணி ஆடு மாடுகளையும் விற்கிற யாவரையும் தேவாலயத்திற்குப் புறம்பே துரத்தி விட்டு, காசுக்காரருடைய காசுகளைக்கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப் போட்டு புறா விற்கிறவர்களை இதை இவ்விடம் விட்டுப் போங்கள். என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார். பக்தி வைராக்கியம் இயேசுவுக்குள் கிரியை செய்தது.

ஏன் நாம் ஆலயத்திற்கு வருகிறோம்?
ஆலயத்திற்கு ஜெபிக்க வருகிறோம்
ஆலயத்திற்கு துதிக்க வருகிறோம்
ஆலயத்திற்கு மகிமை செலுத்த வருகிறோம்
ஆராதிக்கும் இடத்தை அசுத்தமாக்கினார்கள்
ஆராதிக்கும் இடத்தை கள்ளர் குகையாக்கினார்கள்
ஆராதிக்கும் இடத்தை வியாபாரம் செய்யுமிடமாக்கினார்கள்.
சுத்திகரிக்கும்படியாக தேவன் விரும்புகிறார்.

(மாற்கு 11:11) இவைகளே எமக்கு ஆலோசனையை உணர்த்தும் படிப்பினையாக விளங்குகிறது. அப்பொழுது இயேசு எருசலேமுக்கு வந்து, தேவாலயத்தில் பிரவேசித்து, சுற்றிப்பார்த்து சுத்திகரிக்கிறார்.

(11 நாளாகமம் 16:9) கர்த்தருடைய <u>கண்கள் பூமி எங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது.</u> நாம் செய்வது ஒவ்வொன்றையும் பார்க்கிறார்.

(சங்கீதம் 11-4) கர்த்தரின் கண்கள் மனுபுத்திரரை பார்க்கிறது.

(யோவான் 5-14) பெதஸ்தா குளம்

38 வருட வியாதியால் படுக்கையிலிருந்தவனை இயேசு கண்டு சுகத்தைக் கொடுக்கிறார். சுகப்பட்டவனை இயேசு மறுபடியும், தேவாலயத்திலே காண்கிறார். அப்பொழுது இதோ நீ சொஸ்தமானாய் அதிக கேடானதொன்றும் வராதபடி இனிப்பாவம் செய்யாதே என்றார்.

மனந்திரும்புதலைக் கவனிக்கிறார். நன்றியுள்ளவனாக தேவாலயத்தில் அவனைப் பார்க்கிறார். சீர்ப்படுத்தப்பட்டவனாக காணப்படுகிறான் அதை அவர் பார்க்கிறார். ஆண்டவர் பேசும்படியாக உலாவுகிறார்.

## உபதேசம் செய்தார்:-

தேவன் ஒரு நோக்கத்தோடு, உன்னுடன் இப்புத்தகத்தின் மூலம் பேசுகிறார். ஒரு பூரண நிலையை நீங்கள் அடையும்படியாக உலக வாழ்வில் சம்பூரணமான ஆஸ்திகள் இருப்பினும் ஆத்மீகத்திற்கு அவை ஒருபோதும் உதவி செய்யமாட்டாது. பிதாவின் சித்தம் செய்வதே குமாரனாகிய இயேசுவின் நோக்கமாயிருந்தது. பிதாவின் சித்தத்தை பூவுலகில் நிறைவு செய்வதே அவருடைய சம்பூரண நோக்கமாக இருந்தது.

(யோவான் 7:14-17) பண்டிகை நாட்களில் இயேசு தேவாலயத்திற்குப் போய் உபதேசம் பண்ணினார். இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள். அவர்களுக்கு பிரதி யுத்தரமாக என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பியவருடையதாயிருக்கிறது. அவருடைய சித்தம் செய்வதே என் விருப்பம் என்றார். ஆத்துமாவை சுத்திகரிக்க வசனத்தை உபதேசித்தார். ஆழமாக, கருத்தாய்ப் பேசினார். எம்மை ஆட்கொண்ட அந்தரங்கப்பாவம் வெளியரங்கமான பாவம் எந்தப் பாவமானாலும் பாவத்தை விட்டு வெளியே வரவேண்டும் இனி கேடானது உனக்கு வராதபடி உன்னைக் காத்துக் கொள் என்று

38 வருட வியாதியஸ்தனைப் பார்த்து கூறுகிறார். பரிபூரணப்பட வேண்டும் என்று உபதேசம் கூறுகிறது.

(மத்தேயு26:55) "அந்த வேளையில் இயேசு ஜனங்களை நோக்கி: கள்ளனைப் பிடிக்கப்புறப்படுகிறது போல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக் கொண்டு என்னைப் பிடிக்க வந்தீர்கள்; நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே உட்கார்ந்து தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தேன்; அப்பொழுது என்னைப் பிடிக்கவில்லையே" என்றார்.

நீங்கள் ஆத்மீக ஜீவியத்தில் பரிபூரணப்படவேண்டுமென்பதால் உபதேசங்களைக் கூறி, தேவ ராஜ்யத்தின் இரகசியங்களைக் கூறி மக்களை பரிபூரணத்திற்குள் வழி நடத்தினார். சகலவற்றையும், பொறுமையுடன் சகிப்புத்தன்மையுடன் பிதாவின் சித்தம் நிறைவேற பேசிய வார்த்தைகளை தம் ஜீவியத்தில் இயேசு செய்து காட்டினார். சிலுவையில் கடைசி பரியந்தம் தம்மைத் தாழ்த்தினார். தாழ்மையுடன் வேதனைகளைச் சகித்தார். முடியுமானவரை இவர் தேவ சித்தம் நிறைவேற பொறுமையுடன் சகித்து, மரணத்தை ஜெயங்கொண்டார்.

## விடுதலை கொடுக்கும்படியாக இயேசு!:-

விடுதலை கொடுத்தார் இயேசு (மத்தேயு 21:14) அப்பொழுது குருடரும் சப்பாணிகளும் தேவாலயத்திலே அவரிடத்திற்கு வந்தார்கள். அவர்களை சொஸ்தமாக்கினார். தேவனுடைய மனதுருக்கத்தைக் கண்டீர்களா? யாவரும் விடுதலை அடைந்தார்கள். தேவாலயத்தில் நடந்தவை என்ன அதிசயம் என்ன அற்புதம்.

ஆத்மீக குருடர் பார்க்க முடியாதபடி உலக மாம்ச இச்சை தொடர்கிறது சப்பாணிகள் எழுந்து நடக்க முடியாதபடி எல்லாக் கட்டுகளிலும் அகப்பட்டு தோல்வியைக் கண்டவர்களாகத் திரிகிறார்கள். பிசாசின் பிடிக்குள் நன்றாய் சிக்கித் தவிக்கிறார்கள்.

விடமுடியாதபடி சூனியம், செய்வினை, மாந்திரிகம் போன்ற கட்டுக்கள் மேல் கட்டுக்கள் கட்டப்பட்டவர்களாக பிசாசு அமர்த்தி ஆத்மீகத்திலே சப்பாணிகளாய் வாழ்க்கையிலே தோல்வி, அழுகை, கண்ணீர் இவைகளில் இருந்து தேவன் விடுதலை கொடுக்கிறார். உலகத்தில் இருப்பவனை பார்க்கிலும் எம்மோடு இருக்கிறவர் பெரியவர். எமக்கு வெளிச்சம் அவசியம் உங்கள் நடுவே உலாவி, வருகிற தேவனை நாடுவோம்.

(1 இராஜாக்கள் 9:3) என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கேயிருக்கும்.

(லேவியராகமம் 22:32) நான் உங்களை பரிசுத்தமாக்குகிற தேவன்

(மத்தேயு 12:50)<br>(மத்தேயு 7:21) } பிதாவின் சித்தம்

(சங்கீதம் 50:15) என்னை நோக்கிக் கூப்பிடு உன்னை விடுவிப்பேன் என்கிறார்.

(யோவான் 8:32) சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.

(11 கொரிந்தியர் 3:17) கர்த்தருடைய ஆவி எங்குண்டோ அங்கே விடுதலை உண்டு.

எனக்கருமையானவர்களே! ஒரு காரியத்தை மறைக்க எத்தனை பொய்கள் சொல்லப்படுகின்றன. அதன் முடிவோ மரணமும், துயரமும், அவமானமுமான முடிவு. உலக ராஜாக்களின் முடிவுகளும் அப்படித்தான் இருந்திருக்கிறது. அந்தரங்கப் பாவங்களைச் செய்யும்போது அவை வெளியரங்கமாக்கப்படும்.

(ஆதியாகமம் 3:7) "அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலையைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்."

(ஆதியாகமம் 3:8-12) பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார்." அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான். அப்பொழுது அவர்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியை புசித்தாயோ? என்றார். அதற்கு ஆதாம் ஆம் என்றான்.

1) தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து இருந்தவன், சத்துருவின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து தேவனுக்கு கீழ்ப்படியாதவனாகிவிட்டான்.

2) குளிர்ச்சியான இடத்தில் இருந்தவன் வரட்சியான இடத்திற்கு மாற்றப்பட்டான்.

3) நிர்வாணம் தெரியாதவனாக மகிமை பொருந்தியவனாக இருந்தவன் நிர்வாணியாகி மகிமையை இழந்தான்.

11 கொரிந்தியர் 5:17<br>எபேசியர் 4:22-24 } பழையவைகளை விலக்கி விடுங்கள்.

ஆதியாகமம் 1:26,27 மனுஷனை தேவ சாயலாகப்படைத்தார். எனவே தேவ சாயலாகப் படைக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் தேவ மகிமையை இழந்து போகாதகாதபடி தேவ மகிமையைக் காத்துக் கொள்வோம்.

ஆமென்!!!

# தாவீதின் வேர்

**இயேசுவின் வம்ச வரலாற்றிலே அதிசயங்கள் உண்டு**
**இயேசுவின் வம்ச வரலாற்றிலே அற்புதங்கள் உண்டு**
**இயேசுவின் வம்ச வரலாற்றிலே அடையாளங்கள் உண்டு**
**தாவீதின் 42 வது பரம்பரையில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு.**
**(மத்தேயு 1ம் அதிகாரத்தில்)**

**தாவீதின் வேர் பிரகாசமுள்ள நட்சத்திரமாய் இருக்கிறது. நட்சத்திரம் என்றால் சினிமா நட்சத்திரம் அல்ல. Holywood star அல்ல. Super star அல்ல. 3.5,7 Star Hotel Starரும் அல்ல. ஆகாய விமானங்களில் Star தரம் கொடுத்த விமானங்களும் அல்ல.**

**(ஏசாயா 9:7) தாவீதின் சிங்காசனம்**
**(ஏசாயா 9:7) அதிசயம், ஆலோசனை, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு.**

**6 வருடத்திற்கு முன்பே இயேசு கிறிஸ்துவின் பிறப்பை அறிவித்து விட்டார்கள். தேவ கிருபை இவைகளை அறிவிக்கின்றன.**

**இயேசு வணக்கத்திற்குரியவர்**
**இயேசு ஆராதனைக்குரியவர்**
**இயேசு மகிழ்ச்சிக்குரியவர்**
**இயேசு மகிமைக்குரியவர்**
**இயேசு வல்லமைக்குரியவர்**
**இயேசு அற்புதத்திற்குரியவர்**
**இயேசு பரிசுத்தத்திற்குரியவர்**
**இயேசு துதிகளுக்குரியவர்**
**இத்தனை குணாதிசயங்களும் இயேசுவிற்கிருந்தது.**

**நித்திய பிதா (அப்போஸ்தலர் 13: 34,35,37,38) பாவிகளை இரட்சிக்க தேவ பாலகன் உருவெடுத்தார்.**

(11 பேதுரு 1:19) "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்."

(ஓசியா 6:3) "கர்த்தரைத் தொடர்ந்துபோவோம் புறப்படுதலுக்கு அருணோதயம் ஆயத்தமாயிருக்கிறது. பாதையில் நடக்க, வழிநடத்திச் செல்ல அருணோதயத்தின் ஒளி அவசியம்."

(மத்தேயு 2:2) "நட்சத்திரம் வழிகாட்டிய போது இயேசுவை பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்."

பணிவு, கீழ்ப்படிவு, தாழ்மை
பணிந்து, கனம், மகிமை கொடுக்க
பணிந்து வணங்க, துதிக்க, ஆராதிக்க

(மத்தேயு 2:7-10) நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு நேராக வந்து நின்றது. சாஸ்திரிகள் பணிந்தனர், வணங்கினர் உபகாரங்களைக் கொடுத்தனர். மிகுந்த ஆனந்த சந்தோஷம் அடைந்தனர். விடிவெள்ளி நட்சத்திரம் ஆலோசனை கொடுத்தது. ஏரோதின் கண்களுக்கு அகப்படாது வேறு வழியாய் கொண்டு சென்றது.

(சங்கீதம் 46:1) "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்."

(சங்கீதம் 50:15) " ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்."

1) எச்சரிப்புக்கு நட்சத்திரம் வேறு வழி காட்டியது.
2) விடிவெள்ளி நட்சத்திரம் காட்டிய பாதையில் நடந்தனர்
3) அழிவு வருவதற்கு முன் வேறு பாதையில் நடந்தனர்
4) கீழ்ப்படிந்து நட்சத்திரத்தைத் தொடர்ந்தனர்.

## ஏரோதும் தேசமும் கலங்கினார்கள்.

(லூக்கா 2:9-12) மேய்ப்பர்களுக்கு தூதன் தோன்றி பயப்படாதிருங்கள் இதோ உங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அறிவிக்கிறேன் என்றான். தூதன் நின்ற இடத்தில் கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது. மேய்ப்பர்கள் மிகவும் பயந்தார்கள். உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக எனக்கூறி எங்கே என்ன அடையாளம் என்று அறிவித்தான்.

தாவீதின் வேர், தாவீதின் ஊரிலே கிறிஸ்து என்னும் இரட்சகர் பிறந்திருக்கிறார் பிள்ளையைத் துணியில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள் இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான்.

மேய்ப்பர்கள் பிள்ளை இருக்கும் இடத்திற்கு சென்றனர்
1) தேவ தூதனின் சத்தத்திற்கு பயந்தவர்களாக
2) கண்டதைப் பிரசித்தம் பண்ணினார்கள்
3) கேட்டவர்கள் ஆச்சரியமடைந்தார்கள் துதித்தார்கள், மகிமையை செலுத்தினார்கள்

ஆமென்!

# தேவனுடைய தராசிலே குறைவுள்ளவர்களாக காணப்படுகிறோம்.

தேவனால் இரட்சிக்கப்படுகிறோம். அன்பின் அடையாளமாக தம்மையே பணயமாக வைத்தார். நாம் சுய நீதியில் விழுந்து விடாதபடி எம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். அவருடைய அன்பை என்றும் நிலை நிறுத்திக் கொண்டால் ஒரு மனிதன் தன் வாழ்வை நிதானமாக நடத்த முடியும். இந்த உலகத்திற்கும், பூமிக்கும், சரீரத்திற்கும், ஆடை, ஆபரணம், பணம், பொருள், ஆஸ்தி, திருமணம், படிப்பு என்று இவைகளுக்காக மிகக் கருத்தோடு அலைகின்றோம். பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும் எல்லாத் தீமைக்கும் பணமே மூலவேர்.

ஆகவே உலக இச்சைகளின் மேல் அன்பு காட்டாதபடி முதலாவது அன்பை தேவனுக்குச் செலுத்துங்கள். ஆண்டவர் உங்களை எப்படி, எந்த அளவில் நேசிக்கிறார் என்பதை காண முடிகிறதா? எந்த அளவு கோலால் உங்களை நேசிக்கிறார் என்று அளக்க முடியாது. ஆழம், உயரம், அகலம், அறியாத அளவுகோல். (அது தான் சிலுவையின் அளவுகோல் ஆகும்.)

எம்மில் அன்பு கூர்ந்ததின் நிமித்தம் நாம் கெட்டுப்போகாதபடி நித்திய ஜீவனை அடையும்படி தம் சொந்தக் குமாரனை அனுப்பி இவ்வளவாய் அன்பு கூர்ந்தார். அவர் எங்கே இருக்கிறாரோ அதே வண்ணமாக நாமும் அங்கே இருக்கவேண்டும் என்பதே அவரது குறிக்கோள்.

(மத்தேயு 19:16-22) "அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி, நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் என்ன நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான்? அதற்கு அவர் நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவரைத்தவிர ஒருவனும் நல்லவன் இல்லையே நீ ஜீவனில்

பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார் எவைகளை நான் கைக்கொள்ள வேண்டும் என்று கேட்டான்.

அதற்கு இயேசு,

கொலை செய்யாதிருப்பாயாக

விபச்சாரம் செய்யாதிருப்பாயாக

களவு செய்யாதிருப்பாயாக

பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக

உன் தகப்பனையும், தாயையும் கனம்பண்ணுவாயாக

நீ உன்னிடத்தில் அன்பு கூறுவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பவைகளே என்றார். அதற்கு வாலிபன் என் சிறு வயதுமுதல் இவைகளைக் கைக்கொண்டிருக்கிறேன். என்றான்.

இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன? அதற்கு இயேசு நீ பூரண சற்குணராயிருக்க விரும்பினால், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும் பின்பு என்னைப் பின்பற்றி வா என்றார்.

அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தி உள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான். இயேசு நல்லதைச் சொல்வார், நன்மையானதைப் பேசுவார் என்று தன் ஜீவனை குறித்துப் பேசாமல் நித்திய ஜீவனைக் குறித்து இயேசு பேசும் தொனியை அவன் அறிகிறான். இயேசு தனக்குச் சாதகமாக ஆலோசனை கொடுப்பார் என்று அவன் எண்ணினான்.

நன்மைகளை மட்டும் செய்தால் போதாது, ஜீவன் பரிபூரணப்பட்டதாக இருக்க வேண்டும். இல்லாவிடில் நித்தியத்தை அடைய முடியாது. நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்னை அல்லாமல் இரட்சிப்பு இல்லை. தேவனால் மட்டுமே இரட்சிப்பு உண்டாகும். இயேசுவுடன் 12 பேர் மட்டுமே இருந்தார்கள். ஆனால் அவர் கையில் நல்லவைகளையும், நன்மைகளையும் பெற ஆயிரம் ஆயிரம் மக்கள் சூழ்ந்திருந்தார்கள்.

ஆனால் தேவனுடைய தீர்மானமும், திட்டமும் எமக்குள் நிறைவேற நாம் அவரை நெருங்கிக் கொண்டால் தான் அவைகளைக் காணமுடியும்.

நோய்கள், அசுத்தாவிகள், சாபங்கள், பாவங்கள் யாவற்றிலிருந்தும் விடுதலை பெற இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே பதில் கொடுக்க முடியும். இயேசு நித்திய ஜீவனை புதிய உடன்படிக்கை மூலமாக செயல் படுத்தினார். வெளிப்படுத்தலை காட்டுறார். நீங்கள் என் மாம்சத்தை புசித்து இரத்தத்தைக் குடிப்பீர்கள். என்ற தீர்க்க தரிசனத்தை மக்கள் உணர முடியாமல், அறிய முடியாமல், நினைக்க முடியாமல் இருந்தார்கள். நல்லதைப் பேசினார். நன்மையானதைப் பேசினார். திடீரென இப்பொழுது மிருகத்தனமான காரியத்தைப் பேசுகிறார் என்று முறுமுறுத்தார்கள். ஏனெனில் அவர்களிடம் வெளிப்பாடு இருக்கவில்லை.

பரிசேயர், சதுசேயர் உலக சிந்தனை, உலக யோசனைகளில் பாரம்பரியத்தில் உள்ளவர்களானபடியால் வெளிப்பாடுகளை காண முடியவில்லை. வார்த்தைகள் சில சமயம் தெளிவில்லாமல், விளங்காமல் பின்மாற்றம் அடைகிறீர்கள். மணவாட்டி சபையே! வார்த்தையில் தெளிவுள்ளவர்களாயிருங்கள். அநேகருக்கு ஜீவனுக்கும், நித்திய ஜீவனுக்கும் வித்தியாசம் தெரிய வில்லை. ஜீவன் அவன் பூமியில் வாழும் வாழ்க்கை.

(மத்தேயு 19:21) நீ பூரண சற்குணராயிருக்க விரும்பினால் போய் உனக்கு உண்டாயிருக்கிறதை விற்று தரித்திரருக்குக் கொடு என்றார். வாலிபன் தேவனைப் பார்க்கிலும் தன் ஆஸ்தியின்மேல் அன்புடையவனாயிருந்தான். உலக ஆஸ்தி, பணம் மேல் அவன் நம்பிக்கை, விசுவாசம், அன்பு வைத்திருந்தான். இயேசுவுக்கு இரண்டாம் இடம் அதனால் தான் அவன் முகம் துக்க முகமாக மாறி துக்கத்துடன் போய்விட்டான். இயேசுவின் பரிசுத்த அலங்காரம் உங்களுக்குள் இருக்கட்டும். உலக அலங்காரம் அல்ல. ஆவியின் அலங்காரம் உனக்குள் வரக்கடவது.

(மாற்கு 10:26,27) நித்திய ஜீவனுக்குரியவைகளை இயேசு பெறுகிறார். பரிசேயரின் நீதியிலும் உங்கள் நீதி மேன்மையாக இருக்கட்டும். இப்படிப் பெரிய திட்டங்கள் கூறினால் யார் இரட்சிக்கப்படக் கூடும்? இல்லை எல்லாம் தேவனால் கூடும்.

இரட்சிப்பின் மகிழ்ச்சியை, இரட்சிப்பின் சந்தோஷத்தை யார் அடையக் கூடும். இரட்சிப்பின் தேவனாலே எல்லாம் கூடும். தாவீது பாவம் செய்த போது மனந்திரும்பியவனாக தேவனே எனக்கு இரட்சிப்பின் சந்தோஷத்தை மீண்டும் தாரும் என்று கேட்டான்.

பரிசேயர், சதுசேயர் நியாயப்பிரமாணத்தின் திட்டத்தை வெளியரங்கங்களைக் கெடுத்தார்கள். ஒழுங்காக தசமபாகம், காணிக்கை கொடுக்கிறேன். ஒழுங்காக ஆராதனைகளில் பங்குபற்றுகிறேன் ஒழுங்காக மற்றவர்களுடன் புறங்கூறுதலை பேசிக்கொண்டுள்ளேன் என்பார்கள். எனவே நித்திய ராஜ்யம், நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள தேவ நீதி கிரியை செய்ய வேண்டும்.

(மத்தேயு 5:20) "வேதபாரகர் பரிசேயர், என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

இயேசுவின் ஆடை கிழிக்கப்பட்டது. திரைக்குள்ளே இயேசு இருக்கவில்லை. சத்தியம் தாராளமாக மாற்றப்பட்டு, சீர்கேட்டைச் செய்கின்றது. தேவ ஆட்டுக் குட்டியானவர் பலிப்பொருளாக நிற்கிறார். தேவ குமாரன் மனுஷ குமாரனாக நீதியின் முன் நிற்கிறார். உங்கள் நீதி என்ன? உங்கள் நீதி எங்கே?

நீதியின் அன்பே இயேசுவாகிய தெய்வம். ஆலயத்திற்கு கடவுளுக்கு இரண்டாவது இடத்தையே சிலர் தங்கள் வாழ்க்கையில் கொடுக்கிறார்கள். முதலாவது இடத்தை தம் குடும்பம், கணவன், மனைவி, பிள்ளைகள், ஆஸ்தி, பணம் என்று இப்படியாக சுய நீதியைத் தேடுகிறார்கள். முதல் அன்பு

இயேசுவின்மேல் இருக்கட்டும். வாலிபனுக்குத் தன் ஜீவனைக் குறித்து அக்கறை இல்லை. தேவனுடன் இணைய இலேசான அணுகுமுறையைக் கையாளுகிறான். நித்திய ஜீவனைப் பெற இவ்வுலகில் நாம் வாழும் போது எம் ஜீவன் பூரணப்பட்டதாக இருக்க வேண்டும்.

(யோவான் 10:10,11) பிசாசுக்கு இடம் கொடுக்காதீர்கள். அவன் திருடவும், கொல்லவும் அழிக்கவும் வருகிறான். உன் ஆத்துமாவை திசை திருப்புவான் அசத்தியம், உலகம், இவைகளைக் காட்டி ஏமாற்றி, ஆத்துமாவை திருடி, கொன்று அழித்து விட்டு ஜீவனை நாசமாக்கிச் செல்வான். ஆனால் நானோ! அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பூரணப்படவும் வந்தேன் என்றார். நானே நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தம் ஜீவனைக் கொடுக்கிறார்.

(யோவான் 10:9) நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறமும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்.

(சங்கீதம் 23:2,3) அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீரண்டையில் கொண்டுபோய் விடுகிறார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

ஆமென்!!!

# கர்த்தர் உன்னுடனே கூடவே இருக்கிறார்.

(சங்கீதம் 121:4,5) "இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதும் இல்லை தூங்குகிறதுமில்லை. கர்த்தர் உன்னைக் காக்கிறார். கர்த்தர் உன் வலது பக்கத்திலே நிழலாயிருக்கிறார்."

(சங்கீதம் 121:7,8) "கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்; கர்த்தர் உன் போக்கையும், உன் வரத்தையும் இதுமுதற் கொண்டு என்றென்றைக்கும் பாதுகாப்பார்."

(எரேமியா 1:8) "உன்னைக் காக்கும்படி நான் உன்னுடனே கூட இருக்கிறேன்."

நம்மை பாதுகாக்கும்படி கர்த்தர் நம் பட்சத்திலிருந்து நமக்கு எத்தீங்கும் வராதபடி காத்து நடத்துகிறார். தீமை நிறைந்த உலகில் நாம் வாழ்கிறோம். ஆனால் அத்தீங்குகள் நம்மைப் பற்றித் தொடர்ந்து வராதபடி கர்த்தருடைய பிள்ளைகளை கர்த்தர் பாதுகாக்கிறார்.

(எரேமியா 15:20) "உன்னைத் தப்புவிப்பதற்காக நான் உன்னுடனே கூடவே இருக்கிறேன் என் உயிரைக் காக்கிறவர் என் பக்கம் இருக்கிறார்."

சிலர் பல இடங்களில் தீமை செய்கிறவர்களாகவும், பெருமைப் படுகிறவர்களாகவும், எம்மை சூழ்ந்து கொண்டு வருகிறார்கள். வரக்கூடிய நல்ல ஈவுகளை தடை செய்கிறவர்களாகவும், புறங்கூறுகிறவர்களாயும், உலகில் ஓடித்திரிகிறார்கள்.

இளம் வாலிபனான யோசேப்பின் வாழ்க்கையில் என்ன

நடந்தது? சகோதரர்களிடமே பொறாமை காணப்பட்டது. அதனால் அவனை வீட்டிலிருந்து அப்புறப்படுத்தி அவர்கள் குழியில் போட்டார்கள். குழிக்குள் போடப்பட்டு, அடிமையாக விற்கப்படுகிறான்.

(ஆதியாகமம் 39:3) "இஸ்மவேலரின் கையினால் போத்திபாருக்கு விலைக்கு வாங்கப்பட்ட அடிமை யோசேப்பு போத்திபாரின் வீட்டில் அவனை வைத்துக் கொண்டான். யோசேப்புடன் கர்த்தர் இருந்தார். அவன் காரியசித்தியுள்ளவன் ஆனான். கர்த்தர் அவனுடன் இருக்கிறார் என்றும் அவன் செய்கிற யாவையும் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும் அவன் எஜமான் கண்டு, யோசேப்பினிடம் தயை வைத்து, தனக்கு ஊழியக்காரனாகவும், தன் வீட்டுக்கு விசாரணைக் காரனாகவும், தனக்கு உண்டான யாவையும் அவன் கையில் ஒப்புக் கொடுத்தான்."

தன் வீட்டுக்கும், தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் விசாரணைக்காரனாக்கின முதற்கொண்டு யோசேப்பினிமித்தம், அந்த எகிப்தியனின் வீட்டை ஆசீர்வதித்தார். வீட்டிலும், வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் யாவற்றையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

(ஆதியாகமம் 39:6,9) "யோசேப்பு அழகானவனாகவும், ரூபமுள்ளவனாகவும், சௌந்தரிய முகமுள்ளவனாகவும் இருந்தான். இக்கால கட்டத்திலே போத்திபார் மனைவி அவன் மேல் கண்போட்டு தன் விபச்சார வலைக்குள் அவனை விழும்படி கண்ணி உண்டாக்கிய போதும் நித்தம் நித்தம் யோசேப்போடே பேசிக் கொண்டு வந்தும், அவளுடன் சயனிக்கவும் அவளுடன் இருக்கவும் அவன் சம்மதிக்கவில்லை. நான் இத்தனை பெரிய பொல்லாங்கிற்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி?"

(சங்கீதம் 115:13) "கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும், சிறியோரையும் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்."

(ஆதியாகமம் 39:5) யோசேப்பு கர்த்தருக்குப் பயந்திருந்ததினால் எகிப்தியன் வீட்டை தேவன் ஆசீர்வதித்தார். வீட்டிலும், வெளியிலும் அவனுக்குண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது.

(உபாகமம்28:3)

நீ பட்டணத்திலும்ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்; வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். வாக்குத் தத்தங்களை நம்புங்கள் தேவனுக்குப் பயந்து இருங்கள்.

பொய்க் குற்றச்சாட்டுதல் நிமித்தம் யோசேப்பு சிறைக்குத் தள்ளப்பட்ட போது, சிறை காவலாளி இவனுடன் கர்த்தர் இருக்கிறார் இவன் உண்மையுள்ளவன் என்று கண்டு அங்குள்ளவர்களுக்கெல்லாம் தலைவனாக்கி அவனிடம் சிறை கைதிகளின் காரியங்களை ஒப்படைத்தான். உண்மை என்றும் உயர்த்தும் அல்லவா? கர்த்தர் யோசேப்போடு கூட இருந்தபடியினால் பானபாத்திரக்காரனின் கனவின் அர்த்தத்தை யோசேப்பு விவரிக்கிறான். சிறைச்சாலையில் கர்த்தர் யோசேப்போடே கூட இருந்தார்.

(ஆதியாகமம் 40:15) "நான் எபிரேயனுடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டு வரப்பட்டேன்: என்னை இந்த காவல் கிடங்கில் வைக்கும்படிக்கு நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை." விபச்சாரம் செய்யவில்லை பொய் சொல்லவில்லை என்றான். ஆனால் சிறையில் சுயம்பாகி பானபாத்திரனக்காரனுக்கும் நடக்க இருக்கும் கனவின் உண்மைகளை வெளிப்படுத்தினான்."

(நீதிமொழிகள் 28:20) "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்" எல்லா காரியங்களில் உண்மையுள்ளவர்களாய் இருக்கும் போது கர்த்தர் உயர்த்துவார். கர்த்தருக்கு முன் உண்மையாக இருந்து ஆசீர்வாதங்களை பெறுவோம்.

(நீதிமொழிகள் 6:24) "அது உன்னைத் துன்மார்க்க ஸ்திரீக்கும், இச்சகம் பேசும் நாவையுடைய பரஸ்திரீக்கும் விலக்கிக் காக்கும்." சிறையிலிருந்த பானபாத்திரக்காரன் மூலம் யோசேப்புக்கு விடுதலை உண்டாக காத்திருக்கிறது.

"நீ நடக்கும் போது அது உனக்கு வழிகாட்டும்: நீ படுக்கும் போது அது உன்னைக் காப்பாற்றும்: நீ விழிக்கும் போது அது உன்னோடே சம்பாஷிக்கும்."

நீ நடக்கும் போது உனக்கு வழிகாட்டும். உறங்கும் போது உன்னைக் காப்பாற்றும். விழிக்கும் போது உன்னோடு பேசும். நீ நடக்க வேண்டிய வழிகளுக்கு ஆலோசனைகாரராகவும் படுக்கும் போது தரிசனங்களை கனவுகளை வெளிப்படுத்தும் போது, கேட்க வருபவர்களுக்கு சம்பாஷனைகளையும் கொடுக்கும். யோசேப்பு தேவனின் கற்பனைக்குள் இருக்கிறவனாக காணப்பட்டான்.

(நீதிமொழிகள் 6:24) "போத்திபாரின் மனைவியின் கண்ணிமைகளினால் உன்னை பிடிக்க விடாதே. அவள் அழகைக் கண்டு இச்சியாதே! இச்சிப்பை வெறுத்தான் தேவனுக்கு முன் உத்தமனாயிருந்தமையினால் அவன் வேதனையை தேவன் நீக்கினார்."

(உபாகமம் 28:6) யோசேப்பு எகிப்துக்குள் நுழையும் போதும், எகிப்து சிறைச்சாலையிலும், சிறையிலிருந்து வெளியே வரும் போதும், அதாவது வருகையிலும் சிறைக்குள்ளும் சிறைக்கு வெளியேயும் ஆசீர்வாதமுள்ளவனாயிருந்தான் எந்த சமயமானாலும் எந்த சந்தர்ப்பமானாலும் கர்த்தருக்கு முன் பயமுள்ளவர்களாகவும் உண்மையுள்ளவர்களாகவும் இருக்க கற்றுக் கொள்ளுங்கள்.

(ஆதியாகமம் 41:13) சுயம்பாகி பானபாத்திரக்காரனின் சொப்பனம் பயனடைந்தது. சொப்பனங்களுக்குரிய அர்த்தத்தைக் கூறினான். விளக்கின அர்த்தத்தின் மாதிரியே நடந்தது.

(ஆதியாகமம் 41:14,15,16) "பார்வோன் யோசேப்பை சிறையிலிருந்து அழைப்பிக்கிறான். காவல் கிடங்கிலிருந்து சவரம் செய்யப்பட்டு, வேறு வஸ்திரம் தரித்து பார்வோன் முன்னிலையில் அவன் சொப்பனம் கூறுகிறான். அதன் அர்த்தத்தை நான் அல்ல என் தேவனே கூறுவார். மங்களகரமான உத்தரவு அருளிச் செய்வார்."

அருமையானவர்களே கர்த்தர் உங்களை காப்பாற்றுவார். 7 வருடம் விளைச்சலும், 7 வருட பஞ்சமும் தேசத்தில் நடைபெறுமென உத்தரவு கொடுக்கப்பட்டாயிற்று.

(லூக்கா 6:28) "உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்: உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்."

யோசேப்பின் சகோதரர்கள் நிந்தித்தார்கள் சொப்பனக்காரன் இவனோடு மட்டுமா கடவுள் இருக்கிறார் என நிந்தனையான சொற்களைப் பேசினார்கள். ஆனால் யோசேப்பு அவர்களைப் போல் அல்ல யோசேப்போடே கர்த்தர் இருந்தார்.

(நீதிமொழிகள்11:26) "தானியத்தை கட்டி வைக்கிறவனை ஜனங்கள் சபிப்பார்கள்: விற்கிறவனுடைய தலையின் மேல் ஆசீர்வாதம் தங்கும்."

(உபாகமம் 28:8) "கர்த்தர் உன் களஞ்சியங்களிலும் நீ கையிடும் எல்லா வேலைகளிலும், உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார். உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்."

ஆபிரகாமுக்கு கொடுத்த ஆசீர்வாதங்களை இஸ்ரவேலுக்கு கொடுத்த ஆசீர்வாதங்களுடன் உங்களுக்கு கிடைத்த ஆசீர்வாதங்களை எண்ணிப்பாருங்கள். ஸ்தோத்திரமும் செய்யுங்கள். நன்றி கூறுங்கள் இம்மட்டாக அவர் செய்த உபகாரங்களுக்கு கனம் துதி மகிமை ஸ்தோத்திரம் நன்றி

எப்போதும் கூறிக்கொண்டேயிருங்கள் கர்த்தர் உங்களையும் ஆசீர்வதிப்பாராக. மீண்டும் பார்வோன் சொப்பனத்தின் விளக்கத்தைக் கேட்ட போது தேவாவி விவேகம் ஞானம் கொண்ட யோசேப்பையே தேசத்திற்கு அதிகாரியாக்கினான்.

1. நடைபாதை குழியிலே அடிமையாக விற்கப்பட்டான்.
2. காவல் கிடங்கிலிருந்து பார்வோனின் அழைப்பைப் பெற்றவன்.
3. கர்த்தரின் கிருபையால் சொப்பனத்தின் அர்த்தத்தை வெளிப்படுத்திய திறமையைக் கண்டு தேசத்தின் அதிகாரியாக்கப்பட்டான்.

அதிகாரிக்கு கிடைக்கப்பட்ட பொறுப்பு (ஆதியாகமம் 41:41)
தன் கையில் போடப்பட்ட முத்திரை மோதிரம்
மெல்லிய வஸ்திரங்களை உடுத்தி
பொற்சரப்பணியை கழுத்திலே அணிந்து
தன் பின்னாக இரண்டாம் இரதத்திலே ஏற்றி தெண்டனிட்டு பணியுங்கள் என்று எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக்கினான்.

(ஆதியாகமம் 41: 47,48,49) "பூமி தன் பலனைக் கொடுத்து தானியத்தை கடற்கரை மணலைப் போல் சேர்த்து வைத்தான்."
(ஆதியாகமம் 41:55,56) "எகிப்தின் பஞ்சம் கொடிதாகி வரவேற்றது. யோசேப்பு களஞ்சியங்களை திறந்து தானியங்களை விற்றான்"

(ஆதியாகமம் 42:6) "யோசேப்பு அத்தேசத்திற்கு அதிபதியாயிருந்து, தேசத்தின் ஜனங்கள் யாவருக்கும் விற்றான். யோசேப்பின் சகோதரர் வந்து, முகங்குப்புறத் தரையிலே விழுந்து அவனை வணங்கினார்கள்."

(சங்கீதம் 37:22) "அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள்: அவரால் சபிக்கப்பட்டவர்களோ அறுப்புண்டு போவார்கள்." ஆகவே யோசேப்பு ஆசீர்வதிக்கப் பட்டபடியினால் எகிப்து தேசம் முழுமைக்கும்

அவனை அதிகாரியாக்கி அவனுடைய உத்தரவு இல்லாமல் எகிப்தியர் கையையும் காலையும் ஆட்டி அசைக்க கூடாது என்ற சட்டம் போடப்பட்டது. தன் நடத்தையிலே யோசேப்பு உறுதியாயிருந்தான்.

(சங்கீதம் 37:23) "நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்."

(சங்கீதம் 112:2) "அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்."

ஆம் அருமையான வாசக பெரு மக்களே! உண்மை எதுவோ உத்தமம் எதுவோ உன்னதம் எதுவோ அதைப் பற்றிப் பிடித்து செம்மையானதை செய்ய தீவிரப்படுங்கள்.

ஆமென்...

# தடைகளை நீக்கிப் போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார். (மீகா 2:13)

"தடைகளை நீக்குகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார். அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்து, கடந்து போவார்கள். அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாக போவார். கர்த்தர் அவர் முன்னிலையில் நடந்து போவார்."

அருமையானவர்களே!

நம் தடைகளை நீக்கிப் போட சர்வ வல்ல தேவன் என்னும் நாமம் கொடுக்கப்பட்டுள்ளது. இருக்கிறவராய் இருக்கிறேன் என்றும், யேகோவா என்றும், அதிசயமானவர் என்றும் அவரை வேதம் வர்ணிக்கின்றது. ஒவ்வொரு பிரஜைகளுக்கும் வாழ்விலே உலக போராட்டம், ஆத்மீக போராட்டம் உண்டு. ஆத்மீக வாழ்வில் அனுதினமும் போராட்டம் வர இடமுண்டு. எந்த ஒரு மனிதனும் தமக்கு பிரச்சினை இல்லை என்று சொல்ல முடியாது. ஒவ்வொருவருக்கும் பிரச்சினை இருக்கத் தான் செய்கிறது. வரத்தான் செய்கின்றது. பிசாசு என்னும் எதிராளி ஆவிக்குரிய மனிதனின் நம்பிக்கை, விசுவாசம், அன்பை அகற்றிவிட மிக முழுமையான மூச்சுடன் செயல்படுவான். சமாதானத்தை குலைக்க, அழிக்க அவன் கங்கனம் கட்டிக் கொண்டு வருவான். அழிக்கவும் கொல்லவுமே பிசாசு வருகிறான். (யோவான் 20:19-29)

யூதருக்குப் பயந்து சீஷர்கள் கதவைப்பூட்டி, உள்ளே இருக்கிறார்கள். கதவுபூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று, உங்களுக்கு சமாதானம் என்றார். இயேசு வந்து தன் கைகளையும் விலாவையும் சீஷர்களுக்கு காண்பித்தார். சீஷர்கள்

அவரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். மறுபடியும் இரண்டாம் முறையும் உங்களுக்கு சமாதானம் என்று கூறினார். பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன். என்று சொல்லி, அவர்கள் மேல் பரிசுத்தாவியை ஊதினார்.

இயேசு வந்த போது தோமா என்னும் சீஷன் அங்கிருக்கவில்லை. இரண்டு முறை சமாதானத்தின் பாக்கியத்தை இழந்தவனாகக் காணப்படுகிறான். அவன் அங்கிருந்திருந்தால் சமாதானத்தின் ஆசீர்வாதத்தை இழந்து இருக்க முடியாது. அவனுக்குள் விசுவாசம், நம்பிக்கை, அன்பெனும் குறைவு காணப்பட்டபடியினால் சந்தேகம் எழுந்ததால் இயேசு எட்டாம் நாள் மறுபடியும் தன் பிள்ளைகளை தேடிச் சென்றார். அவ்வேளையில் விசுவாசிக்க மாட்டேன் என்ற தோமா இயேசு தன் கையையும் காலையும் காட்டி, தோமாவே உன் கைவிரலை நீட்டி என் காயத்தினுள் விட்டுப் பார் என்றார். அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். அப்பொழுது அவன் மனம் குத்துண்டவனாக, “என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்.” மூன்றாம் முறையும் உங்களுக்கு சமாதானம் என்றார்.

மீண்டும் தோமாவை நோக்கி “நீ கண்டதினாலே விசுவாசித்தாய் காணாதிருந்தும் விசுவாசிக்கிறவனோ பாக்கியவான்.” என்று கூறினார். அநேக அற்புதங்களை இயேசு செய்து காட்டினார். ஏன்? தேவனை விசுவாசித்து மக்கள் நித்திய ஜீவனை அடையும் படியாக அப்படியாக நடத்தது.

(மத்தேயு 27:45,46) “ஆறாம் மணிநேரம் முதல் ஒன்பதாம் மணிநேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்: அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னை கைவிட்டீர் என்பது அர்த்தமாம்.”

அவ்வேளையில் அங்கு நின்றவர்கள் இவன் யூதருடைய ராஜாவானால் இப்போது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும் என்று பல கேடான வார்த்தைகளால் தூஷித்தார்கள். இரண்டாம்

முறையும் இயேசு மகா சத்தமாய் கூப்பிட்டு தன் ஆவியை விட்டார். மகா சத்தம் வானபரியந்தம் பிதாவின் சமூகத்திற்கு எட்டியது. அப்பொழுது தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழ் வரை இரண்டாகக் கிழிந்தது. பூமி எங்கும் அந்தகாரம் நிலவியது, கன்மலைகள் பிளந்தது. பூமி அதிர்ந்தது. இயற்கை தேவனுடைய சத்தம் கேட்டு கிரியை செய்தது. இக் கரியங்களை யாவரும் கொல்கொதா மேட்டினிலே காணுகிறார்கள்.

(மத்தேயு 27:54) "நூற்றுக்கு அதிபதியும் ,அவனோடு காவல் காத்திருந்தவர்களும் பூமி அதிர்ச்சியையும், சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்."

அருமையானவர்களே! தேவன் தடைகளை நீக்கிப் போடுவார். அவர் யார் என்பதை உங்களுக்கு வெளிப்படுத்தி காட்டுவார். தடைகளை நீக்குபவர் உங்கள் முன் செல்வார்.

(யோவேல் 3:16) "கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்: வானமும் பூமியும் அதிரும்: ஆனாலும் கர்த்தர் தமது ஜனத்திற்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்."

எருசலேமிலே கொல்கொதாவிலே சிலுவையில் மிகுந்த மகா சத்தமிட்டு தன் தேவனைத் தேடினார். அவர் பதில் கொடுத்தார். வானத்தின் சூரியன் சந்திரன் கிரியை செய்யாதபடி அந்தகார இருள் மூடிக் கொண்டது. பூமி அதிர்ச்சி உண்டானது. சீயோனிலே கெர்ச்சிக்கிறார். பூமி தத்தளிக்கும் பூமியின் குடிகள் அவரே தெய்வம் என்று அறிக்கை செய்வார்கள்.

தச்சனுடைய மகனாக அல்ல
யோசேப்பின் குமாரனாக அல்ல
மரியாளின் மகனாக அல்ல
நன்மை செய்தவராக அல்ல
அற்புதங்களை செய்தவராக அல்ல
பிசாசுகளை துரத்தினவராக அல்ல

இதோ தேவனுடைய குமாரனென்று மெய்யாகவே எடுத்துக் காட்டினார்.

உபத்திரவத்தின் நாட்கள் எமக்கு முன் வரப்போகின்றது. அதற்கு முன் கர்த்தருக்குள் அடைக்கலப்படுவோம். சரணடைவோம். அந்திகிறிஸ்துவின் நாட்களை எட்டிக் கொண்டிருக்கிறோம். சுதந்திர பாகத்தை இழந்து போகாதபடிக்கு தேவனுக்குள் நித்திய ஓட்டத்தின் நிச்சயத்தை பெற ஓடுவோமாக. ஒரு கட்டுப்பாடு, கட்டுக் கோப்புக்குள் அடிமை என்ற இந்த சூழ்நிலைக்கு தள்ளிவிட பிசாசு என்னும் அந்திகிறிஸ்து வெளிப்படுவான்.

(வெளிப்படுத்தல் 13:17,18) “அந்த மிருகத்தின் முத்திரையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்கிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கும் செய்தது. இதிலே ஞானம் விளங்கும். அந்த மிருகத்தின் இலக்கத்தை புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன்: அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது: அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு ஆகும்.”

உன் வாழ்க்கையின் சுதந்திரத்தை கெடுத்து, ஆத்மீக வாழ்விற்கு குந்தகத்தை வருவிக்கும்படி இப்படியான காரியம் ஒன்று வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. உபத்திரவங்களை சந்திக்கும் நேரம் ஒன்று வந்து கொண்டிருக்கின்றது. மக்கள் மிக மிக எச்சரிப்பாக, விழிப்பாக பொய்யான உபதேசங்களை தள்ளிவிட்டு, மாயையான உபதேசங்களை தள்ளிவிட்டு, சத்தியத்தை தேடினால் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையாயிருந்த தேவன் உங்களுக்கும் அரணான கோட்டையாயிருந்து பாதுகாப்பாராக. இந்த முத்திரையை எங்கே பெற வேண்டும்?

(வெளிப்படுத்தல் 13:16) “சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் இவர்கள்

யாவரும் தங்கள் தங்கள் வலது கையிலாவது நெற்றியிலாவது ஒரு முத்திரையை பெறும் படிக்கு இப்படி நடக்கும். இந்த முத்திரை இருந்தால் மட்டும் நீங்கள் எதையும் செய்ய முடியும் என்ற கட்டளையை உங்களுக்கு வைப்பான்." (Scanner) உன்னை நிழலிட்டு சரீரத்தை ஊடுருவிப் பார்க்கும் கருவி முன் நிற்கும் போது உங்கள் இலக்கம் அந்த கருவியிலே பதியப்பட்டு வாழ்க்கை சரிதை காட்டப்பட்டு அதற்குரிய காரியத்தை வெளிக்காட்டும். அவனுடைய கட்டுப்பாட்டுக்குள் உங்களை அவன் கொண்டு வந்து விடுவான். அதின் நாமம் சொல்லப்படும் அந்திக்கிறிஸ்துவாக அல்ல..

(யோவான் 14:13,14) "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் என் துதியை தங்கள் வாயினாலே சொல்லி வருவார்கள். என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ அதை தருவேன் என்று வாக்களித்தவருடைய நாமம் உங்கள் ஊழியக்காரருடைய நெற்றியிலே எழுதப்படும் என்கின்றார்."

(வெளிப்படுத்தல் 22:4) "அவருடைய ஊழியக்காரர் அவரை சேவித்து, அவருடைய சமுகத்தை தரிசிப்பார்கள்: அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்."

அருமையானவர்களே! ஏன் இந்த உபத்திரவத்தின் காலங்களை கடப்பதற்கு முன்னதாக, உங்கள் குடும்பங்களில் ஒரு பிள்ளையை ஊழியத்திற்கு தரக்கூடாதா? கர்த்தருடைய ஊழியக்காரன் என்றால் அவரே அதை போஷிப்பவரும் பாதுகாப்பவருமாக இருக்கிறார். அவன் மூலம் பெரிய பாக்கியமான ஆசீர்வாதத்தைக் கர்த்தர் தருவார். இஸ்ரவேலின் தேவன் அரணான கோட்டையும் கேடகமுமாயிருப்பார். இந்த பொல்லாத காலங்களிலும் உபத்திரவங்கள், அழிவுகள், இயற்கை சீற்றங்கள், ராஜ்யங்களின் அதிகாரங்கள், சத்துருவின் கன்னிகள், எம்மைத் தாக்கிவிடாதபடி பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

(ஏசாயா 2:19,20) பூமியை தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும் போது, அவருடைய பயங்கரத்திற்கும், அவருடைய

மகிமை பிரஸ்தாபத்திற்கும், விலகி கன்மலைகளிலும், வெடிப்புகளிலும், குன்றுகளின் சந்துகளிலும், புகுந்து கொள்ளும் படிக்கு, கெபிகளிலும், பூமியின் குகைகளிலும் புகுந்து கொள்வார்கள். நோவாவின் காலத்தில் நடந்தவைகளை எண்ணிப்பாருங்கள் சோதோம் கொமராவில் நடந்ததை எண்ணிப்பாருங்கள். ஆகவே அந்திகிறிஸ்துவின் பாடுகளுக்கு முன்கர்த்தருடைய வருகை வருமோனால் மிகவும் நலமாயிருக்கும்.. தன் வார்த்தையிலே சர்வ வல்லவர் வானங்களையும் உருவாக்கினார். உண்டாக்கினார்.

(வெளிப்படுத்தல் 21:1,2,3,) புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன். முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின: சமுத்திரமும் இல்லாமல் போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்திலிருந்து, பரலோகத்தை விட்டு, இறங்கி வரக்கண்டேன்: அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.

மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன். அது இதோ மனுஷனிடத்திலே தேவனுடைய வாஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார் அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து, அவர்களுடைய தேவனாயிருப்பார்.

ஆதியும் அந்தமுமானவர்-
அல்பாவும் ஒமேகாவுமானவர்-
தொடக்கமும் முடிவுமானவர்-
முந்தினவரும் பிந்தினவருமானவர்-
நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்-

அவரே மெய்யான தெய்வம்- சர்வவல்லவர், மகாபரிசுத்தர், மெய்யான ஆண்டவர், கர்த்தாதிகர்த்தனும், ராஜாதி ராஜாவுமாயிருக்கிறார்.

இந்த ஆண்டவர் அநாதி முதல் ஆளுகை செய்கிறார். உலகத்தை அவர் தம் வல்லமையின் வார்த்தையால் படைத்தார். முதல் ஆறு நாட்களும் படைப்புகளை உண்டுபண்ண காத்திருந்தார். (ஆதியாகமம் 1:8) வசனத்திலே தேவன் ஆகாயவிரிவுக்கு வானம் என்று பெயரிட்டார். எபிரேய மொழியிலே வானங்கள் என்று பலர் பாலிலே எழுதப்பட்டுள்ளன. இந்த வானங்களை அவரே விரித்தார். ஆகாயவிரிவு அவராலே உண்டாக்கப்பட்டது. இதற்கு ஆதாரமாக

(உபாகமம் 10:14) "இதோ, வானங்களும் வானாதி வானங்களும், பூமியும் அதிலுள்ள யாவும், உன் தேவனாகிய கர்த்தருடையவைகள்."

(சங்கீதம் 18:9) "வானங்களைத் தாழ்த்தி இறங்கினார்."

(சங்கீதம் 144:5) "கர்த்தாவே நீர் உமது வானங்களைத் தாழ்த்தி இறங்கி."

(சங்கீதம் 102:25) "நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரம் படுத்தினீர். வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது."

(சங்கீதம் 68:33) "ஆதிமுதலாயிருக்கிற வானாதிவானங்களின் மேல், எழுந்தருளியிருக்கிறவரைப் பாடுங்கள்."

(சங்கீதம் 89:2) "கிருபை என்றென்றைக்கும் ஸ்திரப்பட்டிருக்கும் உமது உண்மையை வானங்களிலே ஸ்தாபிப்பீர் என்றேன்."

(சங்கீதம் 103:19) "கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார். அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது."

(சங்கீதம் 104:2) "ஒளியை வஸ்திரமாக தரித்து, வானங்களை திரையைப் போல் விரித்திருக்கிறீர்."

(சங்கீதம் 148:2) "அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்; அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்."

(ஏசாயா 1:2) " வானங்களே, கேளுங்கள் பூமியே செவி கொடு."

(11பேதுரு 3:7) " இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயம் தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது"

(11கொரிந்தியர் 12:2) கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்: அவன் 14 வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டான்: அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்கு புறம்பே இருந்தானோ, அதை அறியேன்: தேவன் அறிவார். மூன்றாம் வானத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட தரிசனத்தை பவுல் அடியார் உறுதிப்படுத்துகிறார். ஆதியிலே தேவன் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்றார் உண்டானது. வானத்தின் படியாயிருக்கும் இடத்தில் வானத்தின் ஆகாயவிரிவின் தண்ணீர்களே துதியுங்கள் என்று (சங்கீதம் 148:4) சொல்லுகின்றது.

நோவின் காலத்திலே உண்டான பெரு வெள்ளத்திற்கு காரணம் மழை. ஆண்டவர் உலகை உண்டாக்கும் போது வானத்தின் பனி மூலமே செடி, கொடி, மரம், புல், பூண்டு, விருட்சத்திற்கு உதவியாகவே கட்டளையிட்டார். நோவாவின் காலம் வரை மழை இல்லாமல் இருந்திருக்கலாம். பாவமறியாத ஆதாம் ஏவாள் கொடுத்த கனியின் மூலம் இச்சிப்பு உண்டாகி வஞ்சிக்கப்பட்டு கீழ்ப்படியாமையின் நிமித்தம் பாவத்தை செய்தபடியினால் ஏதேனை விட்டு விலகும்படி செய்தார். ஏன்? பாவம் அவர்களை மேற்கொண்டது. அறியாமையின் காலத்தில் இருந்தார்கள். பாவம் சாபத்தை உண்டுபண்ணியது.

இந்த பாவமானது தொடர்ந்து வந்தபடியினால் நோவாவின் காலத்தில் தேவன் பெரு வெள்ளத்தை உண்டாக்கினார். இதுவரை மக்கள் இப்படியொரு இயற்கையின் சீற்றத்தை காணவில்லை. பாவம் பெருகினபடியினால் பூமி சீர் கெட்டுப் போயிற்று, பூமி கொடுமையினால் நிறைந்தது. பூமியோடு அவர்களை அழித்துப் போட தேவன் சித்தம் கொண்டார்.

(ஆதியாகமம் 7:11) "நோவாவுக்கு அறுநூறு வயதாகும் போது இரண்டாம் மாதம் 17ம் திகதியாகிய அந்நாளிலே, மகா ஆழத்தின் ஊற்றுக்கண்கள் பிளந்தன. வானத்தின் மதகுகளும் திறவுண்டன. மேகக் கூட்டங்கள் ஈரலிப்பாக காணப்படும். நைட்ரஜின் வாயுக்கள் குறைவாக காணப்படும். 200km மேல் செல்லும் போது காற்று மண்டலம் அதிகமாயிருக்கும். முதல் வானத்தின் காரியங்கள் இப்படியிருக்கும். பெரு வெள்ளத்தால் நோவாவின் காலத்தில் பூமி அழிந்தது. நோவாவின் குடும்பம் மாத்திரம் காக்கப்பட்டார்கள் அது ஞானஸ்நானத்திற்கு ஒப்பனையாக இருக்கிறது."

1. ஆதாம் ஏவாள் செய்து கொண்டது ஒருவித பாவம்.
   (ஆதியாகமம் 6:1-6)
2. பூமியின் மேல் மனுஷர் பெருகத் தொடங்கினார்கள்...

அவர்களுக்கு குமாரத்திகள் பிறந்த போது தேவ குமாரர் மனுஷ குமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்கள் என்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்கு பெண்களைத் தெரிந்து கொண்டார்கள். என் ஆவி மனுஷரோடு போராடுவதில்லை. மனுஷருடைய அக்கிரமம் பூமியெங்கும் பரவி, பெருகியது. மனுஷனுடைய நினைவுகள் எல்லாம் பொல்லாததே. என்று பூமியில் மனுஷனை உண்டாக்கினதற்கு கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்.

ஆனால் நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்த படியினால் அவனும் அவன் மனைவி, மகன்கள், மருமக்கள் என்ற நோவாவின் குடும்பத்தினர் காப்பாற்றப்பட்டார்கள்.

பாவம் தொடாந்து பிடிக்கும் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும் நீதிமான் விழுந்தாலும் பிழைப்பான் என்று சொல்லப்படுகின்றது.

(ஏசாயா 11:6,7,8) "ஓனாய் ஆட்டுக்குட்டியுடன் தங்கும் புலி வெள்ளாட்டு குட்டியோடு படுத்துக் கொள்ளும். கன்றுக்குட்டியும் பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும் ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடி மேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக் கொள்ளும்: சிங்கம் மாட்டைப் போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பு வலையின் மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டு விரியன் புற்றிலே தன் கையை வைக்கும்.

என் பரிசுத்த பர்வதத்திலே தீங்கு செய்வாருமில்லை. கேடு செய்வாருமில்லை என்கிறார். ஆகவே நோவா திராட்சை இரசம் குடித்து போதையின் மயக்கத்திலே படுத்துக் கொண்டான். அது போதை உண்டாக்கும் என்பதை அவன் அப்போ அறியவில்லை பாவம் என்று நினைத்து அதை செய்யத் துணியவில்லை. பாவம் என்று அவன் அறியவுமில்லை அறியாத காலம் கிருபையாக மன்னிக்கப்படுகிறது. ஆனாலும் அவன் நீதிமானாக இருந்தான். அறியாத காலத்திலே கர்த்தரின் கண்களில் கிருபை கிடைத்தது. கர்த்தர் எம் பாவங்களை மன்னிக்கிறார். கிருபையின் காலம் எமக்கும் கிடைக்கட்டும். நீதிமானாயிருந்தால் நாமும் நிலைப்படுவோம்.

(ஆதியாகமம் 12:10) தேசத்சில் பஞ்சம் கொடியதாயிருந்த படியால், ஆபிரகாம் எகிப்து தேசத்திற்குப் போனான். எகிப்திற்கு பக்கம் வந்த போது, தன் மனைவி சாராளைப் பார்த்து, நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ, எகிப்தியர் உன்னைக் காணும் போது, இவள் என் மனைவி என்று சொல்லி, என்னைக் கொன்று போட பார்ப்பார்கள். உன்னை உயிரோடு வைப்பார்கள். ஆகவே உன் நிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கு, உன்னாலே என் உயிர் பிழைக்கும்படிக்கு, நீ உன்னை என் சகோதரி என்று சொல் என்றான். மிக அழகுள்ளவள் என்று எகிப்தியர் கண்டனர்.

பார்வோனுடைய பிரபுக்கள் அவளைக் கண்டு புகழ்ந்தார்கள். அப்பொழுது அவள் அரமனைக்கு கொண்டு போகப்பட்டாள். அவள் நிமித்தம் ராஜா தயைபாராட்டி ஆடு, மாடு, கழுதை, வேலைக்காரர், வேலைக்காரிகள், ஒட்டகங்கள்? கோளிக் கழுதைகள் கிடைக்கப் பெற்றன.

ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராளின் நிமித்தம் கர்த்தர் பார்வோனையும் அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார். அப்பொழுது பார்வோன் ஆபிரகாமை அழைத்து ஏன் இப்படிச் செய்தாய். இவள் உன் மனைவி என்று அறிவியாமல் போனதென்ன? இவள் உன் சகோதரி என்று சொல்ல வேண்டுவது என்ன? இதோ உன் மனைவி இவளை அழைத்துக்கொண்டு போ என்றான்.

ஆபிரகாம் கர்த்தருக்கு முன் நீதிமான். சன்மார்க்கன். ஒரு சிநேகிதனுடன் பேசுவது போல் தேவன் எப்போதும் பேசுகிறவர். ஆகவே அவர் ஆபிரகாமின் தேவன் என்று அறிக்கை செய்கிறார். ஏன் ஆபிரகாம் பார்வோனின் செயலுக்கு பயந்து, உயிருக்குப் பயந்து, தன் சகோதரி என்று கூறுகிறதையும் தேவன் கேட்டிருப்பார். பாவம் என்று ஆபிரகாம் அறியாதிருந்தான். அறியாத காலத்தில் இருந்தாலும் தேவன் நீதிமான் வரிசையில் அவனை நிறுத்தி அவனுடைய தேவன் என்று சொல்வதில் பெருமைப்பட்டிருப்பார். ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனும் என்று தன்னை அறிமுகம் செய்கிறார். அதன் பின் ஆண்டவர் ஆபிரகாமை எப்படி எல்லாம் நடத்தினார். எல்லா சந்தர்ப்பத்திலும் அவனுடனே கூடவே இருந்து விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்பட்டான் அல்லவா? நீதிமான் வரிசையில் தேவன் அவனை நிறுத்தினார்.

## இரண்டாம்படி- இரண்டாம் வானம்-

பறந்து அளக்க அளவு கோலில்லை. ஏனெனில் அவ்வளவாக அளவு பரந்து இருக்கும். சங்கீதம் யோபு புத்தகத்தில்

சொல்வது போல் ஜான் கோலை அளவு கோலாக வைத்தார். பறந்து விரித்தார். அங்கு ஏழு கிரகங்களும் அடக்கியுள்ளது. மார்ஸ், யூப்பிட்டர், நெப்டியூன், புளுட்டோ, நட்சத்திரங்கள், எண்ணுக்கு அடங்காதவைகளாக இருக்கின்றன. அல்பா சென்ராரி என்ற நட்சத்திரம் உலகுக்கு வர இருக்கும் இடம் இருந்து மாற ஒரு விநாடிக்கு 1,86000 மைல் வேகத்தில் மின் கடத்தி, ஒளி கடத்தி கடப்பது போல் கீழே வர 4½ ஆண்டுகள் பிடிக்குமாம். கதிர் வீச்சு அப்படியாக இருக்கும் என்கிறார்கள்.

சூரியன் உதயமாகி வெளியே கதிர் வீச 7,8 நிமிடங்கள் செல்லும். ஏனெனில் வானம் பரந்ததாக காணப்படுவதினாலாகும். சூரியனே, சந்திரனே, நட்சத்திரமே அவரைத் துதியுங்கள் என்று சங்கீதக்காரன் கூறுகிறான். உலகில் சமுத்திரம் தண்ணீர் 70%. பூமி 30% ஆக இருக்கிறது. எமது சரீரத்தில் இரத்தம் 90%. தண்ணீர் 65% ஆக தான் இருக்கிறது.

## (மூன்றாம் வானம்) (11கொரிந்தியர் 12:2,3)

மூன்றாம் வானம் வரை அந்த மனுஷன் எடுக்கப்பட்டான். அவன் சரீரத்தில் இருந்தானோ? சரீரத்திற்கு புறம்பே இருந்தானோ தெரியாது. அதை அறியேன். தேவன் அறிவார். அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு மனுஷர் பேசப்படாததுமான வாக்குக்கு எட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டான் என்று அறிந்திருக்கின்றேன்.

அருமையான வாசக நேயர்களே! தேவன் எமக்கு அநேக வாசஸ்தலங்களை வைத்துள்ளார். அவர் எமக்கு அவைகளை ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார். அவரே அதைக் கட்டிக் கொண்டு இருக்கிறார். அவரே கட்டிட நிபுணராக இருக்கிறார்.

(வெளிப்படுத்தல் 21:1,2,3) “அங்கு புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன் முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின: 1000 வருட அரசாட்சியின் போது எப்படி இருக்கும்? சமுத்திரமும் இருக்காது நிலப்பரப்பே அதிகமாகும்.

பயிர் செய்கை வளங்கள் அதிகமாகும். பஞ்சம் கிடையாது செழிப்பு உண்டாகும். புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம் தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன். அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. கர்த்தர் இந்த நாட்களில் உங்களை ஆயத்தம் செய்யும் மணவாட்டியாக பார்க்கிறார். அவர் வருகைக்கு ஆயத்தம் கொண்டவர்களாக இருக்கிறீர்களா?"

பெரும் சத்தத்தைக் கேட்டேன் என்கிறார். இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது. அவர்களிடத்தில் அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனாகிய யாக்கோபின் தேவன் உங்கள் தேவனுமாயிருப்பார். அதை அவர் அறிமுகம் செய்து கொள்கிறார். அங்கு கண்ணீர் இல்லை, மரணமுமில்லை, துக்கமுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள எல்லாம் ஒழிந்து போனது என்று விளம்பினது.

(சங்கீதம்103:19) "சிங்காசனத்தில் வீற்றிருந்தவர் இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். இவ்வசனங்கள் உண்மையும் சத்தியமுள்ளவைகளுமே. ஆதியும் அந்தமும், அல்பாவும் ஒமேகாவுமாக இருக்கிற நான் தாகமாயிருக்கிறவனுக்கு ஜீவ தண்ணீரை இலவசமாய் கொடுப்பேன் என்றார். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்வான். நான் அவன் தேவனாயிருப்பேன். அவன் என் குமாரனாய் இருப்பான் என்றார்."

(எசேக்கியேல் 41:1) "தூதன் வானத்தை அளந்தான். பணிவிடைகளை பணிவிடை தூதர்கள் செய்கிறார்கள் அழைப்பைக் கொடுக்கிறார். அழைத்துக் கொண்டு வர வேண்டியவர்களை பிதாவின் வாசஸ்தலத்துக்கு அழைத்து வருகிறார்கள். கட்டிடம் கட்டும் நிபுணராக இயேசு நிற்கிறார். ஒவ்வொரு தனிப்பட்ட

மனிதனுக்கும் தனிப்பட்ட வீட்டைக் கட்டுகிறார். ஆண்டவருக்கு மேசன் என்ஜினியர் ஆக்கிடெக்கர் போன்றவர்கள் அவசியமில்லை. அவர் ஒருவராய் வானங்களை விரித்தார்."

(யோவான் 14:2,3) "உங்களுக்கு பிதாவின் சந்நிதானத்திலே அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அங்கு அமைதியாகவும், ஆறுதலாகவும், சந்தோஷமாகவும், களிப்பாகவும் இருக்கலாம்."

(ஏசாயா 32:18) "என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்."

"(சங்கீதம் 68:3,5,6) நீதிமான்கள் தேவனுக்கு முன் மகிழ்ந்து களிகூறுவார்கள் சந்தோஷமடைவார்கள்."

ஆபிரகாம் பரதீசியில் இருக்கிறார். லாசரு என்னும் தரித்திரன் இறந்து ஆபிரகாமின் மடியிலே படுத்துக் கொண்டான்.

(லூக்கா 23:43) "இன்றைக்கு நீ பரதீசியிலிருப்பாய் என்றார்."

(வெளிப்படுத்தல் 2:7) "”ஜெயங்கொள்ளுகிறவனுக்கு பரதீசின் மத்தியிலிருக்கும் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்றார்."

ஏதேனின் மத்தியிலுள்ள ஜீவ விருட்சத்தின் கனியைப்புசிக்க வேண்டாம் என்ற சட்டத்தை ஏவாள் ஏற்றுக்கொள்ளாததின் நிமித்தம் சாபமும், பாவமும் பெருகியது.

(வெளிப்படுத்தல் 21:1-3) "சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவர் பழையவைகள் ஒழிந்தன எல்லாம் புதிதாக்கப்படுகிறது என்று கூறினார்."

"புதியவானம் புதிய பூமி உண்டாகும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது இயேசுவின் வருகை முந்தினால் நலமாயிருக்கும்."

ஆமென்!!!

## உடனிருக்கிற இம்மானுவேல்:-

(மத்தேயு 1:23) "இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள். இம்மானுவேல் என்றால் தேவன் நம்மோடிருக்கிறார். என்று அர்த்தமாம்."

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே, யோசுவா, நியாயாதிபதிகளுடன், ராஜாக்களுடன் விசுவாசிகளான சில பக்தர்களுடன், யோபுவுடன், பவுலுடன், அப்போஸ்தலருடன் தேவன் கூடவே இருந்தார். மோசே, யோசுவாவின் மூலம் பெரிய பெரிய அதிசயங்களையும், அற்புதங்களையும் நடத்திய மகா தேவன் அவர்களுடன்கூட இருந்தார். சாதனைகளைச் செய்து முடித்தார்கள்.

இம்மானுவேலராக நம்மோடுகூட இருக்கிறார். இது எமக்குக் கிடைத்த மகா பெரிய பாக்கியம். சகல நேரங்களிலும் அவரே எம்மோடுகூட இருக்கிறார். மனிதர்கள் எம்மை விட்டுப் போகலாம், தூரப்போகலாம். பிரிந்து போகலாம், தள்ளிப்போகலாம், ஆனால் இம்மானுவேலரோ எம்மை விட்டு விலகுவதுமில்லை, எம்மைக் கைவிடுவதுமில்லை என்ற விசுவாசத்துடன் நாம் இருக்க வேண்டும். என்ன தடைகள், தடைக்கற்கள் இருந்தாலும் நம்மோடு இருக்கும் தேவன் அந்தத் தடைகளை முறித்து, அவரே முன் செல்வார்.

(மீகா 2:13) "தடைகளை நீக்கிப் போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார்; அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்து கடந்துபோவார்கள்; அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போகிறார். கர்த்தர் அவர்கள் முன் நடந்து போவார்."

(அப்போஸ்தலர் 7:10) " தேவனிடமிருக்கும் வரையும் யோசேப்புடன் தேவன் கூடவே இருந்தார். அடிமை என்ற யோசேப்பு

போர்த்திபாரின் அரமனைக்குள் அதிகாரியானான். யோசேப்பின் நிமித்தம் போர்த்திபாரின் வீடு ஆசீர்வதிக்கப்பட்டது. காரணம்! யோசேப்போடுகூட கர்த்தர் இருந்தார். வனாந்திரத்தின் குழிக்கிடங்கில் அனுமதிக்கப்பட தீர்மானம் வைத்த கர்த்தர் உளையான சேற்றிலிருந்து தூக்கினார். மீண்டும் அவனுடைய வீட்டுக்குள் அவனுக்குச் சதி வந்தது. கர்த்தருக்கு விரோதமான பாவம் செய்வேனோ என்று கர்த்தருக்குப் பயந்தவனாக இருந்தான். சிறைக்கிடங்கே பரிசாகக் கிடைத்தது. ஆனால் கர்த்தர் அவனோடு கூடவே இருந்து ஞானம், அறிவு, புத்தி இப்படி தம் கிருபைகளால் இடைக்கட்டினார். (ஆதியாகமம் 50:20) மீண்டும் பார்வோனின் அரமனைக்கும், எகிப்து தேசத்திற்கும் அதிகாரியாகி இரண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றவனாய் இருந்தான். கர்த்தர் அவனுடன் கூடவே இருந்தமையினால் மெய்யான ஆசீர்வாதத்தைப் பெற்றான்.

ஆமென்!!!

# ஆளுகிற ராஜா

(மத்தேயு 2:2) “ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரைப் பணிந்துகொள்ள வந்தோம் என்றார்கள்.”

சர்வத்தையும் ஆளும் அதிகாரம் இயேசு என்னும் யூதருடைய ராஜாவுக்கு கொடுக்கப்பட்டது. இப்பூமியின் ராஜாக்கள் யுத்தம் செய்து தேசங்களைப் பிடித்தார்கள். தம்முடைய அதிகாரங்களை செலுத்தி, தாங்களே ராஜாக்கள் என்று ஆளுகை செய்தவர்களும் உண்டு.

ஆனால் நம்முடைய ராஜாவுக்கு வானத்திலும் பூமியிலும் ஆளுகை உண்டு. நம் ராஜா பாவிகளை மீட்கும்முகமாக பூலோகத்திற்கு ஏழையின் கோலமாய் அவதரித்தார். சிங்காசனத்திலும் வானாதி வானங்களிலும் வீற்றிருக்கக் கூடியவர் நம்முடைய ராஜா ஒருவரே. மற்ற ராஜாக்கள் எல்லோரும் ஒரு நாள் பூமிக்கு இரையாக வேண்டியவர்கள். அவர்கள் வாழ்வு அநித்தியமானது. நம் ராஜாவே வானத்திற்கும் பூமிக்கும் சொந்தக்காரர்.

(1 தீமோத்தேயு 6:15) “அதிகாரம், ஆட்சிப்பீடம் அவருடையவைகள் நித்தியமானவைகள்.”

ஆற்றல் பெற்ற ராஜாவின் கீழ் ஆளுகைக்குட்பட்டவராயிருந்தால் அழவேண்டிய அவசியமில்லை, அலறவேண்டிய அவசியமில்லை, துக்கம், துயரம் கொள்ள வேண்டியதில்லை, கதறவோ, பதறவோ வேண்டிய அவசியமில்லை. இயேசு ராஜாவை தேவனாக பெற்றிருக்கும் ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள்.

எந்தக் கட்டுகளில் கட்டப்பட்டிருந்தாலும் பிசாசின் கட்டோ? சூனியத்தின் கட்டோ? எப்படியான கட்டாயிருந்தாலும் ராஜாவின் வல்லமையால், அதிகாரத்தால் விடுதலை பெற முடியும்.

ஆமென்!!!

# விடுவிக்கிற இரட்சகர்.

(லூக்கா 2:11) "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்."

எகிப்தில் 430 ஆண்டுகள் அடிமைத்தனத்தில் இருந்த இஸ்ரவேலரை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்து கொண்டார். அவரால் செய்ய முடியாத அதிசயமான காரியம் ஒன்று உண்டோ? இல்லவே இல்லை.

அருமையானவர்களே! நீங்கள் என்னென்ன அடிமைத்தனத்தில் இருக்கிறீர்கள். வறுமை என்னும் அடிமைத்தனமா? போதை என்னும் அடிமைத்தனமா? தீய பழக்கவழக்கத்தின் அடிமைத்தனமா? எந்த அடிமைத்தனமானாலும் அவைகளை மாற்ற வல்ல இரட்சிப்பு இயேசுவிடம் உண்டு. அவர் இரட்சிக்கக்கூடாதபடிக்கு அவர் கை குறுகிப்போகவில்லை.

மாறாத பிரச்சனைகளோடு போராடிக் கொண்டு இருக்கிறீர்களா? தவறான மனிதன், கொடூரமான மனிதன் கையில் அகப்பட்டு திண்டாடிக் கொண்டிருக்கிறீர்களா? பல வருட நோயினால் திண்டாடுகிறீர்களா? பாவத்தினால் உண்டாகிய நோய்க்கு மருத்துவம் இல்லாதபடி அவதிப்படுகிறீர்களா? பாவத்தை மேற்கொள்ளும் பூரண பெலனை தந்து உன்னை இரட்சிக்க வல்லவர் ஒருவர் இருக்கிறார் என்பதை மறந்து போகாதே. சொல்லப்பட்ட காரணங்களால் விடுதலைபெற முடியாதபடி இருக்கிற உங்களுக்கு இதோ இரட்சகராகிய இயேசு இன்று உங்கள் உள்ளத்தில் பிறந்திருக்கிறார். (நீதிமொழிகள் 24:15) எந்த இடத்தில் விடுதலைக்காகக் காத்துக் கொண்டு இருக்கிறீர்களோ? உங்களுக்கு விடுதலை தருவதற்கு காத்து, ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்.

எத்தனையோ வருடம் போராடியும் பிரச்சனை தீரவில்லையே என்ற ஏக்கமா? விடுதலையை காணமுடியவில்லையே என்ற கவலையா? வேண்டாம், வேண்டாம். உன் இதய வாசற்படியை இரட்சகர் தட்டுகிறார். அவருக்கு இடம் கொடுப்பாயாகில் விடுதலை உன் பக்கமே!

எவராலும் விடுதலை தரமுடியாத அற்புத காரியங்களை செய்கிறவர் நொடிப்பொழுதில் விடுதலை தருவார். உங்களுடன் நிரந்தரமாக இருப்பவர் இம்மானுவேலராக கூடவே இருந்து வழிநடத்துவார். நித்தியமாக அரசாளும் ராஜாவாக ஆளுகை செய்கிறவராக உன்னை ஆளுகை செய்வார்!

ஆமென்!!!

This Book clearly describes the fluctuations in the lives of every person born in this world, but when he comes close to the living God creator of this world he can experience how the grace of God acts over him. The Author of this Book is Evang:Prof:Sis:M.R.Rajendram, and it contains all the incidents which had taken place in the life of Sister during her 28yrs of ministry work for the Lord, and in her personal life all the trials and challenges faced by Sister. Throughout Sister's life the living God Jesus had guided her in prosperity and in adversity and still he is guiding and guarding her , and will continue in the future too.

This Book is written revealing the divine truths through the historical characters and personalities stated in the Bible, stressing the point that in your life you too may face prosperity or adversity but in any situation one has to Trust Jesus.

In 28 yrs of the Ministry work of Evang: Prof:Sis: M.R.Rajendram the Gospel had been preached to many lakhs of people, and the power of the living God Jesus had been proved through wonders and miracles. Through the spiritual Books written by Sister, and the divine messages telecasted and brodcasted through the mass media had reformed the sinful lives of many thousands of people. Therefore you too can read this book and receive the divine Blessings of God.

Contact our Ministry for more details, for our lateat issues of Messages in Audio Video Cassettes, ACD's VCD's MP3 and Books of Brother and Sis. Rajendram



# EVAN. PROF. MARGRET RAJENDRAM

24 HOUR PRAYER Call 011-2522608


**Jesus Lives**
**Evangelical Ministry International**
401, Aluthmawatha Rd, Colombo -15
Ph.2522608, Fax 2525695.
Email: jesuslives@lanka.ccom.lk